www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

K. Jude

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර්

டிச.13–19,1998

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 287



# வான் கரும்புலிகள் வன்னியில் ஒத்திகை

## பரபரப்பான தகவல்கள்



## நில் கவனி முன்னேறு

## முரளிக்கு மிரட்டல்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நுனிப்புல் மேய்ந்து...

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

இலங்கைத்தீவின்
இனப் பிரச்சனை இன்று
சர்வதேச முக்கியத்துவம்
பெற்று வருகிறது!
சர்வதேச அரங்கில்
இலங்கைப் பிரச்சனை
தொடர்பாக
பல்வேறு விதமான
பார்வைகள் இருக்கலாம்!
சில தரப்புகள்
இலங்கை அரசுக்கு
சாதகமான போக்கைக்
கொண்டிருக்கின்றன!
வேறு சில தரப்புகள்
இலங்கைத் தமிழர்கள்மீது
அனுதாபமான போக்கைக்
கொண்டுள்ளன!
பார்வைகளும்,
நிலைப்பாடுகளும்
எவ்வாறு இருப்பினும்
இனப்பிரச்சனை
இலங்கையின் எல்லைகளைத்
தாண்டிச் சென்று
சர்வதேச பிரச்சனைகளில்
ஒன்றாகிவிட்டது
என்பது வெள்ளிடைமலை!
சமீபத்தில் ஐக்கிய நாடுகள்
அபிவிருத்தித் திட்ட அறிக்கை
ஒன்று வெளியாகியுள்ளது!
இலங்கை இனப்பிரச்சனை
தொடர்பாக அதில்
குறிப்பிடப்பட்டுள்ளது.
அறிக்கையில் கூறப்பட்டுள்ள
கருத்துக்கள்–இங்குள்ள
இனப்பிரச்சனை தொடர்பாக
ஆழ்ந்த ஆய்வின்றி
வெளியிடப்பட்டவையாகவே
காணப்படுகின்றன!
ஆயினும், ஐக்கியநாடுகள்
சபை அறிக்கைகளில்
குறிப்பிட்டேயாகவேண்டிய
பிரச்சனைகளில் ஒன்றாக
நம் பிரச்சனை
முக்கியத்துவம் பெற்றுள்ளது!
அந்த அறிக்கையில்
'பிரிவினைக்கான மோதல்'
என்று யுத்தம் பற்றி
விபரிக்கப்பட்டுளளது.
அரசின் தீர்வுப் பொதி
இனப்பிரச்சனைத் தீர்வுக்கான
அடிப்படையாக அமையலாம்
என்றும் தெரிவிக்கப்பட்டுளளது!
அரசியல் தீர்வொன்றை
முன்வைக்காமல்
அரசு இழுத்தடித்து
இராணுவத்தீர்வில்
முனைப்புக் காட்டுவதை
அறிக்கை சுட்டிக்காட்டத்
தவறியிருக்கிறது!
இராணுவத்தீர்வு முனைப்பில்
தமிழ் பேசும் குடிமக்கள்மீது
மேற்கொள்ளப்படும்
மனித உரிமை மீறல்கள்
பற்றியும் அறிக்கை
மௌனம் சாதிக்கிறது!
'விடுதலைப் புலிகள்
பிடிவாதமான போக்குடையோர்'
என்று அறிக்கையில்
கூறப்பட்டிருக்கிறது!
அதேசமயம்,
பிடிவாதமேயில்லாத–
அரசுக்குப் பிடித்தமான
தமிழ்க் கட்சிகளைக்கூட
தீர்வுப் பொதி
திருப்தி செய்யவில்லை
என்பதுகூட
அறிக்கை தயாரித்தவர்களுக்கு
தெரியவில்லையே!
ஆயினும், பொதிதான்
நற தீர்வு என்று
அறிக்கை
பாராட்டவில்லை என்பது
கவனிக்கத்தக்கது!
தீர்வுக்கான
அடிப்படையாக இருக்கலாம்
என்று மட்டுமே
அறிக்கை கூறியிருக்கிறது!
ஆனால், அதற்குரிய
தகுதியும் பொதிக்கு
இல்லாமல் போய்விட்டது!
வடக்கு–கிழக்கை
பலதுண்டுகளாகக் கூறுபோடும்
பொதி– எப்படி
தீர்வுக்கான அடிப்படையாக
இருக்க இயலும்?
எனவே, ஐக்கிய நாடுகள்
அபிவிருத்தித்திட்ட அறிக்கையில்
நுனிப்புல் மேயப்பட்டுள்ளது!
ஆழ்ந்த பார்வையைக் காணவில்லை!
ஐ.நா.சபை
கூறுவதெல்லாம் நீதியாகாது!
ஈராக் விவகாரத்தில்
ஐ.நாவின் ஒருபக்க சார்பு
போக்கு யாவரும் அறிந்ததே!
ஐ.நா.சபை
அபிவிருத்தித் திட்ட அறிக்கையை
குறை கூறி புண்ணியமில்லை!
பொதியை தமிழ்க் கட்சிகள்
ஏற்றுக்கொண்டுள்ளதாக
ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச்
செல்லும் போதெல்லாம்
கூறிக்கொள்கிறார்!
தாம் ஏற்கவில்லையென
சர்வதேச சமூகம் அறியக்
கூறுவதற்கு
தமிழ்க் கட்சிகள் முன்வரவில்லை!
நம் விரல்களே
நம் கண்களைக் குத்துகையில்
யார் மீதோ வருந்தி
யாது பலன்?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## இந்து சமயமும் சமத்துவமும்

இந்து மதத் தத்துவக் கதைகளின்படி, ஆசா பாசங்களை முற்றாகத் துறந்தவர்களுக்கு மட்டுமே இறைவன் அருள் கிட்டுமென்பதில்லை. சுந்தரமூர்த்தி நாயனார் முதல் அருணகிரிநாதர் வரையானவர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை நோக்கினாலும், சேக்கிழார் எழுதிய பெரிய புராணக் கதைகளை நோக்கினாலும், அங்கு சமத்துவ-சமரசத் தத்துவங்களே நிரம்பி இருப்பதைக் காணலாம். பெரிய புராணத்து அறுபத்து மூன்று நாயன்மார்களில் நாடாண்ட மன்னரும் உண்டு துணிவெளுக்கும் அரிஜனப் பிறவியும் உண்டு.

சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்குமே இறைவனின் அன்பு உண்டென்பதை சேக்கிழார் பெருமான் அற்புதமாகத் தந்திருக்கின்றார். அக் கதைகளை மெய்யுருகி, இரசித்துக் கேட்கின்றவர்களில் எத்தனை பேர் அத்தத்துவப்படி வாழ முற்படுகின்றனர் என்பது கேள்விக்குறியே. சமய நூல்களையும், கிரியைகளையும் நன்கு படித்துப் பாராயணம் செய்கின்ற–ஆனால் நாளாந்த வாழ்வில் அவற்றைக் கைகொள்ளாத உயர் குலத்தவர் ஒருவரை விட, இந்து சமய தத்துவங்களை முழுமையறி யாத தாழ்ந்த குலத்தில் தோன்றிய ஒருவர் சிறந்த, நேரிய கருத்துக்களை தம் வாழ்வில் கைக் கொண்டு உயர்ந்தவராவதை நாம் காணலாம்.

தொகுப்பு-ஸ்ரீப்ரியா சிவபாலன் -காரைதீவு

## மஹர் கொடுத்து மணம் முடியுங்கள்

இன்று அனேக பருவப் பெண்கள் சீதனக் கொடுமையால் திருமணமின்றி வாழ்கின்றனர். பெண்ணொருத்தியை திருமணம் செய்வதற்காக ஆண் சீதனம் கேட்கக் கூடாது.

அல்லாஹ்வின் அருள் மறையில் இல்லாததொன்றை ஏன் நீங்கள் நிபந்தனைகளாக ஏற்படுத்த வேண்டும்?

கணவன் தன் மனைவிக்கு 'மஹர்' கொடுத்து மணமுடிக்க வேண்டும். அதுவே அல்லாஹ் விதித்திருக்கின்ற சட்டமுமாகும்.

கணவனின் கருவை மனைவி தன் வயிற்றில் சுமக்கிறாள் என்பதற்கு பகரமாக 'மஹர்' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கணவனுமா கருச் சுமந்து பிள்ளையைப் பிரசவிக்கின்றான்? சீதனம் என்ற பெயரில் 'மஹர்' தொகையேன் இவர்களுக்கு ஆண்களே விழித்தெழுந்து மங்கையருக்கு 'மஹர் கொடுத்து மணமுடியுங்கள். அதனைத்தான் அல்லாஹ் விரும்புகின்றான்.

எம்.சி.கலீல் – கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.284

### பரிசுக்குரிய கவிதை

### இருண்ட எதிர்காலம்

**செடி கொடி என்பார்!**
**வந்தேறு குடி என்பார்;**
**இருண்ட உம் எதிர் காலத்தை!**
**யார் மீண்டும் ஒளிரச் செய்வார்?**

என்.கேசவன்– வத்தளை.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### நாளை...?

'மரம் சுற்றிப்படரும்?
கொடி'களாம்–அன்று
'வந்தேறு குடி'களாம்–இன்று,
இன்னும் இவர்களுக்கு–
எத்தனை பெயர்களோ–நாளை?

'இதயநிலா'– ஆரையம்பதி-03.

### அகதிகள்

ஈருடல் சங்கமத்தில்
வந்துதித்தோம்!
இவ்வுலகில்
ஆகிவிட்டோம்
அகதிகளாய்...
வெஞ்சமரின்
கொடும்பிடியால்!

எஸ்.எம். நவரட்ணம்–
அக்கரப்பத்தனை.

### காலம் காத்திடுமா?

தரையினில் வாடும் தளிர்களிற்கு
தண்ணீர் ஊற்ற மறந்தாளோ?
தவித்திடும் பாலகர் பசியினைத்
தணித்திட பாவை வருவாளோ?
பார்த்து கண்கள் தூங்கிடவே
பகலும் தணிந்து போகிறதே!
கண்மணி நோக காத்திடும் பாலகர்
செம்மணிச் சாவு அறிவாரோ?

க.றஞ்ஜனா– கொழும்பு-15.

### பட்டினிப் பிஞ்சுகள்

இராணுவச் செலவீனம்
-நாளும் உயரும்;
இராட்சதப் போரிங்கு
-மேலுந் தொடரும்
குட்டிச் சுவராகும்;
குட்டித் தீவின்
பட்டினிப் பிஞ்சுகளின்
பரிதாபக் கோலம்!

மு.முஹைஸ்– பாலையூற்று.

### யாருக்கு...?

சகலரும் இங்கு
சம்பந்தர்கள் தான்...
உமையோ பாவம்...!
யாருக்கு பால் கொடுப்பது?

இ.புஜந்தரன்– களுதாவளை-1,
களுவாஞ்சிக்குடி.

### பசி....!

'எங்களம்மா பறிக்கும் கொழுந்து
இங்கு நாட்டைப் போசிக்கிறது;
எங்களையல்ல!'

அ.சந்தியாகோ– அசோகா வித்தியாலயம், கண்டி.

## கவிதைப் போட்டி இல.287



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.12.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.287
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### போதி தந்த புத்தமே!

எம்மை மிதிக்குமிந்த
இழி நிலையை யார் தடுப்பார்?
போரால் விளைந்த கதி
போர்வைக்கும் வழியில்லை!
பாரில் நாம் வளர
பயனுள்ள வகை செய்வீர்.

நிஜந்திக்கா– கனகசிங்கம்– கல்லடி,
மட்டக்களப்பு.

### நாளைய நாளில்...?!

சோமாலியாவாய்ப்–
போகுமோ
எம்பாடு...?!
கடுகாடாய்
ஆகுமோ
எம் ஊரு...?!"

கோட்டைமுனை 'முத்துமணி'
வாஹிட் ஏ.குத்தூஸ்–
அக்குறணை.

### புரட்டிப்பார்...!

ஓ... வடகிழக்கு வாரிசுகளோ...!
இவர்கள்....
எந்த நாட்டுக்கு
சொந்தமானவர்கள்...?

ஆர்.பி.லக்ஷான்– கொட்டாஞ்சேனை.

### சொந்தம்!

உனக்கு இந்த
நாடே சொந்தமில்லை!
எப்படி...
மண் சொந்தமாகும்?

கயல் வண்ணன்– வவுனியா.

### நெஞ்சம் கனக்குதய்யா!

அன்பின் முரசே!
பிஞ்சு நெஞ்சங்களை
கானகத்தில் காண்கையிலே
நெஞ்சம் கனக்குதய்யா
நேர்கவிதை வரவில்லை!

சரண்யா யோகேந்திரன்–
ஆரையம்பதி-02.

### கூண்டுக்கிளிகள்!

உறக்கமும் விழிப்புமாய்
உருக்குலைந்து போக
பிறப்பெடுத்த பிஞ்சுகள் நாம்!
குறிப்பெடுத்துக்
கொள்ளுங்கள்...!
பசிக்கும் கொடும் பகைக்கும்
பலியாகும் பறவைகளென!...

செ.ஞானராசா–
சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

# வாசக(ர்)சாலை

## பொறாமையும் உரசலும்



முரசே!

முரசை திட்டுவதையே இங்கு வெளியாகும் ஒரு பத்திரிகை தன் பிரதான பணியாகக் கொண்டிருக்கிறது. முரசுடன் இடைக்கிடையே உரசாவிட்டால் அதற்கு திருப்தியில்லை. முரசின் கருத்துக்களும், இன்றைய வெளிப்பாடுகளும் வகிக்கும் பங்கை யாரும் மறுக்கவியலாது. ஆனாலும் தமது பத்திரிகை விற்பனையாகாமல் போகிறதே என்ற புகைச்சலில் இருப்போருக்கு 'முரசு' எதைச் செய்தாலும் எரிச்சலே. ஏதோ தாம் மட்டும் இலாபம் இல்லாமல், ஊதியம் இல்லாமல் பொதுச்சேவை செய்பவர்கள் போல அடுத்தவர்மீது சேறு பூசுகிறார்கள். எப் படியோ 'முரசு' பற்றி எப்போதுமே நினைத்துக் கொண்டிருக்கிறார்களே! அதற்கு நன்றி.

த.விஜயகுமார், கனடா.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர்பதிவு செய்யப்படமுடிந்தவர்கள்:**

* எம்.பாருக், கந்தளாய்.
* கே.நிமலன், ஜப்பான்.
* ஆர்.தளபாலசிங்கம், அவுஸ்திரேலியா.
* வா.யோகரத்னம், நோர்வே.
* மு.குகன், அவுஸ்திரேலியா.
* எல்ப்.திருலோகன், இலண்டன்.
* கு.சிவலிங்கம், டோகா-கட்டார்.
* சி.தர்மராஜ், கனடா.
* ஜி.ஜெயந்திரன், கனடா.
* எம்.எல்.எம்.ராசீன், மாத்தளை.
* எம்.தம்பப்பா, (சோதிடர்) வாழைச்சேனை.
* ஜி.சிங்கள, குறிஞ்சாமுனை.
* க.மதி, மல்லாவி.
* பெ.முரளி, அடாவத்தை.
* அ.திவ்வியதேவி, குருமன்வெளி.
* எம்.முகேஷ், ஜெர்மன்.
* பா.தங்கேஸ்வரன், சுவீடன்.
* ஜெயகிலியா, யாழ்ப்பாணம்.
* எம்.இர்ஹாம், காத்தான்குடி.
* து.ரவிகரன், முல்லைத்தீவு.
* மு.நித்தியன், ஃபிரான்ஸ்.
* பொ.கமலநாதன், கனடா.
* ஏ.தயாசேகர், அமெரிக்கா.
* வி.ரகுராம், கம்போடியா.
* எம்.குரு, ஜெர்மன்.
* பூ.தம்பிராசா, டென்மார்க்.
* ஜெ.கனகேந்திரன், சுவிற்சர்லாந்து.

## செல்வா சொன்னதை...

முரசே!

வேலுப்பிள்ளை செல்வநாயகம், வேலுப்பிள்ளை பிரபாகரன் பற்றிய அரசியல் அலசல் பிரமாதம். "எமது பாதை கரடு முரடானது. கல்லும் முள்ளும் நிறைந்தது" என்று தந்தை செல்வா அவர்கள் கூறியிருந்தார். இன்றைய தமிழ்க் கட்சிகள் பஞ்சு மெத்தைகளில் கனவு காண்பதால் போராட்டத்தை கொச்சைப்படுத்துகின்றன. இவர்கள் போராடினால் இவர்களது சுயநலம் ஈடாட்டம் கண்டுவிடும் அல்லவா? ஆனால் வேலுப்பிள்ளை பிரபாகரன் தந்தை செல்வா சொன்னதை மறக்கவில்லை. 'முரசு' அடிக்கடி சொல்வதுபோல ஆயுதம் ஏந்தாமல் கூட இன உரிமைக்கு பங்களிக்கலாம். இதனை தமிழ்க் கட்சிகள் உணருமா?

சி.நவலோகன், அம்பாறை.

## கூட்டணிக்கு கேள்வி

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்று கூறப்பயந்து, மூன்றாம் நபர் உதவி என்று சம்பந்தர் சப்பைக் கட்டு கட்டுகிறார். அவரது பேட்டி ரூபவாஹினியில் வெளியானது. அதே நாள் பத்திரிகையில் கூட்டணி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பிரபாகரன் கோருவதை வரவேற்பதாகச் செய்தி வந்தது. கூட்டணி இதற்கு பதில் கூறுமா? மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமா? மூன்றாம் நபர் உதவியா? எது தமது நிலைப்பாடு என்பதை முன்வைக்கட்டும்? அல்லது இக் கேள்வியை எழுப்ப 'முரசு இடமளிப்பதால், கேள்விக்கு பதில் கூறாமல் முரசைத் திட்டித்தீர்க்குமா?

பி.குமரேசன், கொழும்பு-13.

## அரசின் வாய்கள்

அன்பின் முரசுக்கு,

தமிழ்க் கட்சிகள் எப்போது அரசின் வாய்களாக மாறின? பயணிகள் கப்பல் பிரச்சனை, செம்மணி விவகாரம், 'பூர்வீகக் குடிகளல்ல' என்ற பேச்சு போன்ற சகல பிரச்சனைகளிலும் அரசோ, ஜனாதிபதியோ வாயே திறக்கவில்லை. இக் கட்சிகள் மட்டும் தங்களிடம் அதை இதைக் கூறியதாக பத்திரிகைகளுக்கு டமாரம் அடித்தன. இது தேவைதானா?

பா.கோமகன், மல்லிகைத்தீவு.

## ஹெலி குழப்பம்

எக்ஸ்ரேரிப்போர்ட் 'ஹெலி குழப்பங்கள்' பற்றி விளக்கியது. அது உண்மையாகிவிட்டது. மாவீரர் தினத்தன்று ஹெலி ஒன்று தாழப் பறந்தபோது எல்லோருக்கும் சந்தேகம். பின்னர்தான் அது அரசின் ஹெலி என்பது தெரிந்தது. நாரதர் கூறியதுபோல குழப்பங்கள் தொடரும்தான்!

எம்.நயீம், மட்டக்களப்பு.

## இயத்தால் வெதும்பி...

25/10/98ல் 'முரசில்' நீ வடித்த 'செம்மணி சிரிக்கிறது' சிறுகதை படித்து இதயத்தால் வெதும்பிக் கண்ணீர் சிந்துகிறேனடா– ஒரு மாமா! காலம், மதம் சாதி எல்லாம் கடந்தும்– ஏன் நாடும் கடந்து தமிழ் என்ற உயிர் உணர்வோடு உன்போன்ற தமிழ் பாசவலையுடன் பின்னிய மருமக்களைக் கொண்ட உன் வேலுப்பிள்ளை மாமா வாழ்த்துகிறேன் 'வளர்க' உன் மொழிப் பற்று!

வை.வேலுப்பிள்ளை, கனடா.

## அறிவித்தல்

காகிதத் தீர்வை முதல், போக்குவரத்து உட்பட உற்பத்தி செலவுகள் அதிகமாகிவிட்டன. எம் கட்டுப்பாட்டை மீறி சென்றுகொண்டிருக்கின்றன. எனவே முரசின் விலையை ஒரு ரூபாவால் மட்டும் உயர்த்த வேண்டிய தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வாசக நெஞ்சங்கள் இதனை புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மற்றும், முரசுக்கான கதை, கவிதை போன்றவற்றை தொலைநகல் மூலமோ, பதிவு தபாலிலோ அனுப்பி வைக்கவேண்டாம் என்று படைப்பாளிகளை கேட்டுக்கொள்கிறோம். தபால் பெட்டி இலக்கத்துக்கே அனுப்பிவைக்கவும்.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல்:– 074-513266



படிப்பகம்

www.padippakam.com

# வானூர்திகளில் புலிகள் பயிற்சி!

# கரும்புலித் தாக்குதலுக்கும் ஒத்திகை!

## இலக்கு—வாகனத்தொடரா? பொதுக்கூட்டங்களா?

விடுதலைப் புலிகள் தமது வான்புலிகள் படையணிக்கு பயிற்சி கொடுத்து வருகின்றனர்.

வானூர்திகளை செலுத்துவதில் திறமையும், பயிற்சியும் பெற்ற புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலர் வெளிநாட்டிலிருந்து கப்பல் மூலமாக வன்னிக்குச் சென்றுள்ளனர்.

வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்காக புலிகள் அமைப்பினரே இவர்களை முன்னர் அனுப்பிவைத்தனர்.

தற்போது மேலும் பல உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிப்பதில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

புலிகளின் வானூர்திகள் அடிக்கடி வான்பரப்பில் காணப்பட்டதாக சமீபத்தில் செய்திகள் வெளியாகின அல்லவா? வானூர்திகள் செலுத்தும் பயிற்சியே வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### வான் கரும்புலிகள்

கடற் கரும்புலிகள் போன்று வான் கரும்புலியணியும் உருவாக்கப்பட்டுள்ளது.

குண்டுகளைக் கட்டிக்கொண்டு தரையில் உள்ள இலக்குகளை நோக்கி பாய்வதற்கான பயிற்சிகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹெலியில் இருந்து நூலேணிமூலம் தரைக்குத் தாவும் பயிற்சிகளும், கயிறு ஒன்றில் தொங்கியபடியே தரைக்கு இறங்கும் பயிற்சிகளிலும் வான் புலிகளும் வான் கரும்புலிகளும் ஈடுபட்டுள்ளனராம்.

பாரசூட் மூலம் குதிக்கக்கூடிய வசதிகள் இங்கு குறைவாக உள்ளன. கட்டடங்களிலோ, மரங்களிலோ பாரசூட் சிக்கிக் கொள்ளும்.

யாழ்ப்பாணத்தில் பாரசூட் மூலம் தரையிறங்க முற்பட்ட இந்தியப் படையினர் முன்பு மரங்களில் சிக்குப்பட்டு மாட்டிக்கொண்டனர்.

அதனால் பாரசூட் பயிற்சிக்குப் பதிலாக நூலேணிகள் மூலமும், கயிறுகள் மூலமும் தரையிறங்கும் கடும் பயிற்சிகள் தரப்படுகிறதாம்.

வாகனத் தொடர்கள், பொதுக் கூட்டங்கள் போன்றவற்றைக் குறிவைத்தே வான் கரும்புலிகள் தாக்கக்கூடும் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் கொலைப்பட்டியலில் உள்ள மிக முக்கிய பிரமுகர்கள் கலந்த கொள்ளும் பொதுக்கூட்டங்களை வான் கரும்புலிகள் குறிவைத்துக் குதிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

### இருபுறம் காவல்

புலிகளின் வானூர்திகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று கருதி தலைநகரின் கேந்திரப் பகுதிகளில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தின் முன்னாலும், பின்புறமும் கலிபர் 50ரக துப்பாக்கிகளோடு படையினர் காவல் புரிகின்றனர். கலிபர் 50 ரக துப்பாக்கி, விமான எதிர்ப்புக்காக என்று விசேஷமாகத் தயாரான துப்பாக்கியல்ல. விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் என்றும் தனியாக உள்ளன.

கலிபர் 50 ரக துப்பாக்கியால் சுமார் ஐந்து கிலோமீட்டர்வரை சுடமுடியும். மூன்று மூன் றரை கிலோமீட்டர் வரைதான் தாக்கம் அதிகமிருக்கும். புலிகளின் வானூர்திகள் அந்தளவு உயரத்திற்குள்தான் பறக்கும் என்றே படையினர் கருதுவதாகத் தெரிகிறது.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் நடக்க உள்ளதால் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு முக்கிய பிரமுகர்கள் செல்ல வேண்டியிருக்கும். இந்நிலையில் வான் கரும்புலிகளும் ஒத்திகைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பொதுக் கூட்டங்களுக்கும் வான் பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும். ■

## என்ன பொருத்தம்—இந்தப் பொருத்தம்?

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பம்பைமடு சிடாய்குரி என்ற பகுதியில் 1996டிசம்பர் 7ம் திகதி ஹெலி ஒன்று தரையிறங்கியது.

ஜெனரல் அநுருத்த ரத்வத்தை உட்பட படை உயர் அதிகாரிகள் அதில் இருந்தனர். ஹெலியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே தரையிறங்குவதற்குக் காரணம்.

பின்னர் ஊரவர்களைப் பிடித்து நடைப் பயணமாக தப்பிவந்தனர். அதிஷ்டம் கை கொடுத்தது.

சரியாக இரண்டு வருடங்கள் கழித்து அதே டிசம்பர் மாதம் 6ம் திகதி வன்னியில் பறந்து வந்த புலிகளின் ஷெல்லில் இருந்து தப்பியுள்ளார் அநுருத்த ரத்வத்தை.

இரண்டுமே டிசம்பர் மாதம், திகதியும் ஒருநாள் மட்டும் வித்தியாசம். இரண்டுமே வான்மூலமான ஆபத்து. ஷெல்லும் வான் வழியாகத்தானே பறந்து வருகிறது!

எனினும் ஜெனரல் ரத்வத்தைதான் வந்திருக்கிறார் என்பது புலிகளுக்குத் தெரியாது. படையினரது வாகனங்கள் ஓடுப்பட்டுத் திரிவதை தமது உளவுப்பிரிவு மூலம் அறிந்தே புலிகள் ஷெல்லடித்துள்ளனர்.

ஜெனரல் ரத்வத்தை வந்திருப்பது தெரிந்தால் தொடர் ஷெல் தாக்குதல் நடத்தியிருப்பர்.

ஜெனரல் ரத்வத்தை மயிரிழையில் உயிர் தப்பியதாகக் கூறுவது சற்று மிகையான விவரிப்பு.

ஜெனரல் ரத்வத்தை நின்ற பகுதியில் இருந்து எட்டவே ஷெல் விழுந்து வெடித்திருக்கிறது. அவருக்கு அருகில் பாதுகாப்பாக நின்றவர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஜெனரல் ரத்வத்தை மட்டுமல்லாது பத்திரிகையாளர்கள், படை உயரதிகாரிகள் பலரும், புலிகள் தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தியிருந்தால் உயிரபாயத்தை எதிர்நோக்கியிருப்பர்.

மேற்படி சம்பவத்தை அரசு தனது பிரசாரத்திற்கு நன்கு பயன்படுத்திக் கொண்டது.

## மூன்று மாதத்தில் 24 பேர் பலி—மன்னார் ஆயர் கூறுகிறார்

மன்னார் மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் மொத்தம் 24 அப்பாவிப் பொதுமக்கள் ஆயுதப்படையினரால் கொலை செய்யப்பட்டதாக அம்மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அவர்கள் ஆங்கில வார ஏடான 'தி ஐலண்ட்' டுக்கு தெரிவித்துள்ளார். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் சிறு வர்த்தகர்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மன்னார் பிரதேசத்திலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதனால் இவ்வர்த்தகர்கள் அப்பிரதேசங்களுக்கு பொருட்களைக் கொண்டு செல்கின்றனர். நேரான பாதைகளில் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்ல நேரிடும். அச்சாவடிகளால் பொருட்களைக்கொண்டு செல்ல படையினர் அனுமதிக்கமாட்டார்கள். இதனால் இவர்கள் சோதனைச் சாவடிகள் இல்லாத பாதைகளினூடாகச் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு செல்லும்போதே படையினரிடம் இவ்வர்த்தகர்கள் அகப்பட்டுவிடுகின்றனர்.

இத்தகவலை ஆயர் இராயப்பு ஜோசப் அவர்கள் கூறியதுடன், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு மிக மோசமானதாக இருப்பதாகவும் தெரிவித்தார். ●

## "புலிகள் மீதான தடையை விலக்குக!"

### ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்குக!

இந்தியாவில் புலிகள் மீதான தடையை விலக்க வேண்டும், ஈழ அகதிகள் விரும்பினால் குடியுரிமை வழங்க வேண்டும் என்று மறுமலர்ச்சி தி.மு.க. தலைவரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான வை.கோ. தெரிவித்துள்ளார்.

இத்தகவலை லண்டன் பி.பி.சி. வானொலி வெளியிட்டுள்ளது. மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: "விடுதலைப் புலிகள் தமது தேசிய இன விடுதலைக்குப் போராடி வருகின்றனர். அவர்களுக்கு இங்கு தடை விதித்திருப்பது ஒட்டுமொத்தமான ஈழத் தமிழருக்கு தீங்கானது.

புலிகள் பயங்கரவாதிகளல்ல. தமது மண்ணுக்காக உயிர்களை அர்ப்பணித்து போராடி வருகின்றனர்.

தமிழ்நாட்டைப் பிரிக்க சதி நடப்பதாகக் கூறுவது தவறானது. இந்தியாவில் அதற்கான அவசியம் கிடையாது என்றும் வை.கோ. மேலும் தெரிவித்தார்.

வை.கோவின் மகன் வையாபுரியின் திருமணத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தையான வேலுப்பிள்ளையும் கலந்து கொண்டார்.

இதனை பெரிது படுத்தி சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதையும் வை.கோ. அலட்சியப்படுத்தியுள்ளார்.

இந்திய உள்துறை அமைச்சர் அத்வானி மேடையில் இருக்கத்தக்கதாக புலிகளுக்கு ஆதரவாகப் பேசப்பட்டதாகவும் புகார்கள் எழுந்தன.

"அப்படி எதுவும் முறை கேடாக நடந்து விடவில்லை!" என்று கூறியுள்ளார் வை.கோ.

## தமிழ்க் கிராமங்களில் அவலங்கள்!

### முடங்கிக் கிடக்கும் இளம் பெண்கள்!!

இருவாரங்களுக்கு முன்பு இடம்பெற்ற பச்சனூர் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் மீதான புலிகளின் தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதி மக்கள்மீது பல கட்டுப்பாடுகள் படைத்தரப்பால் விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து மல்லிகைத்தீவு, மணற்சேனை, பச்சனூர், பெருவெளி, பட்டித்திடல் ஆகிய ஊர்களிலுள்ள சில்லறைக் கடைகள் (பெரும்பாலும் சிறியவையே) யாவற்றையும் மூடிவிடும்படி படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

அதனை மீறி கடை திறப்பவர்கள் தாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொருட்கள் கொள்வனவு செய்துவர 2 கிலோமீட்டர் தொலைவிலுள்ள தோப்பூருக்குச் சென்று வருமாறு மக்கள் பணிக்கப்படுகின்றனராம்.

இதைவிட தமது அன்றாடக் கடமைகளுக்கென மூதூர் சென்று மீள்பவர்கள் தமது பாவனைக்கென எடுத்துவரும் பொருட்களும் தடை செய்யப்படுகின்றன.

மேலும், என்ன நடக்குமோ என்ற அச்சத்துடனேயே காலம் கழிக்கும் இம்மக்களில் பெரும்பாலான இளம்பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கும் பரிதாப நிலையே நிலவுகின்றது. ●

## பகிரங்க மரண தண்டனை?

### பங்கர் சிறையில் விசாரணை!

மட்டக்களப்பு- செங்கலடி ஐயங்கேணியில் தனது குடும்ப உறவினர்களான ஏழு பேரை புளொட் இயக்க உறுப்பினரான கே.பாலசுப்பிரமணியம் (20) எனும் நபர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கோரமாகக் கொலை புரிந்த சம்பவமொன்று கடந்த வாரம் இடம்பெற்றது. இந்நபரின் கொலை வெறிக்கு 10 மாதக் கைக்குழந்தையும் பரிதாபமாகப் பலியானது.

மாமியார் வே. கனகம்மா (42), சகலன் சி.அந்தோனி(32), சகலனின் மனைவி ரஞ்சனி அந்தோனி (30), அவர்களது பிள்ளைகளான நிஷா (08), அனுஷியா (07), சிந்துஜா (10 மாதம்) மற்றும் சகலனின் தந்தை எஸ். சின்னத்துரை (82) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

சம்பவதினமான 04.12.98 அன்று அதிகாலை 4.00மணியளவில், செங்கலடி புளொட் முகாமிலிருந்து ஆயுதத்துடன் 2 கிலோமீட்டர் தூரத்திலுள்ள தனது மனைவியின் வீட்டிற்குச் சென்ற இந்நபர் வீட்டிலுள்ளோர் நித்திரையிலிருந்த வேளையில் வீட்டிற்குள் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மேற்படி ஏழுபேரையும் கொன்றுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: பலகாலம் முன்பாக புலி இயக்கத்தில் இருந்த பாலசுப்பிரமணியம் படையினரிடம் பிடிபட்டு ஒன்றரை வருடகாலம் சிறையிலிருந்துள்ளார். பின்னர் விடுதலை பெற்று வந்து சுருட்டுத் தொழில் செய்துள்ளார். பின்னர் திருமணம் முடித்திருந்த வேளையில் மனைவியுடனும் மாமி வீட்டாருடனும் தினந்தோறும் குடும்பத்தகராறு. மனைவிக்குத் தினமும் அடி ஆக்கினைகள் கொடுத்து வந்துள்ளார். இதன் காரணமாக மனைவி வீட்டாரை மேலும் அடக்கி ஆள்வதற்கும் பழிவாங்குவதற்குமாகப் புளொட் இயக்கத்தில் சேர்ந்து கொண்டார்.

தினமும் தனது மாமி வீட்டாருக்கு "உங்கள் விசா (ஆயுள்) விரைவில் முடிந்து விடும்; கவனமாயிருங்கள்!" என்று எச்சரிக்கை அனுப்புவாராம். இதன்படியே சம்பவதினமன்றும் வீட்டிற்குச் சென்றவர் தனது பழிவாங்கும் திட்டத்தை நிறைவேற்றிவிட்டார்.

இவர்கள் ஏழுபேரைச் சுட்டுக் கொன்ற பின்னர் அங்கிருந்த தனது மனைவியையும், கைக்குழந்தையையும் துப்பாக்கி முனையில் கூட்டிச் சென்று களுவன்கேணியில் வைத்து புலிகளிடம் இந்நபர் சரணடைந்தார்.

அவரைத் தமது பங்கர் சிறையில் வைத்து புலிகள் விசாரித்தனர். அவர் புளொட்டில் இருந்தபோது மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் விசாரிக்கப்பட்டதாம்.

விசாரணைகள் முடிந்ததும் 08.12.98 அன்று காலை 10.30 மணியளவில் பகிரங்க மரண தண்டனை வழங்கப்பட்டது. மட்டக்களப்பு இலுப்பையடிச் சேனையில் வைத்து பொதுமக்கள் மற்றும் அவர் குடும்பத்தினர் முன்பாகவே தண்டனை வழங்கப்பட்டது. அவர் மனைவியும் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை நியாயமானது என்று கூறியிருக்கிறார். ●

## பச்சைமட்டையடி

அம்பாறையில் அக்கரைப்பற்று கோளாவில் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞர் கணபதிப்பிள்ளை கருணாகரன் என்பவர் 05.12.98 அன்று இரவு புலிகள் இயக்கத்தால் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டார். இவருக்கு பச்சை மட்டை அடித் தண்டனை வழங்கப்பட்டது.

பின் இவர் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆலையடிவேம்பு பகுதி அரச அதிபர் அலுவலகத்திற்கு முன்னால் கட்டி வைக்கப்பட்டார். மறுநாள் காலை 8 மணியளவில் இவர் உறவினர்களால் விடுவிக்கப்பட்டு வீடு சென்றார்.

இவர் புலிகள் இயக்கத்தை இழிவுபடுத்திப் பேசியதற்காக, புலிகள் தம்மை வந்து சந்திக்கும்படி 3 முறை கடிதம் அனுப்பியிருந்தார்கள். ஆனால் இவர் புலிகளிடம் செல்லவில்லை. இவர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ●

## புலிகளின் வசமுள்ள பகுதியில் சிறப்பு வைபவம்!

### ஆயிரக்கணக்கான தமிழ்—முஸ்லிம்கள் பங்கேற்பு!

மட்டக்களப்பு-ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதி முஸ்லிம்கள் கிழக்கில் வன்முறை நிலவிய காலந்தொடக்கம் சுமார் 10 வருடங்களுக்குமேலாகத் தமது விவசாய நிலங்களைக் கைவிட்டிருந்தனர். அதன்பின்னர் இம்முறை தங்கள் பகுதியில் உள்ள விவசாய நிலங்களைச் செய்கை பண்ண புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர் என்பது தெரிந்ததே.

தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் ஆக்கபூர்வமான சமூக நல்லுறவை வளர்க்க இது தக்க தருணம் எனப் பலரும் வரவேற்றனர். இதனால் கல்குடா முஸ்லிம் விவசாயிகள் சம்மேளனம், கடந்த 10 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக புலிகளின் வசமுள்ள வாகனேரி-பள்ளிமடுப் பகுதியில் 'கந்திரி' அன்ன தான வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இவ்வைபவத்திற்கு என்றுமில்லாதளவில் ஆயிரக்கணக்கான தமிழ்-முஸ்லிம் பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர். இந்து, கிறிஸ்தவ மத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், பெரியார்களும் அழைக்கப்பட்டிருந்ததுடன் பல்வேறு திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சமூகங்களுக்கிடையில் ஐக்கிய நல்லுறவை வேண்டியும், மழை வேண்டியும் பிரார்த்தனைகள் இடம்பெற்றதாக முஸ்லிம் பிரமுகர்கள் தெரிவித்தார்கள்.

### சிறப்பான நிகழ்வு

பல்வேறுபட்ட ஐயங்களும், சந்தேகங்களும் நிலவும் இச்சூழ்நிலையில் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை எடுத்துக் காட்டும் வகையில் முஸ்லிம்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்திற்கு ஆயிரக் கணக்கான தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒருங்கே திரண்டிருந்தது சிறப்பு மிக்க நிகழ்வாகத் தங்களைப் பிரமிக்கச் செய்தது என்று வைபவத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் 'முரசி'டம் கருத்து வெளியிட்டனர்.

இது ஒரு புறமிருக்க, புலிகளின் வசமுள்ள பகுதியில் நடந்த மேற்படி வைபவத்திற்குச் சென்று வந்தோரை எல்லைப் பகுதியில் சோதனைச் சாவடிகளில் நின்றிருந்த சீருடையினர் பல்வேறு எரிச்சலூட்டும் கேலிகளுக்கும் விசாரணைகளுக்கும் உட்படுத்தியதாகவும் "புலிகளின் மாவீரர் வைபவத்தை நடத்தி விருந்து கொடுத்து விட்டா வருகிறீர்கள்?" என்ற தோரணையில் விசாரணைகள் இடம் பெற்றதாகவும் முஸ்லிம் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

நீண்டநாள் அகோர வறட்சிக்குப்பின் மட்டக்களப்பில் ஆங்காங்கே சிறிதளவு மழை பெய்து வருகிறது. எனினும் பெருமளவான நெல் வயல்கள் கருகிவிட்டன. ■

## சிறுவர் சிறுமிகளை கடத்த முயற்சி!

### நரபலிக் கும்பல் என்று சந்தேகம்

(மன்னார் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹொரவப்பொத்தானை, கெபித்திக்கொல்லாவ போன்ற பகுதிகளில் அண்மைக்காலமாக சின்னஞ் சிறு குழந்தைகளை கடத்திச் செல்ல முற்படும் மர்மக் கும்பல் குறித்து இப்பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் காட்டுக்குள் புதையல் தோண்டி எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மர்மக்கும்பல், அங்கு பலியிடுவதற்காக சிறு பிள்ளைகளைக் கடத்திச் செல்வதாகக் கூறப்படுகிறது.

கடந்த 20.09.98 அன்று இங்குள்ள றத்மலே கிராமத்தில் தூங்கிக் கொண்டிருந்த சிறுமி ஒருத்தி காணாமல் போய்விட்டாள். அதன்பிறகு இக்குழந்தையை எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இவ்வாறு கடந்த சில தினங்களுக்கு முன் கிவுளேகட என்னும் கிராமத்தில் இரவு வேளையில் புகுந்த சிலர் வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்த சிறுமி ஒருத்தியை தூக்கிச் செல்ல எடுக்கப்பட்ட முயற்சி இப் பகுதி மக்களால் முறியடிக்கப்பட்டது.

அல்லாவெவ என்ற இடத்திலும் இவ்வாறு குழந்தை ஒன்றைத் தூக்கிச் செல்ல முற்பட்ட சம்பவமும் பெற்றோரால் முறியடிக்கப்பட்டது.

சின்னஞ்சிறு குழந்தைகளை புதையலுக்காகப் பலியிடத்துடிக்கும் காட்டுமிராண்டிக் குழுவினர் தினமும் இம்மாவட்டத்தின் கிராமப்புறங்களில் சுற்றித் திரிகின்றனராம். இதனால் குழந்தைகளை வைத்திருக்கும் பெற்றோர் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர்.

## கடத்தலும்-விடுவிப்பும்!

மட்டக்களப்பு- ஓட்டமாவடி, வாழைச்சேனைப்பகுதி முஸ்லிம் மீனவர்களின் மீன்பிடிப் படகுகளைப் புலிகள் சமீப சில நாட்களுக்கு முன்னர் கடத்திச்சென்றனர்.

கடலில் வைத்து 5 மீன்பிடிப்படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் மீனவர்களுடனும் கடத்திச் சென்ற புலிகள் பின்னர் ஒரு படகில் மீனவர்களை விடுவித்துவிட்டு ஏனைய 4 படகுகளையும் கைப்பற்றிச் சென்றிருந்தனர். தற்சமயம் அவர்கள் கொண்டு சென்ற 4 படகுகளையும் விடுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களுக்குக் கிரமமாகக் கிடைக்க வேண்டிய நிதி வசூல் வந்து சேராததாலேயே படகுகள் கைப்பற்றப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையே அரசிடமிருந்தோ, உதவி அமைப்புக்களிடமிருந்தோ கடனடிப்படையில் மீன்பிடித் தோணிகளையும் படகுகளையும் பெற்று இதுவரை அந்தக் கடன் பணத்தைச் செலுத்தத் தவறிய மீனவர்களைத் தங்களிடம் அந்தப் பணத்தைச் செலுத்துமாறு புலிகள் கேட்டுள்ளனர் என்று மீனவர்கள் கூறுகிறார்கள்.

கடந்த 01.12.1998 அன்று காலை எட்டு மணியளவில் மட்டக்களப்பு- களுதாவளையால் சென்று கொண்டிருந்த எஸ்.எல்.எம். ஹனீபா மௌலவி (அக்கரைப்பற்று) என்பவருக்குச் சொந்தமான பிக்-அப் வானத்தையும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒப்பந்தக்காரரின் இன்னொரு பிக்-அப் வாகனத்தையும் வழி மறித்துப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

வாகனத்தில் இருந்தவர்களை இறக்கி விட்டு அவ்வாகனங்கள் இரண்டையும் புலிகள் உடனடியாகவே ஆற்றைக் கடந்து பழுகாமம் பகுதிக்குக் கொண்டு சென்றுவிட்டதாக பொதுமக்களின் தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாகனக் கடத்தல் சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும் முறையிடப்பட்டுள்ளது. ●



படிப்பகம்

www.padippakam.com

# மீனவர் சூட்டுக்குப் பலி

## அடக்கமும் முடிந்தது

(திருமலை நிருபர்)

திருகோணமலையிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இளங் குடும்பஸ்தர் ஒருவர் வாகரை இராணுவத்தால் சுடப்பட்டு உயிரிழந்தார். அரசடியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அகிலதாஸ் (வயது 34) என்ற மூன்று குழந்தைகளின் தந்தையே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

வண்ணமீன் பிடிக்கும் தொழிலைச் செய்பவரான மேற்படி மீனவர் நவம்பர் 12ம் திகதி வழக்கம் போலக் கருவிகளுடன் கடலுக்குச் சென்றிருக்கிறார். கடலினடியில் மீன்தேடி வெகுதூரம் அலைந்த அவருக்கும் உதவிக்கு நின்ற படகுக்குமிடையிலான தொடர்புகள் அற்றுவிடவே வேறு வழியின்றி நீந்தத் தொடங்கினார். வெள்ளி அதிகாலையில் வாகரைப் பகுதியில் கரையேற முற்பட்டபோதே இராணுவத்தால் சுடப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இவரைக் காணவில்லை என்று தேடிய குடும்பத்தினருக்கு வாகரை இராணுவத்தால் சுடப்பட்டு இனம் தெரியாத நிலையில் வாழைச்சேனையில் ஒருவர் அடக்கம் செய்யப்பட்டார் என்ற சேதி கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அங்கே சென்று விசாரித்த போதுதான் அகிலதாஸ் இறந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வாழைச்சேனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனுதாபத்துடன் தங்கள் விடயத்தில் நடந்து கொண்டதாக இறந்தவரின் தாயார் செல்வராணி முரசு நிருபரிடம் தெரிவித்தார்.

# உணவு முத்திரையில் வெட்டு

சுபீட்சத் திட்ட (சமுர்த்தி)த்தின் கீழ் உதவி பெறுவோருக்கு வழங்கப்படும் உணவு முத்திரைப் பணம் 250/- ரூபாவில் 25/- ரூபாவை சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்குக் கழிக்குமாறு சகல பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வெட்டப்படும் பணம் 25/- ரூபா சமுர்த்தி உணவு முத்திரை பெறுவோரின் சமூகப் பாதுகாப்பு நலன்களுக்காக அவரவரின் பெயரில் வரவு வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க, ஏற்கெனவே வறுமை நிவாரண உணவு முத்திரை பெற்றவர்களின் அதே எண்ணிக்கைக்கேற்பவே சுபீட்சத் திட்ட உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களை விடத் தகுதி பெற்ற மேலும் பலகுடும்பங்கள் சுபீட்சத்திட்ட உணவு முத்திரை பெறாதுள்ளனர். இவர்களுக்கும் உணவு முத்திரை வழங்குவதில் பல இழுபறிகள் நிலவுவதாகப் பிரதேச செயலாளர் ஒருவர் சொன்னார்.

# பரிசு பத்தாயிரம்



மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் நாடகப் போட்டிகள் நட... பரிசுகள் வழங்கினர். 'மண்ணின் மைந்தர்கள்' என்னும் நாடகத்தில் ஒரு காட்சி இ... முதலிடம் பெற்ற இந்த நாடகத்திற்கு பத்தாயிரம் ரூபா பரிசளிக்கப்பட்டது. கொக்கட்... சோலை ஈஸ்வரா கலா மன்றம் இந்த நாடகத்தை அரங்கேற்றியது.

# பயணிகள் அதிருப்தி

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து கொழும்பு,கற்பிட்டி, திருகோணமலை ஆகிய தூர இடங்களுக்குச்செல்லும் இ.போ.ச. பஸ்கள் உணவுக்காக நிறுத்தப்படும் ஹொட்டல்களில் போதிய வசதிகள் இல்லை என்று பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த ஹொட்டல்களில் விற்கப்படும் உணவுப் பொருட்களின் விலை, ஏனைய கடைகளில் காணப்படும் விலைகளைவிட அதிகமானதாகும்.

சில வேளைகளில் தரக்குறைவான உணவு வகைகளையும் பயணிகளின் தலையில் கட்டி விடுகின்றனராம். சம்பந்தப்பட்டவர்கள் திருந்துவார்களா?

அத்துடன் போதிய நீர்வசதியோ, மலசலகூட வசதியோ கிடையாது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரு மலசலகூடமே பயன்படுத்தப்படுகிறது.

அத்துடன் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பஸ்கள் இங்கு நிறுத்தப்படுவதால் தேவை யான உணவு வகைகளைப் பெற்றுக் கொள்வதில் பயணிகள் பல்வேறு சங்கடங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

# அரச வர்த்தமானியில் தமிழில் வயது குறைப்பு?

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கை நிருவாகச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு 1998.10.30ம் திகதிய வர்த்தமானியில் அறிவித்தல் வெளியாகியிருந்தது.

இந்த அறிவித்தலின் பிரகாரம் இலங்கை நிருவாகச் சேவை ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்போரின் தகுதியான வயதெல்லை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் ஒரே மாதிரியாகவும், தமிழில் வித்தியாசமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதனால் தமிழ் விண்ணப்பதாரிகள் குழப்பமடைந்துள்ளார்கள். இதனால் கூடுதலானவர்கள் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தை இழந்துவிட வாய்ப்புண்டு எனவும் கூறப்படுகிறது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் 1998.11.30ஆம் திகதியன்று விண்ணப்பதாரி 22 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் என்று சிங்கள- ஆங்கில அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை தமிழ் அறிவித்தலில்; '1998.11.30 ஆம் திகதியில் 22 வயதுக்குக் குறையாதவராகவும் 28வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி தமிழ் வர்த்தமானி அறிவித்தலை மாத்திரம் கண்ணுற்ற விண்ணப்பதாரிகள் பலர் வயதெல்லையைக் கருத்திற் கொண்டு விண்ணப்பிக்கத் தவறியுள்ளனர். இது தமிழ் மொழிமூல விண்ணப்பதாரிகளை அலட்சியப்படுத்தும் நியாயமற்ற செயல் என்று சட்டத்தரணி எம்.எஸ்.றஸாக் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

# தேடப்பட்டவர் சுடப்பட்டார்

## மோசடிக்குத் தண்டனை

அக்கரைப்பற்று-பெரியகுளத்தில் புலி இயக்க முன்னாள் உறுப்பினர் இருவர் 24.11.98 அன்றிரவு புலிகளின் பிஸ்டல் குழு ஒன்றினால் சுடப்பட்டனர். இச்சம்பவத்தில் ஒருவர் பலியானார்.

புலிகள் இயக்கத்தில் முன்னாள் உறுப்பினர்களாக இருந்து தலைமறைவாகிய அந்த இருவரும் நிதிக் கையாடல் செய்திருந்ததால் புலிகள் இவர்களைத் தேடி வலைவிரித்தனராம். தங்களை வன்னிக்குச் செல்லுமாறு பணித்தபோது தாம் மறுப்புத் தெரிவித்து ஓடிவந்ததாகவும் அவர்கள் கூ திரிந்தனராம்.

பாதுகாப்புத் தரப்பினராலும் இவ்வி... ரும் தேடப்பட்டு வந்தனர் என்று பெ... ஸாரும் கூறியுள்ளனர்.

சம்பவதினம் மாலை 7.30 மணி... வில் இவர்கள் புலிகளின் வலையில் ... கினர். அதில் ஒருவர் சுடப்பட்டு அ... இடத்திலேயே பலியானார். மற்றவர... இசைமுத்து என்பவர் துப்பாக்கிச் சூட்... காயம் பட்டுத்தப்பிவிட்டார்.

புலிகளுக்கு உணவுப் பொருட்... வாங்கியதில் மோசடி இடம் பெற்ற... லேயே இவர்கள் புலிகளால் சுடப்பட்ட... என்றும் பொலிஸார் தெரிவித்துள்ள...


## விளம்பரப் பகுதி

ஸ்டூடியோ சாயா

வீடியோ, போட்டோ, பிரேமிங், லேமினேஷன், டியூறொகாட்

40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை தொ.பே.: 594492

ALPHA TELE COM CARD SWISS

சுவிஸ் நாட்டில் அல்பா தொலைபேசி அட்டைகளின் மொத்த விற்பனையாளர் V.T. சீலன்.

சுவிஸில் ஏனைய மாநிலங்களுக்கும் விற்பனை முகவர்கள் தேவை.

18 வீதம்வரை கொமிஷன் வழங்கப்படும்.

ALFA TELE COM CARD

—மேலதிக விபரங்களுக்கு—

V.T. SEELAN
MOSS SRT-01
8030 - ZURICH
SWISS.

Tel : 01-4812521
Natel : 079/ 4322158
KAMAL 079/3457345

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாந்திரதில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீக்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஓடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

O/L TAMIL
Mr. K.KAJAROOBAN
VENUS, C.B.I., ST. ANTONEY'S
VAVUNIYA

## கிருலப்பனையில் ஓர் உதயம்

* ஆண்டு 1 முதல் ஆண்டு 11 வரை கல்வி கற்க அரிய வாய்ப்பு.
* அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவால் சாதாரண வகுப்புக்களுடன் பிரத்தியேக வகுப்புகளும் நடாத்தப்படும்.
* முதலாவது பிரிவு 19.12.98 சனி காலை 10.30–12.30றகும் 20.12.98 ஞாயிறு காலை 7.00–10.00 வரையும் ஆரம்பம்.
* மேலதிக எல்லா விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

த, திருமதி சி.சோமராஜா,
145/17, QUARRY ROAD,
KIRULAPONE.
T.P. 077-308624

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளி... அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களு... தொலைபேசி மூலம் தொடர்... கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை.
கொழும்பு-6.
T.P:- 586218


## ஓராமாண்டு நினைவலை



மலர்வு : 15 10 1935

உதிர்வு : 09 12 1997

### திருமதி முத்துக்குமாரு-பத்மாவதி

[குப்பிளான்]

அம்மா!

இதயத்துள்ளே நிலைத்துவிட்ட சோகம் இனி ஓயுமா...?
இமயம் போல அருகிருந்தாய் இன்று அது மாயமா...?
உங்கள் இருபெற்ற வாழ்வதனை வாழ்வதினில் பயனில்லை!
எம் சோகமெனும் சொற்றொடரில் இல்லையம்மா பயநிலை;
இரவற்ற போது மிங்கே நீங்களின்றி ஒளியில்லை.
உயிர் கரைந்து தேடுகின்றோம் ஏன் இன்னும் வரவில்லை?

தகவல்: பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள் (கனடா)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 08 01 1923

உதிர்வு : 08 01 1997

### அமரர் பொ. நவரத்தினசிங்கம்

(யாழ்தேவி போக்குவரத்துச் சேவை உரிமையாளரும், சமாதான நீதவானும், சமூக சேவையாளரும்)

திதி 17.12.1998

ஆண்டு இரண்டு மறைந்தன– ஆனால் உங்கள் அன்பு முகம்
மறையவில்லை; அழியாத உங்கள் நினைவலைகள்
இன்னும் எங்கள் நெஞ்சை விட்டு அகலவில்லை– ஐயா!
என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: பொ. நடராசா


## மனோதத்துவ வைத்தியம்

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! சக்தி இழந்து மெலிந்து, நித்திரையின்மை, பயம் நடுக்கம், ஞாபக மறதி, தாழ்வு மனப்பான்மை ஏற்படக்காரணமான தவறுகளை நிறுத்தி எதிர்காலம் பிரகாசிக்க பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)

தாம்பத்திய கோளாறுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணமாகும். என்பதை 90 நிமிடத்தில், நான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்தே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்குவிஷேட ஏற்பாடுகள்

எந்தவித தாம்பத்திய பாதிப்புனாலும் தயக்கமின்றி எழுதவும். உமது கேள்விகளுக்கு விரிவான பதில் தந்தபின் முடியாதவன், இயலாதவன் என்ற தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை பதிவு நாடா மூலமும், உட... பாதிப்பிற்கு நல்ல மூலிகை மருந்தும் பெற்று தாம்பத்திய குறைகளை முற்றாக நீங்கிய ஆண்மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.

மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்

நீரிழிவு நோய் முற்றாக சுகமாக்கலாம். மனநோய்கள், தாழ்வு மன... பான்மை 'ஹிஸ்டீரியா' என்பனவற்றுக்கும் மனோதத்துவ சிகிச்சை உண்டு. ஆஸ்துமா, தலையிடி, வாதம், வெள்ளை போதல், கிரந்திநோய், குழந்தை பேறு இன்மை, முடி உதிர்தல் எல்லாவற்றுக்கும் மருந்துகள் உண்டு.

கொழும்பில் டிசம்பர் 20 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது) (ஆட்டுப்பட்டித் தெரு)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388

வவுனியாவில் டிசம்பர் 12,13,14 திகதிகளில்

(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை வவுனியாவில் சந்திக்கலாம். T.P.024-22074

கல்முனையில் ஜனவரி 2,3,4 திகதிகளில்

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

RESIDENT T.P:- 065-24019

கடிதத் தொடர்பு:
DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.33. Tissa Weerasingam sq.,
Boundary Road, Batticaloa. SRI LANKA.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# 'ஜயசிக்குறுய்' பெயர் மாற்றமும் போர் வியூகங்களும்

'ஜயசிக்குறுய்' முடிவடைந்து விட்டதாக 4.12.98 வெள்ளிக்கிழமை அன்று திடீரென்று அறிவித்தது அரசாங்கம்.

அதேசமயம் வன்னியில் போரைத் தொடரும் முடிவில் சற்றும் மாற்றமில்லாமல் 'ரிவிபல' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆக, வன்னிப் போர் நிறுத்தப்படவில்லை, பெயர் மாற்றப்பட்டுள்ளது என்பதே சரியானது.

இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்?

பாதைத்திறப்புக்கான போர் தொடரும் என்று அநுருத்த ரத்வத்தை கூறியுள்ளார். பின்னர் ஏன் 'ஜயசிக்குறுய்' முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது?

டிசம்பர் முதலாம் திகதியுடன் யுத்தத்தை வழி நடத்தும் முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஜெனரல் அநுருத்த ரத்வத்தை தொடர்ந்தும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருப்பார். போர் முனைக்கும் சென்று வருவார். ஆனால் முன்னர்போல இராணுவ நடவடிக்கைகளைத் தானே திட்டமிடவோ, நடத்த உத்தரவிடவோ முடியாது.

'ஜயசிக்குறுய்' பற்றி ஜனாதிபதிக்கு கிடைத்த ஆலோசனைகளும், ஜனாதிபதியின் யோசனைகளும் ஜெனரல் ரத்வத்தையின் திட்டங்களுக்கு முற்றிலும் மாறாக அமைந்தனவாம்.

'ஜயசிக்குறுய்' என்ற பெயர் ராசிப் பொருத்தம் இல்லாதது என்று ஜோசியர் மூலம் கணிக்கப்பட்டதாகவும் தகவல்.

இத்தனைக்கும் 1997 மே 13ம் திகதி செவ்வாய்க்கிழமை ஜோசியர் ஒருவர் கணித்துக் கொடுத்த சுப நேரத்தில்தான் 'ஜயசிக்குறுய்' ஆரம்பிக்கப்பட்டது.

அந்த ஜோசியர் இப்போது எங்கே தலைமறைவாக இருக்கிறாரோ தெரியவில்லை.

யாழ் குடாநாட்டை கைப்பற்றும் நடவடிக்கைக்கு முதலில் 'முன்னேறிப் பாய்ச்சல்', 'இடிமுழக்கம்' என்று பெயர்கள் சூட்டப்பட்டன. ஆயினும் 'சூரியக் கதிர்' (ரிவிரச) என்று பெயர் சூட்டப்பட்ட பின்னரே இலக்கை எட்ட முடிந்தது.

ஆகவே, சூரிய சம்பந்தமான பெயர்களே ராசியானவை என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களும் படை உயர் மட்டமும் கருதியதாம்.

அப்படித் தேடி, எண் கணித பொருத்தம் பார்த்து தெரிவான பெயர்தான் 'ரிவிபல' தமிழில் சூரியசக்தி.

ராசியே இல்லாத பெயராக கருதப்பட்ட ஜயசிக்குறுய்க்கு முழுக்குப் போட்டுவிட்டு, புதிய பெயரான 'ரிவிபல' ஏகமனதாக தெரிவானது.

டிசம்பர் மூன்றாம் திகதி காலை 6.42 மணிக்கு 'ரிவிபல'வை ஆரம்பிக்க வேண்டும் என்று சுப நேரம் குறித்துக் கொடுத்தாராம் ஜோசியர்.

இவையெல்லாம் ராசி, பலன், அதிஷ்ட நம்பிக்கை சார்ந்த நடவடிக்கைகள். சுருக்கமாகச் சொன்னால் செண்டிமெண்டான விஷயங்கள்.

இவை தவிர அரசியல், இராணுவக் காரணங்களும் பெயர் மாற்றத்துக்கு முக்கிய காரணம்.

ஒரே பெயரில் இராணுவ நடவடிக்கையை தொடர்ந்தது தமது தரப்பை பலவீனமாக காட்டிவிட்டது என்று படைத்தரப்பு கருதுகிறது.

மொத்தமாக ஒரு வருடமும் 7 மாதங்களும் 'ஜயசிக்குறுய்' தொடர்ந்துள்ளது. மொத்தம் 570 நாட்கள்.

இப்படியே போனால் 'ஜயசிக்குறுய்' முறியடிப்புச் சமரின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியையும் எதிர்வரும் மேமாதம் புலிகள் விமரிசையாக அனுஷ்டிக்க வழி செய்வதாகிவிடும் என்று படைத்தரப்பு கருதியிருக்கிறது.

சமீபகால வரலாற்றில் தென்னாசியாவிலேயே மிக நீண்ட சமராக 'ஜயசிக்குறுய்' விளங்குகிறது. மேலும் தொடருமானால் ஆசியாவிலேயே மிக நீண்ட சமராக சாதனை படைக்கப் போகிறது.

இந்த சாதனை புலிகளுக்கு பெருமையாக இருக்கும். படையினருக்கோ கௌரவக் குறைச்சல்.

படையினருக்கு மட்டுமல்ல ஆளும் தரப்புக்கும் இமேஜ் வீழ்ச்சி. ஒன்றரை வருடமாக புலிகளை முறியடிக்க முடியாமல் 'ஜயசிக்குறுய்' திண்டாடுகிறது என்பது சாதாரண வாக்காளர்களுக்கே தெரிகிறது.

'ஜயசிக்குறுய் தொடர்கிறது' என்று கீறல் விழுந்த ரெக்கோட் மாதிரி அரச பிரசார சாதனங்கள் திரும்பதிரும்பக் கூறுவதைக் கேட்டு மக்களுக்கு புளித்துவிட்டது.

இதையெல்லாம் அலசி ஆராய்ந்துதான், ஒரே பெயரில் வன்னிச் சமரைத் தொடர்ந்ததும் தவறு, பெரிய இலக்குகளை அறிவித்து, கால வரையறைகள் குறித்ததும் தவறு என்ற முடிவுக்கு ஜனாதிபதியும், உயர் படை அதிகாரிகளும் வந்து சேர்ந்துள்ளனர்.

புளியங்குளம்வரை சென்றபோது ஒரு பெயர், மாங்குளம் வரை சென்றபோது ஒரு பெயர் என்று புதிய பெயர்களில் சமரை முன்னெடுத்திருந்தால், இலக்கை எட்ட முடியாமல் படைகள் தடுமாறுகின்றன என்ற எண்ணம் ஏற்படாமல் தடுத்திருக்கலாம் என்று நினைக்கிறார்களாம்.

'ஜயசிக்குறுய்' நீள்வதால் உள்நாட்டில் மட்டுமல்லாமல், வெளி நாடுகளிலும் இலங்கை அரசின் இராணுவ ஆற்றல் கேள்விக்குள்ளாகியுள்ளது.

சமபலமான இரு படைகள் இலங்கையில் உள்ளன என்று வெளியுலகம் கணிப்பிடுவதற்கு 'ஜயசிக்குறுய்' சமரின் ஓராண்டு பூர்த்தியும் ஒரு காரணமாகியது.

புலிகள் ஒரு சிறு பயங்கரவாதக் குழு என்று இலங்கை அரசு செய்துவந்த பிரச்சாரமும், யுத்தத்தில் 90 வீதம் முடிவடைந்து விட்டதாக கூறி, மீதியை முடிக்க உதவி தாருங்கள் என்று வெளியுலகில் கோருவதும்கூட 'ஜயசிக்குறுய்' செய்திகளால் பாதிக்கப்பட்டன.

ஒன்றரை வருடமாகியும் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையைக்கூட முடிக்க முடியவில்லையே. ஒட்டு மொத்தமான யுத்தத்தில் எப்படி வெற்றி பெற முடியும்? என்று நினைக்கும் சர்வதேச சமூகம் அரசும், புலிகளும் பேசவேண்டும் என்று கூறத் தொடங்கிவிட்டது.

கடந்த ஒன்றரை வருடமாக 'ஜயசிக்குறுய்' பற்றிய செய்திகளை வெளி யுலகம் செவிமடுத்து வருகிறது.

எனவே அரச படைகளுடன் மறு முனையில் மோதும் புலிகளும் பாரிய இராணுவ அமைப்பே என்பதை அவர்கள் தாமாக உணரத் தொடங்கியிருப்பர்.

புலிகள் கெரில்லாக்கள் மட்டுமல்ல, மரபுப் படையாகவும் உள்ளனர். எனவே இரு நாட்டுக்கு இடையிலான யுத்தம் போன்றே இலங்கை யுத்தம் தொடருகிறது என்று இராணுவ ஆய்வாளர்களும் கூறத்தொடங்கிவிட்டனர்.

எனவே, 'ஜயசிக்குறுய்' என்ற பெயரில் நடவடிக்கையை தொடருவது சகல விதத்திலும் பாதகம் என்பதை நன்குணர்ந்தே பெயர் மாற்றும் முடிவு திட்டவட்டமாக எடுக்கப்பட்டது.

மிக முக்கியமான இன்னொரு உடனடிக் காரணமும் இருக்கிறது.

வடமேல் மாகாண சபை தேர்தலை நடத்த அரசு முன்வந்துள்ளது. ஏனையவை பின்தள்ளிப் போடப்பட்டன.

வட மேல் மாகாண சபைத் தேர்தலை ஒரு பரீட்சார்த்த தேர்தலாக நடத்திப் பார்க்கப் போகிறார்கள். இதில் வெற்றி பெற்றால் ஏனைய மாகாண சபைகளுக்கும் தேர்தலை நடத்தலாம். அந்த வெற்றி அலை ஏனைய மாகாணங்களுக்கும் வீசும். எனவே வெற்றி சுலபம் என்பது அரசின் கணக்கு.

ஒரு வேளை தோல்வி கண்டால் வன்னிச் சமரை மூர்க்கமாக்கிப் பார்க்கலாம். மேலும் ஏனைய மாகாண சபைத் தேர்தல்களை பின் போடலாம்.

பரீட்சார்த்த களமான வடமேல் மாகாண சபைத் தேர்தலில் 'ஜயசிக்குறுய்' எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. அப்படி மாற்றம் ஏற்படுத்த வேண்டுமானால் தொடர்ந்து முன்னேற வேண்டும். அதற்கான கள நிலவரம் சமீபத்தில் ஏற்படப்போவதில்லை.

மறுபுறத்தில் 'ஜயசிக்குறுய்' ஆளும் தரப்புக்கு இரண்டு விதமான பாதிப்புக்களை தேர்தல் களத்தில் ஏற்படுத்தும்.

1. 'ஜயசிக்குறுய்' நீண்டு செல்வது பற்றிய எதிர்க்கட்சியின் கேலிப் பிரசாரம்.

2. 'ஜயசிக்குறுய்' படையினர்மீது புலிகள் பாரிய தாக்குதல் நடத்தினால் தேர்தலிலும் அது எதிரொலிக்கும்.

மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது யாதெனில், அரசு புலிகளுடன் பேசவேண்டும் என்று எதிர்க்கட்சி கூறப்போகிறது.

புலிகளை பெருமளவு முறியடித்துவிட்டோம், இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது என்று ஆளும்தரப்பு முஸ்டியை உயர்த்திக் காட்டப்போகிறது.

எனவே, வன்னியில் புலிகள் பாரிய தாக்குதல் தொடுத்தால் எதிர்க்கட்சியின் கருத்தே சரி, புலிகளை அரசு வெல்ல முடியாது, பேச வேண்டும் என்று வாக்காளர்கள் நினைத்து விடுவர்.

ஆகவே, வடமேல் மாகாணசபை தேர்தலை முன்னிட்டு இரண்டு திட்டங்களை வன்னியில் மேற்கொண்டாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஒன்று: புலிகள் பாரிய தாக்குதல் தொடுக்க முடியாதளவுக்கு அங்கு நிலைகொண்டுள்ள படைகளது தற்காப்பு நிலையை கெட்டிப் படுத்தல்.

இரண்டு: 'ஜயசிக்குறுய்' என்ற பெயரை தூக்கிப் போட்டுவிட்டு, புதிய பெயரில் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டு ஆரவாரப்படுத்துதல்.




தேர்தல் கருதி அரசுக்கு இத்தகைய தேவைகள் எழுந்துள்ள அதே வேளையில், படைத்தரப்புக்கும் இராணுவரீதியான தேவைகள் உள்ளன.

மாங்குளத்தை பிடித்துவிட்டோம். புலிகளது கேந்திர மையம் கையில் வந்துவிட்டது என்று கூறப்பட்டு இரண்டு மாதங்களாகின்றன. மேற்கொண்டு நகர முடியவில்லை. 'முரசு' அப்போதே கூறியதுபோல, ஜனவரிக்குள் முன்னோக்கி நகருவதற்கான களநிலவரம் அங்கில்லை.

கிளிநொச்சியில் ஏற்பட்ட இழப்பும், மாங்குளம் நோக்கி நகர்ந்தபோது ஏற்பட்ட இழப்புக்களும் ஆட்பலத்தில் வெற்றிடங்களை ஏற்படுத்தியுள்ளன.

படை பலத்தை அதிகரிக்காமல் மேற்கொண்டு முன்னேற முடியாத நிலையில் படைத்தரப்பு இருப்பது போலவே, அதன் 20 ஆயிரம் பேர் சேர்ப்புக்கான அவசர அறிவித்தல்கள் வெளியாகின.

கிளிநொச்சி புலிகளிடம் இருக்கும்வரை வவுனியா-யாழ் சாலையை கைப்பற்றும் இலக்கு எட்டாத இலக்குத்தான்.

ஆகவே, மாங்குளம் முனையில் இருந்தும், பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கியும் படை முன்னேற வேண்டும்.

அது உடனடியாக சாத்தியம் இல்லை. குறைந்தது மூன்று மாதமாவது பயிற்சிகள், அணிகளது புனரமைப்பு என்பவற்றுக்கு தேவைப்படும்.

எனவே, அதுவரை புலிகளின் குகையான வன்னிக்குள் தற்போது நிலை கொண்டுள்ள படையினரை பாதுகாத்தாக வேண்டும்.

மீண்டும் ஓர் பாரிய முன் நகர்வுக்கு தயாராகும்வரை, இருக்கின்ற சக்தியை இழந்து விடாதிருப்பதே படைத்தரப்பின் உடனடி திட்டமாக இருக்கவியலும்.

ஆகவே, ஆளும்தரப்பின் அரசியல் நலன், படைத்தரப்பின் இராணுவ பலம், பலவீனம் போன்றவையும், செண்டிமெண்டான விஷயங்களும் இணைந்து எடுக்கப்பட்ட முடிவுதான் 'ஜயசிக்குறுய்' முடிவடைந்ததாக விடுக்கப்பட்ட அறிவிப்பாகும்.

டிசம்பர் 3ம் திகதி ஜோசியர் குறித்த சுபநேரமான காலை 6.42 மணிக்கு ரிவிபலவை இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் ஆரம்பித்துவைக்கும் கடைசி இராணுவ நடவடிக்கை இதுவாகத்தான் இருக்கும். ஏனெனில் அவர் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்.

டிசம்பர் 4ம் திகதி மதியம் 2 மணியளவில் ஒட்டிசுட்டான் சந்திக்கு படையினர் சென்றனர். புலிகள் எதிர்ப்பில்லாமல் அனுமதித்தனர்.

எங்கு மட்டும் வருகிறார்கள் பார்க்கலாம் என்று புலியணிகள் பின்னால் எடுக்கப்பட்டன.

படையினருக்கும் புலிகள் தங்களை உள்ளே இழுத்து பொறிவைப்பார்கள் என்று தெரிந்ததால் காலை அதிகம் உள்ளே வைக்காமல், குறிப்பிட்ட வரையறையோடு நின்று கொண்டனர்.

அடையாளத் தாக்குதல் மட்டுமே புலிகளிடமிருந்து வந்தது. அதுவும் மோட்டார் தாக்குதல் மட்டும்தான். புலியணிகள் வந்து தடுத்து மோதவில்லை. படையினர் தரப்பில் ஒரு அதிகாரி உட்பட 12 படையினர் காயமடைந்தனர்.

ஒட்டிசுட்டானை பிடித்துவிட்டதாக பெரும் ஆரவாரம் செய்யப்பட்டது. இத்தனைக்கும் ஒட்டிசுட்டான் வன்னிப் போர் முனையில் எவ்வித கேந்திர முக்கியத்துவத்தையும் கொண்டிருக்கவில்லை. குறிப்பிட்ட பகுதியை பிடிக்க சண்டை நடந்தால்தான் அப்பகுதி பிடிக்கப்பட்டது என்று கூறலாம். மறுதரப்பில் எதிர்ப்பே இல்லாததால், படையினர் ஒட்டிசுட்டானை சென்றடைந்தனர் என்றுதான் கூறவேண்டும்.

ஏற்கனவே மாங்குளம்-ஒட்டி சுட்டான் வீதியில் கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடுவை கடந்த ஆண்டே படையினர் கைப்பற்றியிருந்தனர். இதனையடுத்து அச்சாலை முழுக்க படையினர் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

கரிப்பட்ட முறிப்பில் இருந்து கிழக்காக ஒட்டிசுட்டான் பத்துகிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆனால் படையினர் கரிப்பட்ட முறிப்பில் அமைந்திருந்த முன்னரங்க நிலைகளில் இருந்து பார்த்தால் சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது ஒட்டி சுட்டான்.

கரிப்பட்ட முறிப்பில் இருந்தும் நெடுங்கேணியில் இருந்தும் ஒட்டிசுட்டான் நோக்கி இருமுனைகளில் படையினர் முன்னேறினர்.

நெடுங்கேணியில் இருந்து வடக்கே பத்து கிலோமீட்டர் தூரத்தில் ஒட்டி சுட்டான் இருக்கிறது. ஆனால், நெடுங்கேணியில் படையினரின் முன்னரங்கில் இருந்து பார்த்தால் சுமார் நாலு கிலோமீட்டர் தூரத்திற்குள் இருக்கிறது ஒட்டிசுட்டான்.

கரிப்பட்ட முறிப்பு படையணியும், நெடுங்கேணி படையணியும் ஒட்டிசுட்டான் சந்தியில் இருந்தன.

இப்போது கரிப்பட்ட முறிப்பு, ஒட்டிசுட்டான் நெடுங்கேணி பகுதிகளை இணைத்து பாதுகாப்பு வேலிகளை நிறுவி, தற்காப்பு நிலையை பலப்படுத்தியுள்ளனர்.

புலிகளின் தளமான முல்லைத் தீவில் இருந்து புலியணிகள் ஒட்டிசுட்டான் பகுதியூடாகவோ, மாங்குளம்-ஒட்டி சுட்டான் வீதியூடாகவோ ஊடறுப்பதை தடுக்கவே இந்த இணைப்பும், பாதுகாப்பு வேலிகளும். (வரைபடத்தை பார்க்கவும்)

புலிகளின் முல்லைத்தீவு தளத்தை நெருங்கும் முயற்சி என்றும் சில கணிப்புக்கள் கூறப்பட்டன. ஆனால் அது தற்போது நடக்க முடியாத காரியம்.

ஒட்டிசுட்டானில் இருந்து முல்லைத்தீவு முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதைவிட மாங்குளத்திலிருந்து கிளிநொச்சி போய்விடலாம். அதுவும் 30 கிலோ மீட்டர்.

எனவே, ஒட்டிசுட்டானை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் இராணுவ முக்கியத்துவம் எதுவும் இருக்கப்போவதில்லை. ஆனால் ஒட்டிசுட்டானை கைப்பற்றுவதற்கான நடவடிக்கையால் பதினைந்தாயிரம் மக்கள் வீடு வாசல்களை இழந்து நடுத்தெருவுக்கு சென்றுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா பொறுப்பேற்ற பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதல் நடவடிக்கையே பதினைந்தாயிரம்பேரை இடம்பெறச் செய்துவிட்டது. இனிமேல் இதெல்லாம் ஜனாதிபதிக்கு தெரியாமல் நடப்பதாக கூறமுடியாது.

ஒட்டிசுட்டானை கைப்பற்றி பாதுகாப்பு வேலி போட்டால் நெடுங்கேணி சார்ந்த பகுதிகளில் ஆட்டிலெறிகளை தைரியமாக நிறுத்தி வைத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பகுதிகளை நோக்கி ஏவலாம் என்றும் படையினர் கருதியிருக்கலாம்.

புலிகளின் முக்கிய தளம் நோக்கி தாக்குதல் நடத்துவதாக காண்பித்து பாதைத் திறப்பு பின்னடைவை பூசிமெழுகலாம் என்று பார்க்கிறார்கள்.

ஆனால் முல்லைத்தீவு நகரை ஆட்டிலறி ஷெல் எட்டாது. முல்லை மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளை மட்டும் எட்டும். முல்லைத் தீவுமீது தாக்குதல் நடத்துவதாக தெற்கில் தோள்தட்டிக் காட்ட அப்பாவி மக்களை ஷெல்களால் துரத்துவதாகவே முடியப்போகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மனித உயிர் இழப்புக்களும், உடமை அழிவுகளும் ஏற்படப் போகின்றன.

இலக்கே இல்லாமல் நிலங்களை கைப்பற்றி, அவற்றின் அருகே உள்ள குடிமக்களை அகதிகளாக்கும் நடவடிக்கையே இதுவாகும்.

இதற்கிடையே, இந்த சூட்சுமங்கள் புரியாமல், 'ஜயசிக்குறுய் நிறுத்தப்பட்டுவிட்டது, இது பேச்சுக்கான தக்க சகுனம்' என்று ஜோசப் பரராஜசிங்கம் பாராளுமன்றத்தில் பயங்கரமான தமாஷ் பண்ணியிருக்கிறார்.

பதினைந்தாயிரம் மக்களை இடம் பெயரச் செய்து, முல்லைத்தீவு மாவட்ட மக்களை மேலும் இடம் பெயரச் செய்யப்போகும் 'ரிவிபல'தான் நல்ல சகுனமா?

மேலோட்டமாக பார்த்துவிட்டு அவசரப்பட்டு கருத்துக் கூறிவிடுகின்றனர்.

ஷெல்களாலும், முன்னரங்க நிலைகளை பாதுகாக்க நடத்தப்படும் குண்டு வீச்சுக்களாலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் குடிமக்கள் இடம் பெயரப்போகின்றனர்.

'புலிகளின் தளத்திற்கு அடி கொடுக்கிறோம், புலிகள் பலவீனமாகிக் கொண்டிருக்கின்றனர்' என்று தெற்கில் 'ஷோ' காட்டப் போகிறது அரசு.

ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கற்சிலை மடு நோக்கியும், முத்தையன் கட்டுகுளம் நோக்கியும் ஷெல்லடி நடந்துள்ளது.

கற்சிலை மடு ஒட்டிசுட்டானில் இருந்து எட்டு கிலோ மீட்டரில் இருக்கிறது. முத்தையன் கட்டுக் குளம் பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது.

இத்தனை தூரத்திற்கு ஷெல் ஏவப்படும் அவசியம் என்ன? முன்னரங்க நிலைகளது பாதுகாப்புக்கு என்றும் கூறமுடியாதே.

படடியினர் பன்னிரண்டு கிலோ மீட்டருக்கு ஷெல் ஏவிக் கொண்டிருக்க, புலிகள் ஒட்டிசுட்டான் பகுதிக்குள்ளேயே இருக்கின்றனர்.

அப் பகுதியில் பரபரப்பான நடமாட்டங்களை அவதானித்து 6.12.98 அன்று மோட்டார் ஷெல்களை ஏவியுள்ளனர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனிக்க சென்றவர்கள் பலியாகியுள்ளனர்.

ஒட்டிசுட்டான் தமது பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக பிரசார சாதனங்கள் கூறிய மறுநாளே பலத்த அதிர்ச்சியான தகவலையும் அதே பிரசார சாதனங்கள் கூறவேண்டியதாகியது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரைக் கூட அதிஷ்டம்தான் காப்பாற்ற வேண்டி இருந்தது. ஜெனரல் நீல் டயஸ் என்னும் உயர் அதிகாரியே காயம்பட்டிருக்கிறார்.

தமது பிரசாரத்திற்கு படையினர் அழைத்துச் சென்ற பத்திரிகையாளர்களும் படப்பிடிப்பாளர்களும் புலிகளின் தாக்குதல்களை பதிவு செய்து கொண்டு திரும்பி வந்தனர். 4 படையினர் பலி. 42 பேர் காயம் என்று அரசு கூறியுள்ளது. 42 பேரில் பலரது நிலை கவலைக்கிடம் என்கின்றன செய்திகள்.

ஒட்டிசுட்டானில் புலிகள் எவருக்கும் இதுவரை காயம் ஏற்பட்டதாகக்கூட தகவல் கூறப்படவில்லை.

மொத்தத்தில் சமர் தொடர்கிறது. பெயர் மாற்றப்பட்டுள்ளது. ஆனால் இந்த பெயர் மாற்றம் அரசு தான் நினைத்த இலக்குகளை நினைத்த காலத்தில் எட்ட முடியாத தோல்வியின் அடையாளம்தான்.

'ஜயசிக்குறுய்' போலவே ரிவிபலவும் பெயர் மாற்றப்பட வேண்டி ஏற்படலாம். அல்லது ரிவிபல-1,2 என்று குறிப்பிட வேண்டி இருக்கலாம்.

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



***1996 டிசம்பரிலும்*** பாதுகாப்புத் தொடர்பானவர் ரெண்டு எழுத்தாரின் பகுதிக்குள் சென்று தப்பிவந்தவர். அன்றும் ரெண்டு எழுத்துத் தலைவருக்கு நித்திரை வந்திருக்காது. சமீபத்திலும் வன்னியில் ரெண்டு எழுத்தாரிடம் தப்பியிருக்கிறார். ரெண்டு எழுத்தாரின் தலைவருக்கு அன்றும் தூக்கம் வந்திருக்காது. அவருக்குக் கவலை; இவருக்கு சந்தோசம்!

***திருவானமலையின்*** நகரத்துக்குத் தலைவர் வடக்கு-கிழக்கு புதிய ஆளவந்தாரை விழுந்தடித்து வரவேற்றுள்ளாராம். 'சோழியன் குடுமி சும்மா ஆடுமோ?' அவரைப் பற்றிய ஊழல் புகார்களை உறுதிப்படுத்திய விசாரணை அறிக்கையை முன்னாள் ஆளவந்தார் அமுக்கி வைத்திருந்தவர். இந்நாள் ஆளுநர் 'அதைக் கிளறக்கூடாது என்றுதான் வரவேற்பாம்!

***வவுனியாவில் வீரசிங்கத்தாரின்*** இறுதிச் சடங்கில் அனாமதேய பிரசுரங்கள் வைக்கப்பட்டதல்லோ? வவுனியாவில் உள்ள தமிழ்க்கட்சி ஒன்றுதான் நைசாகக் கொண்டுபோய் வைத்ததாம். 'கொலைகாரக் கும்பலின் ஆட்டம் விரைவில் ஓயும்' என்று பிரசுரத்தில் எச்சரிக்கை காணப்பட்டது. இதெல்லாம் ஒருபுறமிருக்க வவுனியா சனம் என்ன சொல்லுகினம் தெரியுமோ? "வீரசிங்கத்துக்காக யார் கொஞ்சம் ஓவராக கண்ணீர் விடுகினம் என்று பார்த்தோம். அவைதான் கொலைக்குக் காரணம் என்று புரிந்துபோச்சு!" பொல்லாத சனமப்பா...!

***வெளிநாட்டு விவகாரத்துக்குப்*** பொறுப்பானவர் பத்திரிகையாளர்களை நல்ல தொடர்பில் வைத்திருக்க விரும்புகிறார். விருந்துபசாரம் நடத்துகிறார். ரெண்டு எழுத்தாருக்கு எதிராக வெளியுலகில் கடும் பிரசாரம் நடப்பதாக உள்நாட்டுக்கு அறிவிக்க பத்திரிகைகள் தேவைதானே.....?

***ஐ.பி.சி. வானொலி*** ஜெர்மனியில் இருந்து அலைவரிசை பிடித்து இலங்கைவரை தெளிவாகக் கேட்டது. ஜெர்மன் அரசுடன் பேசி ஒலிபரப்பு வசதியை நிறுத்த கதிரர் முயன்றாராம். சில நாட்கள் ஒலிபரப்பு நிறுத்தப்பட்டு வேறு அலைவரிசையில் ஒலிபரப்பானது. பின்னர் புகாரில் உண்மை இல்லை என்று ஜெர்மன் அரசுக்கு ஐ.பி.சி. எடுத்துக் கூறியதால், மறுபடி அதே அலைவரிசையில் ஐ.பி.சி.யைத் தெளிவாகக் கேட்க முடிகிறது.

***'ரொட்டி சுட்டான்,*** ரொட்டி சுட்டான்' என்று நண்பர் பாடினார். "ரொட்டி சுட்டது சரிதான். ரொட்டியில் ஒரு பகுதியைத்தானே கையில் வைச்சிருக்கிறீர். மீதி எங்கே எங்கே?" என்று கேட்டேன். "ஒரு பகுதி கையில் வந்தாலே அதைக்காட்டி வயிற்றைத் திருப்தி செய்து போடுவேன்!" என்டு சொல்லுறார். பாதி ரொட்டியும் எப்ப கைவிட்டுப் போகுதோ? என்று பெருமூச்சுத்தான்விட முடிந்தது. என் நண்பர் மாதிரி பாதியை வைச்சுக்கொண்டே துள்ளுற ஆட்களும் இருக்கினம்தானே! கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர அறிவதே மெய்!

***தாமாக வந்த*** மக்கள் என்பது சரியான கூற்றல்லவாம். வெளியேற முடியாத கட்டத்தில் ஓரமாக இருந்த குடியிருப்பாளர்கள் சீருடை முற்றுகைக்குள் மாட்டியதாக பட்சி சொல்லுது.

***திருவானமலையின்*** முன்னாள் பிரதிநிதி பெயரில் மன்றம் ஒன்று இயங்குதாம். முன்பு அவர் உயிருடன் இருந்தபோது அவரது பெயரைச் கெடுப்பதில் பெரும் பங்கு வகித்த மன்றம் இது தானாம். முன்னர் பிரதிநிதி வேலைகள் பெற்றுத் தந்த ஆட்களிடம் மன்றத்தின் பெயரில் சமீபத்தில் நிதி கோரப்பட்டுள்ளதாம். பிரதிநிதியின் சகோதரர்தான் வசூல் வேட்டையில் முன்னணியில் நிற்பதாகத் தகவல்.



படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**ஆ**று மாதத்திற்குள் வடபகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரப்போவதாக காலவரையறை குறித்தனர் படையினர்.

வடபகுதியெங்கும் குண்டு வீச்சுக்கள் நடந்தன. இலண்டனில் இருந்து வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை நிருபர் கிறிஸ்தோப்பர் மொறிஸ் அப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து தகவல்களை திரட்டினார்.

பெப்ரவரி 7ம் திகதி 1991ல் கார்டியன் பத்திரிகையில் அவர் அனுப்பிய தகவல்கள் வெளியாகின. அதிலிருந்து ஒரு பகுதி:

"கடந்த சில வாரங்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சகல பிரதேசங்களிலும் சிறீலங்கா விமானப் படை குண்டு மழை பொழிந்து வருகிறது.

குண்டுகள் எல்லாம் அப்பாவிப் பொதுமக்கள் வாழும் பகுதிகளிலேயே வீழ்ந்துள்ளன.

முறிகண்டியில் குண்டு வீழ்ந்து மூன்று வயது பெண் குழந்தை ஒன்று உட்பட மூன்றுபேர் கொல்லப்பட்டனர்.

அங்கே வசிக்கும் பொதுமக்கள் விடுதலைப் புலிகள் எவரும் அந்த இடத்தில் இருக்கவில்லை என்று கூறுகின்றனர்.

புலிகளுடன் போர் புரிய இயலாத படையினர் அப்பாவிப் பொது மக்கள்மீது ஆத்திரத்தை தீர்த்துக் கொள்வதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

சிறீலங்கா அரசாங்கம் தங்களுடைய தாக்குதல்கள் பொது மக்களுக்கு எதிராகவே நடத்தப்படுவதாக கூறினாலும் அப்பாவி பொதுமக்களுக்கு எதிராகவே நடத்தப்படுகின்றன" என்று கார்டியன் தெரிவித்திருந்தது.

## வல்லைக் கடலில் கடற் கரும்புலித் தாக்குதல்!

### ரஞ்சன் தகவல்

புலிகளுடனான யுத்தம் தொடர்பாக சில புள்ளி விபரங்களை ரஞ்சன் விஜயரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

1990 ஜூன் 11ம் திகதி முதல் 1991 ஜனவரி 31ம் திகதிவரை 1441 பொலிஸ், இராணுவத்தினர் இறந்து அல்லது காணாமல் போயுள்ளனர். 1981பேர் காயமடைந்துள்ளனர்.

காயப்பட்டோரில் 1309 பேர் மருத்துவமனைகளில் இருந்து திரும்பிவிட்டனர். 672பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

270 இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர். அவர்களுக்கு செயற்கை கால்கள் பொருத்தப்பட்டுள்ளன" என்று ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.

1441 பேர் பலியானதாக அரசு ஒப்புக் கொண்டதால் இழப்புத் தொகை மேலும் அதிகமாகவே இருந்திருக்கும்.

அரசாங்கம் எப்போதுமே உண்மையான போர்முனைத் தகவல்களை வெளியிட்டதில்லை.

தமது இழப்பை குறைத்துக் கூறுவதும், எதிர்த் தரப்பு இழப்பை மூன்று நான்கு மடங்கு அதிகமாகவும் கூறுவதையே ஐ.தே.கட்சி அரசும் கடைப் பிடித்தது.

### திருமலை தாக்குதல்

1991 மார்ச் ஆறாம் திகதி திருமலையில் திரியாய் என்னும் இடத்தில் இ.போ.ச. பஸ் வண்டியில் சென்ற இராணுவத்தினர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இ.போ.ச. பஸ் வண்டிகளில் படையினர் சென்று வருவதை அவதானித்த புலிகள் தாக்குதலுக்கு திட்டமிட்டனர்.

திரியாயில் கண்ணிவெடி புதைத்து காத்திருந்தனர் புலிகள். எதிர்பார்த்தபடியே பஸ் வண்டியில் பொலிஸ் இராணுவப் பிரிவு வந்து கொண்டிருந்தது.

கண்ணிவெடி வெடித்தது. பஸ் தூக்கிப் போடப்பட்டது. எட்டு இராணுவத்தினர் பலியாகினர். 28 பேர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதலுக்கு பழிவாங்கும் விதமாக திரியாய் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலுக்கு பயந்த திரியாய் மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்.

### சமாதான முயற்சி

இலண்டனில் 'பீஸ் குவேக்கர்' என்னும் சமாதானத்துக்கான அமைப்பு ஒன்று இருக்கிறது.

இவ்வமைப்பினருக்கும் அமெரிக்க சி.ஐ.ஏக்கும் இடையே தொடர்பு இருப்பதாக சந்தேகங்கள் நிலவின.

பீஸ் குவேக்கர் அமைப்பினர் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சமாதான பேச்சு ஒன்றை ஆரம்பிக்க தாம் உதவுவதாக முன்வந்தனர்.

அதாவது மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளர் என்ற பாத்திரத்தை வகிக்க 'பீஸ் குவேக்கர்' முன்வந்தது.




மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பதும் மூன்றாம் தரப்பு தொடர்பாளர், ஏற்பாட்டாளர் அனுசரணையாளர் என்பதும் ஒன்றல்ல.

மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளராக செயற்பட்டு, அரசுக்கும், புலிகளுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் பீஸ் குவேக்கரின் பணி முடிந்துவிடும்.

பீஸ் குவேக்கரின் பிரதிநிதிகள் தம்மை வந்து யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம் என்று புலிகள் கூறினார்கள்.

1991 பெப்ரவரி மாதத்தில் பீஸ் குவேக்கரின் ஆசியப் பிரதிநிதி யாழ்ப்பாணம் சென்று புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.


கடற்கரும்புலி சிதம்பரம்

புலிகளின் அன்றைய பிரதித்தலைவர் மாத்தையாவும், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவரைச் சந்தித்தனர்.

"விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு தடையானவர்களல்ல. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு புலிகள் தயாராக உள்ளனர்." என்று மாத்தையாவும், அன்ரன் பாலசிங்கமும் கூறினார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு திரும்பிய 'பீஸ் குவேக்கர்' பிரதிநிதி அரசாங்க பிரமுகர்களையும் சந்தித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகார ஆலோசகராக இருந்த பிரட்மன் வீரக்கோனையும் சந்தித்தார்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொழும்பில் சந்தித்து உரையாடினார்.

இந்த முயற்சிகள் இரகசியமாக நடந்தபோதும், ஏனைய தமிழ்க் கட்சிகள் ஊடாக பத்திரிகைகளுக்கு கசிந்துவிட்டன.

ஏதோ பெரும் திருப்பம் ஏற்படப்போவது போன்றும், பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் போவது போன்றும் செய்திகள், விமர்சனங்கள் என்று பக்கம் பக்கமாக வெளியாகத் தொடங்கிவிட்டன.

பீஸ் குவேக்கர் அமைப்பிடம் அரசையும், புலிகளையும் பேச்சு மேடைக்கு கொண்டு வரும் சக்தி கிடையாது.

அரசும் சரி, புலிகளும் சரி, தாம் பேச்சுக்களுக்கோ, சமாதான முயற்சிக்கோ தடையில்லை, எதிரானவர்களல்ல என்பதை வெளிப்படுத்தவே அந்த அமைப்பின் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

சில வாரங்கள் பரபரப்பாக பேசப்பட்ட 'பீஸ் குவேக்கரின்' சமாதான முயற்சி அப்படியே அமுங்கிப்போனது.

### தூதர் அதிர்ச்சி

சிறீலங்காவின் பிஜித் தீவுக்கான தூதருக்கு ஏற்பட்ட சுவாரசியமான அனுபவம் ஒன்றை இங்கு தருகிறேன்.

1991இல் சிறீலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு பிஜித்தீவில் உள்ள பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்திருந்தார் பிஜித் தூதர் சமரவீர.

'பிஜி ரைம்ஸ்' என்ற பத்திரிகையிலேயே விளம்பரம் செய்திருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் வாழ்த்துச் செய்தி ஒன்று அவரது பெரியளவான படத்துடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

'இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கே எனது நிகழ்ச்சி நிரலில் முதலிடம் கொடுத்துள்ளேன்.' என்று அவரது செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதே பத்திரிகையில் பிறிதொரு பக்கத்தில் பிரசுரமாகி இருந்த படமும் செய்தியும் சிறீலங்கா தூதருக்கு அதிர்ச்சியளித்தது.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் படத்தோடு, "ஆண்டவன் கிருபையால் ஒருவரும் கைவைக்க முடியாத மனிதன்" என்று கீழே குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைக் கண்ட பிஜித்தூதர், "எவ்வளவு தூரத்தில் இருக்கும் பிஜித்தீவிலும் இந்த மனிதனிடம் இருந்து தப்ப முடியவில்லையே" என்று கூறியதாக தமிழ் நேசன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

## வவுனியாவில் பதினொருநாள் சமர்

### கடும் மோதல்

வவுனியாவில் இருந்து ஓமந்தை நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கும், புலிகளுக்கும் இடையே பலத்த சமர் மூண்டது.

மே 2ம் திகதி முதல் 11ம் திகதிவரை சமர் தொடர்ந்தது.

முதலில் படையினரை முன்னேற அனுமதித்தனர் புலிகள்.

முன்னேறிய படையினர் புலிகளின் நிலைகளை கைப்பற்றி நிலைகொண்டுள்ளதாகவும், தொடர்ந்து முன்னேறி வருவதாகவும் அரசு செய்தி கூறியது.

அரசு கூறிய செய்தியை எவ்வித மாற்றமும் இன்றி சில பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன.

வவுனியாவில் படையினர் முன்னேற்றம் புலிகள் பின்வாங்கினர் என்று ஆங்கில பத்திரிகைகள் தலைப்புச் செய்தி போட்டன.

இச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது, முன்னேறிய படையினர் புலிகளின் மோட்டார் ஷெல்களை சந்தித்துக் கொண்டிருந்தனர்.

பசீலன் 2,000, குமரப்பா 5,000 ஆகிய மோட்டார்கள் ஏவிய ஷெல்களால் படையினரின் முன்னேற்றம் தடைப்பட்டது.

சண்டையின் முடிவில் 17 படையினரின் உடல்களை புலிகள் கைப்பற்றினார்கள். முழுமையான விபரங்களை படைத்தரப்பு அறிவிக்கவில்லை. எனினும் படை நகர்வு முயற்சி கைவிடப்பட்டது.


கடற்கரும்புலி ஜெயந்தன்

புலிகள் தரப்பில் ஐந்துபேர் பலியானதாக கூறப்பட்டது. படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும் புலிகளின் முறியடிப்பு சமருக்கு பால்ராஜ் தளபதியாக இருந்தார்.

படை நடவடிக்கை தோல்வியில் முடிந்ததை படைத் தளபதிகளால் ஏற்க முடியவில்லை.

"நாம் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டோம். அந்தப் பணி முடிவடைந்துள்ளது. எனவேதான் படையினர் மீண்டும் முகாம் திரும்பியுள்ளனர்" என்று படை அதிகாரி ஒருவர் கூறினார்.

### கடற் தாக்குதல்

கடற் கரும்புலிகளின் முதலாவது தாக்குதல் 10.07.90 அன்று வடமராட்சி கடற்பகுதியில் இடம்பெற்றது.

மூன்று கடற்கரும்புலிகளால் கடற்படையினரின் 'எடித்தாரா' கட்டளைக் கப்பல் தாக்கி சேதமாக்கப்பட்டது. இதுபற்றி முன்னரே விபரிக்கப்பட்டுவிட்டது.

அதன்பின்னர் இரண்டாவது கடற்கரும்புலித் தாக்குதல் 04.05.91இல் மேற்கொள்ளப்பட்டது.

கடற்படையினரின் கட்டளைக் கப்பல்களில் ஒன்றான 'அபித்தா' கப்பலை தாக்கித் தகர்ப்பதற்கு திட்டமிடப்பட்டது.

இரண்டு கரும்புலிகள் வெடிமருந்து நிரப்பப்பட்ட படகுடன் சென்று தாக்குதல் நடத்துவதுதான் திட்டம்.

கரும்புலியாக செல்ல இருந்த ஒருவரை கடைசி நேரத்தில் தவிர்க்க முடியாத காரணத்தால் அனுப்ப இயலவில்லை.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையிடம் வந்த சிதம்பரம் என்னும் புலி உறுப்பினர்; "என்னை அனுப்புங்கோ அண்ணை, நான் போகிறேன்." என்று தானாக முன்வந்தார்.

சிதம்பரம், ஜெயந்தன் இருவரும் கடற் கரும் புலிகளாக வெடிமருந்து நிரப்பப்பட்ட படகில் ஏறினார்கள்.

அவர்கள் புறப்பட்டது முன்னிரவு நேரத்தில்.

வல்லைக் கடலில் கரையில் இருந்து சுமார் எட்டுமைல் தொலைவில் தரித்து நின்றது 'அபித்தா.'

### இறுதிக் கட்டம்

திசையறி கருவியின் உதவியுடன் கரும் புலிப் படகு புறப்பட்டு இலக்கை நோக்கி விரைந்தது.

ஜெயந்தன் படகை செலுத்திக் கொண்டிருந்தார். சிதம்பரம் படகில் இருந்து வோக்கி ரோக்கி மூலம் கரையில் உள்ளோருடன் தொடர்பை கொண்டிருந்தார்.

நான்கு மைல் தூரத்தை கடலில் கடந்துவிட்டனர்.

"நாங்கள் கதைப்பது கேட்கிறதா?" என்று கரையிலிருந்து சூசை கேட்டார்.

"நீங்கள் கதைப்பது தெளிவாகக் கேட்கிறது!" என்று எவ்வித பதற்றமும் இல்லாமல் பதில் வருகிறது.

மரணத்தை சந்திக்கப் போகும் எவ்வித சலனமும் இவர்கள் குரலில் ஒலிக்கவில்லை.

சில நிமிடங்களில் கரும்புலிப் படகில் இருந்து தளபதி சூசைக்கு தகவல் வருகிறது:

"எங்களுடைய இலக்கை கண்டு விட்டோம்!"



கரையில் இருக்கும் கடற்புலிகள் படபடப்புடன் காத்திருக்கின்றனர்.

மேலும் சில நிமிடங்கள் கரைகின்றன.

வோக்கி உயிர்க்கிறது.

"திட்டமிட்டபடி செய்யப்போகிறோம்!" என்று குரல் வருகிறது.

அதுதான் அவர்களது இறுதித் தொடர்பு. இனிமேல் தொடர்பு கொள்ளவே முடியாத இடத்திற்கு போகப் போகிறார்கள்.

கரையில் நின்ற கடற்புலிகள் கண் கொட்டாமல் கடலையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வோக்கி ரோக்கியில் காதைக்கொடுத்தபடி காத்திருக்கிறார்கள்.

சிதம்பரமும், ஜெயந்தனும் சேர்ந்து வோக்கி ரோக்கியில், 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று உரத்துக் கத்துகின்றனர்.

இதுதான் இறுதியான குரல்கள். இனி அவர்கள் குரலைக் கேட்கவே முடியாது.

அவர்கள் குரல் ஒலித்த அடுத்த சில நொடிகளில் கடலில் பெரு வெளிச்சமும், வெடி ஓசையும் கரைவரை எட்டுகிறது.

தாக்குதல் நடத்த முன்பாக 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று உரத்து முழங்குவதை கரும்புலிகள் வழக்கமாக கொண்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்போகும்போது அவர்களிடம் வோக்கி ரோக்கியும் இருக்கும்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று அவர்கள் கூறினால், இலக்குமீது பாயப் போகிறார்கள் என்பதை மறு முனையில் உள்ள பொறுப்பாளர் அறிந்து கொள்வார்.

'அபித்தா' கப்பல் பாரிய சேதத்துடன் கடலில் தத்தளித்தது. மறுநாள் அக் கப்பலை கடற்படையினர் கட்டி இழுத்துச் சென்றனர்.

கப்டன் சிதம்பரத்தின் சொந்தப் பெயர் பெரிய தம்பி சந்திரன், வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்.

சிறுவயதில் மீன்பிடித் தொழில் செய்துவந்தார். 1989இல் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார். பலாலி இராணுவத் தளத்திற்கு முன்பாக ஆரம்பத்தில் காவல் பணி. பின்னர் கடற்புலிகளில் இணைந்து கரும்புலியானார்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# எதிரணி நிலைப்பாடு – நஷ்டம் யாருக்கு?

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தினத்தில் ஆற்றிய உரை உள்நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயாராக இருப்பதாக வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்த செய்தி இலங்கை அரசை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

இக் கட்டத்தில் எதிர்க்கட்சி எடுத்துள்ள நிலைப்பாடும் அரசின் இராணுவத் தீர்வு முனைப்பை பலவீனப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இதனை கணக்கில் கொள்ளாமல் சில விமர்சகர்களும், எதிர்க்கட்சிதானே என்ற துணிச்சலில் ஐக்கிய தேசியக் கட்சியை தாறுமாறாக தாக்கி வருகின்றனர்.

அரசாங்கத்தை மறைமுகமாக திருப்திப்படுத்தி 'நடுநிலை' தோற்றம் காட்டும் உத்தியையும் சில விமர்சகர்கள் கையாண்டு வருகின்றனர்.

இலங்கை தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுத்தல் என்ற அடிப்படையிலிருந்தே ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையிலான பிணக்குகளை தமிழ் பேசும் தரப்பு உற்று நோக்க வேண்டும். அவற்றை பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

பொது ஜன முன்னணிக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ தமது சொந்த நலன்களுக்கு அப்பாற்பட்டு இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும் பொது நோக்கம் இல்லையென்பது தெளிவாகிவிட்டது. எனவே, இந்த இரண்டு பெரும்பான்மை இனக் கட்சிகளில் எக்கட்சி சிறந்த கட்சி என்ற ஆராய்சி அவசியமற்ற ஒன்றாகும்.



எனினும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் யுத்தம் என்பது தென்னிலங்கையில் ஆட்சி அதிகாரத்தை தக்கவைக்கவும், தொடர்ந்து தேர்தல்களில் வெல்வதற்குமான துருப்புச் சீட்டாக உபயோகப்பட்டதில்லை. எனவே மூர்க்கமான படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபடுவதும், மோதல் தீவிரமானால் பின்வாங்கி முகாம்களுக்கு திரும்புவதுமான நடவடிக்கைகளே பெரும்பாலும் இடம் பெற்று வந்தன.

ஆனால், இன்றைய அரசாங்கத்தின் ஒரே ஒரு சாதனையே யுத்தம் மூலம் பெற்ற வெற்றிகள்தான். யாழ் குடாநாட்டை பிரபாகரனிடம் இருந்து மீட்டுவிட்டோம், இன்னமும் குறிப்பிட்ட சில பகுதிகளே உள்ளன, "அவற்றையும் மீட்டுவிடுவோம் என்றே ஜனாதிபதி சந்திரிக்கா தென்னிலங்கை கூட்டங்களில் கூறிவருகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி 17 வருடங்களாக நாட்டையாண்டது. தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் அது ஒன்றும் பொற்காலமல்ல. ஆனால் அக் கட்சியிடம் தேர்தல் பிரசார மேடைகளில் கூறுவதற்கு சில சாதனைகள் கைவசம் இருந்தன.

ஆடைத்தொழிற்சாலைகள், வீடமைப்பு வசதிகள், திறந்த பொருளாதாரக் கொள்கை பற்றிய ஆரவாரங்கள் என்று பலவற்றை தேர்தல் பிரசார மேடைகளில் கூறக்கூடியதாக இருந்தது.

ஆனால், இன்றைய ஆட்சியாளர்களுக்கு யுத்தம் தொடர்பான புள்ளிவிபரங்கள் தவிர வேறெந்த சாதனையும் சொல்லக் கூடியளவில் கைவசம் இல்லாதிருக்கிறது.

எனவே, மேலும் மேலும் புதிய பகுதிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதாக காண்பிக்க மூர்க்கமான இராணுவ முனைப்புக்களில் ஆட்சியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில்கூட முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானை கைப்பற்றியதாக காண்பிக்க அப்பகுதி நோக்கி சரமாரியான ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. சுமார் பத்தாயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மன்னார் மடுப் பகுதியில் உள்ள மக்களை அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களில் தங்குமாறும், பாரிய படை நடவடிக்கை ஆரம்பமாகப் போவதாகவும் அறிவித்திருந்தார் அன்றைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின.

அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களும், தமிழ்க் கட்சிகளும் அதனையிட்டு ஆட்சேபம் தெரிவித்திருந்தன. அதன் காரணமாக அந்த நடவடிக்கையை பிரேமதாசா அரசு கைவிட்டிருந்தது.

தற்போதைய ஆட்சியாளர்கள் யுத்தம் நடத்தப்படும் முறைதொடர்பான கண்டனங்களைமிட்டு அலட்சியம் காட்டுவதுடன், போர் மூண்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களது அன்றாட அவலங்கள் தொடர்பாக கண்களையும், காதுகளையும் மூடிக்கொண்டு போரை தொடர ஆணை பிறப்பித்தபடியும் உள்ளனர்.

எதிர்க்கட்சியாக உள்ள கட்சி ஆளும் கட்சியுடன் ஒத்துழைக்கக்கூடிய அரசியல் சூழல் இங்கு எக்காலத்திலும் நிலவியதில்லை.

அண்ணன் எப்போது சாவான் திண்ணை எப்போது காலியாகும்? என்ற எதிர்பார்ப்போடுதான் எதிர்க்கட்சியாக உள்ள கட்சி அரசியல் நடத்தி வருவதுண்டு. எதிர்க்கட்சியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி இருந்தபோதும் அதுதான் அணுகுமுறையாக இருந்தது.

எனவே, சகல கட்சிகளின் அரசியலும், அவற்றின் செயற்பாடுகளும் பற்றி கடந்த ஐம்பதாண்டு காலமாக தமிழ் பேசும் தரப்புக்கு போதியளவு அனுபவம் இருக்கிறது.

இந்த அனுபவங்களை மறக்கடிக்கும் விதமாக தமது நலன்களை முன்னிறுத்தும் தமிழ்க் கட்சிகளும், நடுநிலை நாடகமாடும் சில விமர்சகர்களும் ஏதோ எதிர்க் கட்சிதான் தீர்வுக்கு தடை என்பதுபோலவும், எதிர்க்கட்சி ஒத்துழைத்தால் அரசியல்தீர்வு சாத்தியமாகிவிடும் என்பதுபோலவும் சித்தரிக்க முனைகின்றனர்.

முதலாவது பிரச்சனை யாதெனில், எத்தகைய பொதிக்கு எதிர்க்கட்சி ஆதரவை அரசு கோருகிறது என்பதாகும்.



வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்ற அடிப்படையில் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் முன்வந்திருக்க வில்லை. இன்றைய ஆட்சியாளர் போன்றே அவர்களும் எதிர்க்கட்சிமீது பழியைப் போட்டபடி காலத்தை கடத்தியிருந்தனர்.

ஆயினும் தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்து, மலையகத் தமிழ் மக்களுக்கான வாக்குரிமை, வாகனங்களில் சிங்கள சிறீ ஒழிப்பு போன்ற சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்களின் இனப்பிரச்சனை தீர்வைப் பொறுத்தவரை மேற்கண்ட நடவடிக்கைகள் யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றவையே.

அத்தகைய சோளப் பொரிகளைக்கூட சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது பதவிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு வழங்க முன்வந்ததில்லை.

தற்போதும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன முன்னணி ஆட்சியாளர்களின் நான்கு ஆண்டு ஆட்சிக்காலத்தில் முன்னெப்போதையும் விட புதிய சுமைகளை தமிழ் பேசும் மக்களின்மீது திணிக்கப்பட்டுள்ளன.

தமிழ் பேசும் மக்களின் தாயகப் பூமியை கூறுபோடுகின்ற அரைகுறையான பொதியை வைத்துக்கொண்டு, அதற்கு ஆதரவு கோருகிறது அரசு.

போனால் போகிறது என்று எதிர்க்கட்சி இந்தப் பொதியை ஆதரிக்குமானால், அப்படி ஓர் அதிசயம் நடக்குமானால், தமிழ் பேசும் தரப்பின் தலையில் இடி விழுந்த கதையாகிவிடும்.

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்துவிட்ட அதிசயம் கண்டு உலகம் வியந்து நிற்க, அந்த ஆரவாரம் மத்தியில் அரைகுறைப் பொதியை தமிழ் பேசும் மக்களின் தலையில் கட்டியடித்துவிடுவர்.

இதனை எதிர்ப்போரை சமாதான எதிரிகளாக சித்தரித்து மேலும் மூர்க்கமான போரைத் தொடுத்து நிற்பர்.

எனவே தற்போதைய நிலையில் ஆளும் கட்சியோ, எதிரணியோ தாமாக முன்வந்து தகுந்த தீர்வை முன்வைக்கப்போவதில்லை என்பது நன்கு புலனாகின்றது.

இந்நிலையில், இரு பெரும் சிங்கள அரசியல் கட்சிகளையும் ஒன்றுபடுத்துவதைவிட, அவற்றுக்கிடையேயான முரண்பாட்டை விவேகமாக கையாள்வது ஒன்றே பயனுடையதாகும்.

இரு கட்சிகளுமே தமதுசொந்த அரசியல் லாபம் கருதியே நிலைப்பாடுகளை எடுக்கின்றன. அவ்வாறு எடுக்கும் நிலைப்பாடுகளில் எக் கட்சியின் நிலைப்பாடு தமக்கு சாதகம் என்பதையே தமிழ் பேசும் தரப்பு உற்று நோக்க வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் ஆளும் தரப்பின் பிரதான நிலைப்பாடாக இராணுவத்தீர்வு விளங்குகிறது. யுத்த வெற்றி என்பதோடு ஆட்சியாளரின் தேர்தல் வெற்றிக் கனவுகளும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

இத்தகைய நிலைப்பாடு தமிழ்பேசும் தரப்பின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளை பலவீனப்படுத்தும் இலக்கை கொண்டிருக்கிறது. அதே சமயம் அன்றாடம் பல இலட்சக்கணக்கான மக்களை வடக்கு கிழக்கில் அன்றாட அவலங்களுக்கு உள்ளாக்கியுமுள்ளது.

எனவே, அரசின் நிலைப்பாட்டை பலவீனமாக்கக்கூடிய சக்திகளோடு, தற்காலிகமாகவேனும் கைகோர்த்து நிற்பதே தமிழ் பேசும் தரப்பின் தந்திரோபாயமாக திகழவேண்டும்.

அந்தவகையில் எதிர்க்கட்சி தற்போது எடுத்துள்ள நிலைப்பாடுகளை தமிழ் பேசும் தரப்பு வரவேற்க கூடியதாக இருக்கிறது.

தீர்வுப் பொதியை 'செத்த பொதி' என்று எதிரணித் தலைவர் கூறியுள்ளார். ஏற்கனவே விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் இதனையே கூறியிருந்தார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய உரையை எதிரணி வரவேற்றுள்ளதுடன், பேச்சு ஒன்றுக்கான நிர்ப்பந்தத்தை அரசுக்கு ஏற்படுத்தும் விதமாகவும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இக் கருத்துக்கள் எதிரணி தமிழ் பேசும் மக்கள்மீது கொண்ட காதலினால் கூறிவரும் கருத்துக்களல்ல. ஆனால், இன்றைய இராணுவத்தீர்வு முனைப்பால் தமிழ் பேசும் தரப்பு பலவீனமாகிவிடக்கூடாது என்று நினைப்போருக்கு எதிரணியின் நிலைப்பாடு வரவேற்கத்தக்க ஒன்றேயாகும்.

அதேபோல பொதியை 'செத்த பொதி' என்று எதிரணித் தலைவர் கூறியிருப்பதும் தமிழ் பேசும் தரப்புக்கு சாதகமான கூற்றேயாகும்.

அரைகுறை பொதியை சர்வதேச சமூகம் முன்பாக காண்பித்தபடி, தனது இராணுவத்தீர்வு முனைப்பையும், அதன் விளைவான அவலங்களையும் மூடிமறைக்க முற்படும் ஆட்சியாளரின் பிரசாரத்திற்கு எதிரணித் தலைவரின் கூற்று பாதகமானதேயாகும்.

அதேசமயம், இலங்கைக்குள் இனப்பிரச்சனையோடு சம்பந்தப்பட்ட எத்தரப்பும் தாமாக முன்வந்து இனப்பிரச்சனை தீர்வுக்கு முன்வரப்போவதில்லை.

எனவே சகல தரப்புக்கும் அழுத்தம் தரக்கூடிய மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே தேவையாகும். அந்த நிலைப்பாட்டுக்கும் எதிரணித் தலைவரின் கூற்றை தமிழ் பேசும் தரப்பு வெளியுலகின் முன்பாக ஆதாரமாகக் காண்பிக்கலாம்.

ஆனால், கிடைத்துவரும் செய்திகள் அதிர்ச்சியளிப்பதாய் உள்ளன. தமிழ்க் கட்சிகளையும், சில விமர்சகர்களையும் வைத்தே எதிர்க்கட்சிக்கு எதிரான பிரசாரங்களை முடுக்கிவிட ஆளும் தரப்புக்குள் உள்ள முக்கிய அமைச்சர் ஒருவர் அன்புக் கட்டளைகளை பிறப்பித்துள்ளதாக தெரியவந்திருக்கிறது.

எதிர்க் கட்சிக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் ஊடாக சர்வதேச இராஜதந்திர மட்டத்தில் எதிர் பிரசாரங்கள் நடத்துவதன் மூலம், எதிர்க்கட்சியின் நிலைப்பாடுகளை முக்கியத்துவம் இழக்கச் செய்யவே ஆளும் தரப்பு முயற்சித்து வருகிறது.

போரை நிறுத்துமாறு எதிர்க்கட்சியே கோருவது என்பது சர்வதேச இராஜதந்திர மட்டத்தில் உற்று நோக்கப்படும் விடயமாகும். எனவேதான் தமிழ் பேசும் தரப்பு தம் பக்கம் இருப்பதாக காட்டிக் கொள்ள தமிழ் பேசும் கட்சிகளது தயவை நாடியுள்ளது ஆளும் தரப்பு.

மாவீரர் தினத்தில் பிரபாகரனின் உரையும், உரை தொடர்பான உள்நாட்டு, வெளிநாட்டு ஆதரவு கருத்துக்களும் ஆட்சியாளர்களை அதிர வைத்துள்ளன.

இந்நிலையில்தான் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அறிக்கையும் புலிகளை கண்டிப்பது போன்ற தொனியில் வெளியானது.

மாவீரர்தின உரையால் புலிகளுக்கு ஏற்பட்ட அரசியல் சாதகங்களை சீர்குலைக்கவே அந்த அறிக்கை பெறப்பட்டு செய்தி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது என்றும், முக்கிய அமைச்சர் ஒருவரே பின்னணியில் நின்றுள்ளார் என்றும் சில சந்தேகங்கள் வெளியாகியுள்ளன.

செய்தி நிறுவனங்கள் பெரிதுபடுத்திய அளவுக்கு அந்த அறிக்கை முக்கியத்துவம் கொண்டிருக்கவில்லை.

ஐ.நா. அபிவிருத்தி திட்ட அமைப்புக்கு எந்தவொரு நாட்டு அரசியல் பிரச்சனை பற்றியும் விமர்சனம் செய்யும் வேலை இருப்பதில்லை. ஐ.நா. சபையோ, அல்லது அச்சபையில் மனித உரிமைகள், பற்றிப் பேசுவதற்கு உரித்துடைய ஏனைய அமைப்புக்களோதான் அபிப்பிராயம் தெரிவிக்க இயலும்.

ஆயினும், தமக்கு சாதகமான சில சக்திகள் மூலம் உண்மைக்கு மாறான அபிப்பிராயங்களை சர்வதேச அரங்கில் உருவாக்குவதற்கு ஆட்சியாளர்கள் முயன்று வருகின்றனர் என்பது தெளிவாகிறது.

விடுதலைப் புலிகளை பேச்சுக்கு கொண்டுவர சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும் என்று ஐ.நா.அபிவிருத்தித்திட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

புலிகளுக்கு எதிரான கருத்து என்று தமிழ்க் கட்சிகள் இதனை சித்தரித்துவிட்டு மௌனமாக இருக்கின்றன.

ஆனால், இலங்கை ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வை பின்னே தள்ளிவிட்டு, மிகப் பாரிய இராணுவத்தீர்வில் குதித்திருப்பதை அந்த அறிக்கை மூடி மறைப்பது மட்டுமல்லாமல், யுத்தத்தின் விளைவுகளான மனித அவலங்களுக்கான பொறுப்பில் இருந்து ஆட்சியாளர்களை விடுவிக்கவும் முயன்றிருக்கிறது.

இந்நிலையில் 'ஆட்சியாளர்கள் போரை நிறுத்த வேண்டும், பேச்சு நடத்த வேண்டும்' என்று எதிரணி வலியுறுத்துவதும், பொதியை நிராகரித்திருப்பதுவும் இத்தகைய பிரசாரங்களுக்கும் பதிலடியாக அமைகிறது. ●

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

வவுனியாவில் கொல்லப்பட்ட வீரசிங்கம் தன்னை குத்தியவர்கள் யார் என்பதை சீருடை அதிகாரி ஒருவரிடம் கூறியிருக்கிறார். குணமாகி வந்ததும் துணிந்து அடையாளம் காட்டவும் தயார் என்று கூறினாராம். ஆனாலும் அவரால் மீள முடியவில்லை. கத்திக்குத்தில் குடல் வெளியே வந்ததால் சிகிச்சைகள் பயனளிக்கவில்லை.

தமிழ்க் கட்சி ஒன்றின் சீனிக் குத்தகை விவகாரமும் அவர்மீதான தாக்குதலுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. அதுதவிர கூட்டுறவுச்சங்க செயற்பாட்டில் தமது ஆட்களை நுளைக்க அதே தமிழ்க் கட்சி எடுத்த முயற்சியையும் அவர் ஏற்க வில்லையாம்.

வீரசிங்கம்அரசியல்வாதியல்ல. ஆனால், இன்று வடக்கு-கிழக்கில் தமிழ்க் கட்சிகளது உள்ளூராட்சி சபை தலைவர்கள், உறுப்பினர்களைவிட உயர்ந்த சமூகப் பணியாளர். மக்களிடம் செல்வாக்கு உள்ள வர். மிக முக்கியமாக நல்ல மனிதர்.

தமது உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் பலியானால் மட்டும் புலிகளது ஜனநாயக விரோதம் என்றும், புலிகள் மட்டுமே ஜனநாயகத்துக்கு எதிராக நடப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் அறிக்கை விடுவது வழக்கம்.

வீரசிங்கம் விவகாரத்தில் மட்டும் மேலோட்ட மான கண்டனத்தோடு நின்றுகொண்டன.

ஆக, தமிழ்க் கட்சிகள் விரும்பும் ஜனநாயகமும் தமக்கானதேதவிர, தமிழ் மக்களுக்கானதல்ல.

–★–

கூட்டணியின் செயலதிபர் இரா. சம்பந்தனும், நீலன் திருச்செல்வமும் தீர்வுப் பொதிக்கான பிர சாரத்தில் இரட்டைக் குழாய் துப்பாக்கிகள் மாதிரி.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை அடிக்கடி சந்திக்கக் கூடியவர் சம்பந்தர். இவர் அவர்களிடம் என்ன கூறுவார் என்பதை 'முரசு' கூறினால் அது கிரிமினல் குற்றம் என்பார் ஆனந்தசங்கரி.

ஆகவே சம்பந்தர் தன் வாயால் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

இலங்கை ரூபவாஹினி நிகழ்ச்சி ஒன்றில் 29.11.98 அன்று அளித்த பேட்டியில் பின்வருமாறு சம்பந்தர் கூறினார்:

"தற்போதைய தீர்வுப் பொதியில் முன்னேற்றகரமான அம்சங்கள் உள்ளன. குறிப்பாக காணி விடயத்தில் அதிகாரம் கிடைக்கிறது." என்று கூறினார்.

சட்டம் கற்றவர். அரசியலமைப்புகள் பலவற்றை கற்றுத் தேர்ந்தவர் என்று சம்பந்தரைப் பற்றி கூட்டணியினர் கூறுவர்.

### சம்பந்தர் சொன்ன அதிகாரம்!

அப்படியானால் அறிந்தே தவறான தகவலைக் கூறுகிறாரா? அறியாமல் கூறுகிறாரா?

காணி அதிகார விடயத்தில் குறிப்பிடும்படியான அதிகாரங்கள் எதனையும் பொதி கொண்டிருக்க வில்லை.

பிராந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் காணி வருகிறது. அதேசமயம் மத்திய அரசு தனது தேவைகளுக்காக எந்த பிராந்தியத்திலும் காணியை எடுத்துக் கொள்ளவும் வழிவகை உள்ளது.

குறிப்பாக நதிகள் மத்திய அரசிடம் இருக்கும். அந்த நதி செல்லும் பகுதிகளை அபிவிருத்தி செய்வது என்ற போர்வையில் குடியேற்றங்களை நடத்தவும் வாய்ப்பிருக்கும்.

அதுமட்டுமல்லாமல் காணி தொடர்பாக பொதி மில் இடதுகையால் கொடுத்து வலது கையால் எடுக்கும் இந்த அதிகாரம்கூட ஒரு விவாதத்திற்காக என்று முன்வைக்கப்பட்டுள்ளதே தவிர, அரசின் முடிந்த முடிவல்ல.

காணி அதிகாரம் தொடர்பாக அரசால் தமிழிலும், சிங்களத்திலும் விளக்க நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் தமிழில் எழுதப்பட்டுள்ள நூலில் காணி அதிகாரம் பிராந்தியசபையிடம் இருப்பதால் தமிழ் பேசும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று எழுதித் தள்ளப்பட்டுள்ளது.

சிங்கள நூலில், 'காணி தேவையானால் மத்திய அரசு எடுத்துக்கொள்ள மார்க்கம் உண்டு. எனவே யோசிக்க வேண்டாம்' என்று தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. மக்களுக்கே தவறான தகவலை தெரிவிக் கும் இந்த அரசியல்வாதி, வெளிநாட்டு இராஜதந்திர மட்டத்தில் எப்படியெல்லாம் கதை அளக்கிறாரோ?

–00–

யாழ் குடாநாட்டில் செம்மணி விவகாரத்தை ஆராய ஏன் செல்ல முடியவில்லை? என்று கேட்டால் "விமானப் பயணம் இல்லை" என்று கூறியிருந்தார் அரசின் மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த பிரமுகர்.

விமானப் படை விமானத்தில் ஐ.நா.சபை அதிகாரிகள் உட்பட பல பிரமுகர்கள் யாழ் சென்று வருகின்றனர். அப்படியிருக்க அரசின் மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர் சென்றுவர என்ன தடை? கேட்டதும் விமானத்தில் இடம் கிடைக்கும். போய்வரலாமே!

யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கட்சிகள் இப்போது காணாமல் போனோர் விவகாரத்தை கைகழுவி விட்டன.

காணாமல் போனோரின் உறவினர்கள் தாமாக முன்னின்று போராடுகின்றனர்.

கார்த்திகை திருநாளன்று டிசம்பர் மூன்றாம் திகதி தீபங்களை ஏற்றி மக்கள் போராடினார்கள்.

இது தொடர்பாக பி.பி.சி. வானொலி யாழில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த ஒருவரை பேட்டி கண்டது.

அவருக்குஅது போராட்டமாக தெரியவில்லை. தீபங்களை ஏந்தி நின்றனர் அவ்வளவுதான் என்ற பாணியில் போராட்டத்தை கொச்சைப்படுத்தினார். அதுமட்டுமல்ல மனித உரிமை விடயத்தில் அரசுக்கும் படைகளுக்கும் நற்சான்றும் கொடுத்தார்.

இப்போது புரிகிறதா, அரசின் மனித உரிமை ஆணைக்குழுவின் நோக்கம்? முன்னர் யாழில் பணியாற்றிய மனித உரிமை ஆணைக்குழு ஊழியர் கள் மாற்றப்பட்டு இப்போது, ஆமாம் சாமிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ●



படிப்பகம்

www.padippakam.com

**உண்மைத் தொடர்**

**அதிர் இடி 39**

**கடந்தவாரம்**

15 அமைச்சர்களும்
ஆறு வெளிநாட்டு தூதுவர்களும்
நாட்டை விட்டுத் தப்பியோடுகின்றனர்.
பாலஸ்தீனத் தலைவர்
யாசீர் அரபாத் உகண்டாவுக்கு
விஜயம் செய்கிறார்.
தடபுடலாக வரவேற்று
கட்டித் தழுவுகிறான் அமீன்.
ஐ.நா.சபைக் கூட்டத்துக்கு
தன்னோடு கூட்டிச்செல்ல
தன் மனைவியரில் ஒருவரை
பூவா—தலையா போட்டு
தெரிவு செய்கிறான்.

**இனி...**

# இடி அமீன்

கம்பலா மருத்துவமனையில் பணிபுரிந்த மருத்துவத் தாதியை பிடித்து வந்து அமீன் முன்பாக நிறுத்தினார்கள்.

அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட இராணுவ அதிகாரி ஒருவர் இறந்து போனார்.

சரியாகப் பராமரிக்காமல் விட்டதால் தான் அதிகாரி இறக்க நேர்ந்தது என்று டாக்டர் ஒருவர் புகார் செய்துவிட்டார்.

அந்த டாக்டருக்கும் மருத்துவ தாதிக்கும் இடையே பிரச்சனை இருந்தது.

தாதி தன் ஆசைக்கு இணங்கவில்லை என்பது டாக்டரின் தலையாய பிரச்சனை.

"உன்னை எங்கே கொண்டுபோய் நிறுத்துகிறேன் பார்!" என்று டாக்டர் சவால்விட்டிருந்தார்.

"நீ என்ன புரட்சிக்காரியா? சதிகாரியா?" என்று கேட்டான் அமீன்.

தாதிக்கு உடம்பெல்லாம் வெட வெட என்று நடுங்கியது. வார்த்தைகள் தொண்டைக் குழியில் இருந்து வெளிவர மறுத்தன.

உடலில் தேவையான உயர்வு தாழ்வுகளுடன் தன் முன்நின்ற தாதியின் அழகில் அமீன் மயங்கிப்போனான்.

"இங்கே வா!" என்று அழைத்தான். அந்தக் குரலில் இருந்த முரட்டுத்தனம் அவளைப் பயமுறுத்தியது.

தயங்கித் தயங்கி அருகில் போனவளை, இழுத்து தன் மடியில் அமர வைத்தான்.

திமிற முயன்றாள். அமீனின் பிடி இரும்பாக இருந்தது. "உனக்கு நோயாளர்களைக் கவனிக்கத் தெரியவில்லை என்று டாக்டர் கூறுகிறார். முட்டாள் டாக்டர். உன்னைப் பார்த்தாலே எந்தப் பைத்தியக்காரனும் குணமாகி விடுவானே? சாகக் கிடப்பவனும் பிழைத்து எழுந்துவிடுவானே? டாக்டர் சொன்னது பொய்தானே?" என்று கேட்டான் அமீன்.

அவள் பதில் சொல்லவில்லை. அழுதாள். விம்மி அழுதாள். பயமும், ஆற்றாமையும்- பருந்திடம் அகப்பட்ட கோழிக் குஞ்சு போன்ற தன் நிலையையும் எண்ணி அழுதாள்.

அவள் அழுவதையே வக்கிரமான சிரிப்புடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அமீன் திடீரென்று கேட்டான்; "அந்த டாக்டருக்கு நீ இணங்கிப்போகவில்லை. அதுதான் உன்னை என்னிடம் மாட்டி விட்டிருக்கிறான். என்ன, நான் சொல்வது சரிதானே?"

அழுகையினூடே 'ஆம்' என்று தலையை அசைத்தாள் தாதி.

"அந்த டாக்டர் சொன்ன பொய்க்காக தண்டனை கொடுக்கப்போகிறேன். உன் முன்னாலேயே அவனை வெட்டிப்போடுகிறேன். என்ன சந்தோசம்தானே?" என்று சிரித்தான்.

மடியில் இருந்து இறங்க முயன்றபடி "என்னை விட்டு விடுங்கள். நான் எந்தத் தவறும் செய்யவில்லை." என்று அழுதபடியே மன்றாடினாள்.

"உன்னை விடத்தான்போகிறேன். அதற்கு முன்னர் உன் சேவை எனக்குத் தேவை!" என்று கண்ணடித்தான். கை நீண்டு அவள் கழுத்துதை அழுத்தமாக வருடி, கீழிறங்க, சட்டென்று ஏற்பட்ட சீற்றத்தில், இடி அமீனின் கையைக் கடித்து விட்டாள்.

அமீன் கையை உதறிய போது மடியில் இருந்த குதித்து கதவை நோக்கித் தாவி ஓட முயல, தன் கால்களை அவள் கால்களுக்குக் குறுக்கே நீட்டினான் அமீன்.

நிலை தடுமாறி முகம் குப்புற விழுந்தவளை தன் நீளமான கால்களால் எட்டி உதைத்தான்.

இருக்கையைவிட்டு எழுந்து, அவள் தலைமுடியைப் பற்றிப் பிடித்து தூக்கி, கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

சட்டையைப் பற்றி இழுத்து கிழித்து வீசினான். அவளால் இப்போது எதிர்க்கவும் திராணியில்லை. அழவும் முடியவில்லை.

அப்படியே தூக்கிச் சென்று கட்டிலில் வீசிவிட்டு, தண்ணீர் எடுத்துவந்து முகத்தில் ஊற்றினான்.

குளிர்ந்த நீர் முகத்தில் பட்டதால் அவள் முனகிக் கொண்டு கண்களை திறக்க, எதிரே அமீனின் முகம் ராட்சதன் முகமாகத் தெரிய, பயத்தில் மறுபடி மயங்கிப்போனாள்.

அவளது மயக்கம் தெளியும் வரை அமீன் காத்திருந்தான். அவகாசம் கொடுத்து மறுபடி தண்ணீரை அவளின் முகத்தில் கொட்டினான்.

மெல்ல மெல்ல சுயநினைவு திரும்பியதும், அவளை ஆக்கிரமித்தான்.

அவள் மன்றாட வேண்டும். கதறியழ வேண்டும். அதனை இரசித்தபடியே அவளுடன் உறவு கொள்ள வேண்டும் என்ற வக்கிரத்தோடு அமீனுக்குள் ஒரு மிருகம் காத்திருந்தது.

அந்த மிருகம் தன் இச்சை அடங்கும் வரை வேட்டையாடியது. வேட்டை முடிந்ததும் தாதியின் கழுத்து, கன்னம், கழுத்துக்கீழே என்று தன் பற்களால் இரத்தம் பீறிட கடித்துக் குதறியது.

வலி தாளாமல் அவள் கத்தியபோது இரும்புக் கரங்கள் அவள் வாயையும், மூக்கையும் ஒன்றாகப் பொத்தி அழுத்தின.

அவள் திமிறித் திமிறி கொஞ்சம்



கொஞ்சமாக அடங்கிப் போனாள். நிரந்தரமாகவே உயிர் அடங்கிப் போனது.

தன் கையைக் கடித்தவளின் கையைக் கடித்து தசையைக் குதறி சாப்பிட்டான் அமீன். வெறி அடங்கும்வரை அவளின் உடலில் மேலும்



ஐ.நா.சபை கூட்டத்தில் பிரிட்டனின் தூதருடன் கைகுலுக்கும் அமீன். அருகே மனைவி சாரா.

சில பாகங்களையும் புசித்தான்.

அவளது உடலை அகற்றுவதற்காக அழைக்கப்பட்ட மெய்காவலர்கள், அந்த உடல் கிடந்த கோலத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

அன்றிரவே மெய்காவலர்களில் இரண்டு பேர் தப்பியோடினார்கள்.

தன்னைப் பற்றிய தகவல்களை அவர்கள் வெளியே கூறக்கூடும் என்று பயந்த அமீன், அந்த இரண்டு பேரையும் எங்கே கண்டாலும் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டான்.



உகண்டா இல்லத்திற்கு அடிக்கல்

ஐ.நா.சபைக் கூட்டத்திற்கு செல்வதற்கு யாரை அழைத்துச் செல்லலாம் என்று பூவா, தலையா போட்டுப் பார்த்ததில் தெரிவானவள் சாரா.

சாராவையும், தன் இரு மகன்மாரையும் அழைத்துக் கொண்டு அமீன் நியூயோர்க் சென்றான்.

இடி அமீன் என்றால் பயங்கர ஆசாமி என்று உலக நாடுகள் பல கண்டனம் செய்து வந்தன. நேரில் அமீனைக் கண்டபோது அதே நாடுகளது பிரதிநிதிகள் கைகுலுக்கி வரவேற்றனர்.

வெள்ளையர்களை அவமதிப்பவன் அமீன் என்று பிரிட்டன் கண்டனம் செய்திருந்தது.

ஐ.நா.சபைக் கூட்டத்தின் முன்பு பிரிட்டனின் ஐ.நா.தூதர் இடி அமீனுடன் கைகுலுக்கினார். அக் கால கட்டத்தில் ஐ.நா. சபை செயலாளர் நாயகமாக இருந்தவர் கேட் வால்ட் ஹெய்ம்.

அவர்தான் அமீனையும் பிரிட்டிஷ் தூதரையும் நேருக்கு நேர் சந்திக்க வைத்தார்.

நியூயோர்க் நகரில் உகண்டா இல்லத்துக்கான அடிக்கல்லையும் அமீன் நாட்டினான்.

அமீனின் தோற்றமும், அவனது சுறுசுறுப்பும் வெளிநாட்டு தூதுவர்கள் பலரை கவர்ந்தது.

தன்னைப் பற்றி வெளியாகும் தகவல்கள் எல்லாம் கட்டுக்கதைகள். எதிரிகளின் அவதூறுப் பிரசாரங்கள் என்று அமீன் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் கூறினான்.

"பாலஸ்தீன விடுதலைக்காக நான் ஆதரவளிக்கிறேன். அரபு நாடுகளை ஆதரிக்கிறேன். நிறவெறியைக் கடுமையாக எதிர்த்து வருகிறேன். அணி சேராக் கொள்கையை ஆதரிக்கிறேன். இந்த போக்குகள் பிடிக்காத சக்திகள் உகண்டாவுக்குள்ளும் இருக்கின்றன. வெளியேயும் இருக்கின்றன" என்று கூறினான் இடி அமீன்.

நியூயோர்க் நகரை மனைவி பிள்ளைகளுடன் சுற்றிப் பார்த்தான். அமீன் சென்ற இடமெங்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

ஐ.நா.சபை கூட்டத்தை முடித்துக் கொண்டு அமீன் நாடு திரும்பியபோது, உகண்டாவில் பணவீக்கம் 400 மடங்கு அதிகரித்திருந்தது.

இராணுவச் செலவினத்திற்கு நாட்டின் வருமானத்தில் பாதிக்கு மேல் ஒதுக்கப்பட்டிருந்தது.

நெருக்கடி நிலை தீவிரம் அடைந்து கொண்டிருந்தது. மக்கள் பகிரங்கமாகவே தங்கள் அதிருப்திகளை வெளிக்காட்ட ஆரம்பித்தனர்.

"இப்படியே விட்டால் எங்கள் தோளில் ஏறி காதைக் கடிப்பார்கள். ஒரு பத்துப்பேரை சுட்டுப்போடுங்கள். அடங்கிப் போவார்கள்." என்றான் அமீன்.

பொருட்களின் விலை ஏற்றத்தை கண்டித்தும், மக்ரரே பலகலைக்கழகம் முடப்பட்டதை எதிர்த்தும் போராட்டம் நடத்த மாணவர் குழு ஒன்று தீர்மானித்தது.

தகவல் அமீனின் காதுக்கு வந்தது. "மாணவர்கள் எப்போதும் ஆபத்தானவர்கள். நெருப்பு மாதிரி அவர்களது போராட்டம் பரவிவிடும். அதனால் முளையிலேயே கிள்ளி யெறியவேண்டும். ஏதோ இந்த விடயத்திலாவது முன்கூட்டியே தகவல் தந்தார்களே. சந்தோசம். அப்படியே முன்னணியில் நின்று துள்ளுகிற மாணவர்களின் விவரங்களையும் கறந்து கொண்டு வாருங்கள்!" என்று கட்டளையிட்டான் புலனாய்வு பிரிவிடம்.

விவரங்கள் ஒரே நாளுக்குள் விரல் நுனியில் வந்தன. அத்தனை மாணவர்களின் வீடுகளுக்கும் ஒரே நேரத்தில், நள்ளிரவில் அமீனின் படைகள் புகுந்தன.

குடும்பத்தோடு அனைவரும் புகைப்படம் எடுக்கப்பட்டனர். அந்தந்த குடும்பங்களில் இருந்த பெண்களை தனியாகவும் புகைப்படம் எடுக்கப்பட்டது.

பெற்றோருக்கு ஒன்றும் புரியவில்லை. தங்கள் பிள்ளைகள் அமீனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யத் துணிந்ததை அவர்கள் அறியமாட்டார்கள்.

"உங்கள் பிள்ளைகளுக்கு கொழுப்புச்

## தருவது — ரசிகன்

சத்து கூடுதலாகிவிட்டது என்று எங்கள் அதிபர் நினைக்கிறார். ஏதோ போராட்டம், ஆர்ப்பாட்டம் என்று கெட்ட காரியங்களில் ஈடுபட நினைக்கிறார்களாம். அதற்காக அதிபர் தனது வாழ்த்துக்களையும் வருத்தத்தையும் தெரிவிக்கச் சொன்னார்."

வாழ்த்து ஏன், வருத்தம் ஏன்? என்ற சந்தேகத்துக்கும் அவர்களே விடை கூறினார்கள்:

"வாழ்த்து: போராட துணிந்ததுக்கு. வருத்தம்: அழிக்கப்படப்போகும் குடும்பங்களுக்காக."

ஆடிப்போன குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைப் பக்கமே விடாமல் வீட்டிற்குள் பூட்டி வைத்தனர்.

மாணவர் போராட்டம் கைவிடப்பட்டது. அமீன் விபரம் அறிந்து ஓங்கிச் சிரித்தான்.

(இடி தொடரும்)

# சர்ச்சைக்குள்ளான படம்

இந்தியாவின் புகழ்பெற்ற, விருதுகள் பல பெற்ற நடிகை சப்னா ஆஸ்மி. முற்போக்கான எண்ணம் கொண்டவர். துணிச்சலானவர் என்று கூறப்படுவர் சப்னா ஆஸ்மி.

தற்போது பாரிய சர்ச்சை ஒன்றில் மாட்டிக்கொண்டிருக்கிறார். அவர் நடித்துள்ள 'பயர்' என்ற படம் தான் சூடான சர்ச்சைகளை கிளப்பியிருக்கிறது.

மும்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பெரிய நகரங்களில் இப்படம் திரையிடப்பட்டது. அதனையடுத்து கிளம்பிய சர்ச்சைகளால் மறு தணிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

லெஸ்பியன் எனப்படும் தன்னினச் சேர்க்கை விவசாரமே இப்படத்தின் முக்கிய கதைக்கரு. அதுதான் சர்சைகளை கிளப்பியுள்ளது.

அண்ணன், தம்பி இரண்டுபேர் திருமணம் செய்து கொள்கின்றனர். அண்ணன் சாமியாராகிவிடுகிறார். தம்பி வியாபார விஷயமாக வெளிநாடு செல்கிறார். இவர்களை திருமணம் செய்து கொண்ட பெண்கள் தனிமையில் வாடுகின்றனர். பல நாள் போராட்டத்தின் பின்னர் அவர்கள் ஒன்று கூடுகின்றனர். இந்த உறவு தொடர்கிறது. அதுதான் கதை.

இப் படம் திரையிடப்பட்ட திரையரங்குகளை சிவசேனா தொண்டர்கள் அடித்து நொறுக்கி கலாட்டா செய்தனர்.

மும்பாய் சட்டசபையில் இப் படம் தொடர்பான பிரச்சனை எழுந்தது.

பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் தியேட்டர்கள் தாக்கப்பட்டதை நியாயப் படுத்தி உரையாற்றினார்.

காங்கிரஸ், மாக்சிச கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் தாக்குதலைக் கண்டித்தனர். படத்திற்கு ஆதரவாக வாதிட்டனர்.



சப்னா ஆஸ்மி

லெஸ்பியன் காட்சிகள் படத்தில் காண்பிக்கப்படுகின்றன. இது இந்துமத கலாசாரத்திற்கு முரணானது என்று பாரதிய ஜனதா உறுப்பினர் வாதம் செய்தார்.

இப்படத்தை தடை செய்யுமாறும் கோரிக்கைவிடப்பட்டது. "படத்தை தடை செய்யமுடியாது. மறு தணிக்கைக்கு அனுப்பலாம்" என்று இந்திய மத்திய தகவல் துணை அமைச்சர் கூறியிருக்கிறார்.

பிரபல நடிகையான சப்னா ஆஸ்மி சர்ச்சைகள் பற்றி கவலைப்படவில்லை. "சமூக பிரச்சனை ஒன்றைப் பற்றிய படம் இது. இதில் நடித்ததுக்காக நான் கவலைப் படவில்லை. என்று கூறியிருக்கிறார்.

நம் நாட்டில் கொழும்பில் இப்படம் திரையிடப்பட்டு ஓடி முடிந்து விட்டது. அதன்பின்னர்தான் இந்தியாவில் திரையிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்திற்கு இசையமைத்தவர் ஏ.ஆர். ரகுமான்.

# 42இல் 18வது வெளியீடு

ரசியாவின் தலைநகரான மொஸ்கோவைச் சேர்ந்த பெண் சிஷ்சினா. அம்மணிக்கு நாற்பத்திரெண்டு வயது.



சிஷ்சினாவைப் பற்றி ரசியா முழுவதும் பேசப்படுகிறது. பேசப்படும் அளவுக்கு என்ன செய்தார்? தன்னுடைய 18 வது குழந்தையை சந்தோசமாக பெற்றெடுத்துள்ளார்.

பதினெட்டு பிரசவம் கஷ்டமாக இல்லையா? என்று கேட்டால், "இதில் என்ன கஷ்டம்? அப்படியொன்றும் கஷ்டமில்லை. ஆனால் ஒவ்வொரு குழந்தை பிறக்கும் போதும் அதற்கு தகுந்த பெயர் தேடுவதுதான் கஷ்டமாக இருக்கிறது" என்று கூறியிருக்கிறார்.

குழந்தை பெறுவதில் உலக சாதனை படைத்தவரும் ஒரு ரசியப் பெண்தான். 1700இல் அப் பெண்மணி பெற்ற குழந்தைகள் எத்தனைதெரியுமா? அதிகமில்லை, 69 மட்டும்! குவா! குவா!

# சிண்டியின் வாக்குமூலம்

பிரபல மொடல் அழகி சிண்டி கிராபோட். இவர் ஏ.பி.சி. தொலைக்காட்சியில் 'செக்ஸ் வித் சிண்டி கிராபோட்' என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்.

தன்னுடன் நெருக்கமாக இருந்த பத்து ஆண்களைப் பற்றியும், அவர்கள் தன்னிடம் எப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள் என்பது பற்றியும் அம்மணி விலாவாரியாக விளக்கியுள்ளாராம்.

அந்தப் பத்து ஆண்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: கூடைப்பந்து வீரர் டென்னிஸ் ரோட்மேன். மற்றவர் ஹொலிவூட் நாயகன் சில்வஸ்டர் ஸ்டோலன்.

இங்கிலாந்து ஜோசியர் ஒருவரும் சிண்டியை ஆராய்ந்துள்ளார்.



அவரது ஜோசியப்படி டயானா, சாள்ஸ் தம்பதியின் பிள்ளைகளான வில்லியமும், ஹரியும் இரண்டாயிரம் ஆண்டுக்குள் சிண்டியின் காதல் வலையில் சிக்குவார்களாம்.

இளவரசர் வில்லியம் சிண்டியின் இரசிகர். டயானா உயிருடன் இருந்த போதே சிண்டியை வில்லியம் சந்தித்து பேச டயானாவே ஏற்பாடும் செய்திருந்தார்.

# சிங்கமும் சதாமும்

ஈராக் அதிபர் சதாம் உசேனுக்கு இரண்டு சிங்கங்கள் பரிசாக அளிக்கப்பட்டுள்ளன. ஆபிரிக்க இனத்தைச் சேர்ந்த அந்த சிங்கங்கள் இலண்டன் வனப்பகுதியில் பிடிக்கப்பட்டவை.

சூடான் உள்துறை அமைச்சர் அப்துல் ரகுமான் அந்தச் சிங்கங்களை சதாமுக்கு அனுப்பி வைத்துள்ளார்.



சதாமுக்கு தனிப்பட்ட பரிசாக அவை வழங்கப்பட்டதா? அல்லது ஈராக் உயிரியல் பூங்காவுக்கு பரிசாக வழங்கப்பட்டதா? என்பது தெரிவிக்கப்படவில்லை.

# அப்பா பெயர் பீபீ

அன்வருக்கு நான்கு வயது இஸ்ரேல் தலைநகரில் கிண்டர் கார்டன் பள்ளியில் படிக்கிறான்.

பள்ளியை விட்டு வெளியே போக ஆசைப்பட்டு, பையை தூக்கித் தோளில் மாட்டிக்கொண்டு மனம் போன போக்கில் அரை மணிநேரம் நடந்தான்.

மேற்கொண்டு எங்கே போவது என்று தெரியவில்லை. அப்பா, அம்மா ஞாபகமும் வந்துவிட்டது. அழத்தொடங்கி விட்டான்.

'யாக்கோவ், யாக்கோவ்' என்று கூப்பிட்டுப் பார்த்தான். யாக்கோவ் அவனது கார் சாரதி.

சிறுவன் அழுது கொண்டிருப்பதைப் பார்த்த இளைஞர்கள் சிலர் "நீ யார்? உன் அப்பா யார்?" என்று கேட்டனர்.

"பீபீதான் என் அப்பா என்று கூறினான். பீபீ என்பது இஸ்ரேல் பிரதமரின் செல்லப் பெயர்.

மகனைக் காணவில்லை என்று இஸ்ரேல் பிரதமர் வீட்டிலும் அரை மணிநேரமாக அல்லோல கல்லோலப் பட்டு விட்டது.

# டாக்டர் நடிகை



ஆந்திராவில் நடிகை ஜெயப்பிரதாவுக்கு முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவிடம் நெருக்கம். ஜெயப்பிரதா எம்.பி. யாகவும் இருக்கிறார்.

ஆந்திர பல்கலைக்கழகம் ஒன்று ஜெயப்பிரதாவுக்கு டாக்டர் பட்டம் கொடுக்க முன்வந்திருக்கிறது.

ஜெயப்பிரதாவுக்கு பட்டம் கொடுத்தால் முதலமைச்சரை கவரலாம் என்று திட்டமோ தெரியவில்லை.

டாக்டர் பட்டம் வழங்குவதை எதிர்த்து காங்கிரஸ் கட்சி போர் கொடி உயர்த்தியது. கம்யூனிஸ்ட்கட்சி உட்பட ஏனைய கட்சிகளும் எதிர்த்தன.

அதனால் டாக்டர் பட்டம் வழங்குவதை இரத்துச் செய்யுமாறு முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவு பிறப்பித்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

## கோடீஸ்வர குண்டர்



பிரபு தேவா மாதிரியான நடனக்காரர்களை நடனப் புயல் என்று கூறலாம். வேகமாக வளைந்து நெளிந்து ஆடித் தூள்கிளப்பு வார்கள்.

படத்தில் இருக்கும் குண்டு ஆசாமியும் நடனக்காரர்தான். வளைந்து நெளிந்து, குனிந்து வேகமாக ஆட முடியாதே தவிர, மேடை அதிர நிதானமாக ஆடமுடியும்.

இவரது எடை 208 கிலோ. அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்தவர். இவரது பெயர் டீன் மைக்கேல். வயது 24.

இவரது தொழில் நடனமாடுவது. சாதாரண நடனமல்ல, காபரே நடனம். இவரது நடனத்தைக் கண்ணாரக் காண பெண்கள் கூட்டம் அலைமோதுகிறதாம். கடந்த மூன்று ஆண்டுகளாக ஓயாது ஆடிவருகிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 204 கிலோவாக இருந்தார். தற்போது 208 கிலோ. இரண்டு வருடத்தில் நாலு கிலோ தசை குட்டி போட்டிருக்கிறது.

**இவருக்கு விரல் விட்டு எண்ண முடியாதளவுக்கு பெண் நண்பிகள் உள்ளனர். இந்த உடம்போடு 'அதெல்லாம்' கஷ்டமில்லையா? என்று கேட்டால் மலை சிரிக்கிறது. அதற்கெல்லாம் பல வழிகள் உள்ளன என்கிறார்.**

மரக்கட்டில்கள் உடைந்து போனதால் கொங்கிறீட்டால் செய்யப்பட்ட மேடையுடன் கூடிய படுக்கையில்தான் மெத்தைபோட்டு படுக்கிறார்.

தனது உடலமைப்புக்கும், நகர்வுகளுக்கும் ஏற்ப மிக விசாலமான வீடொன்றைக் கட்டியிருக்கிறார்.

**நடனம் மூலம் பல கோடிகளை சம்பாதித்து வைத்திருக்கிறார். கைநிறையப் பணம், மனம் நிறைய சந்தோசம், வஞ்சனை இல்லாத சாப்பாடு, தொட்டுக்கொள்ளப் பெண்கள் என்று படு ஜாலியாக இருக்கிறார் ஆசாமி.**

தகவல் பெட்டி





## மணல் கயிறு



மணலில் கயிறு திரிக்க முடியுமா? என்று நடக்க முடியாத காரியங்கள் பற்றி பேசப்படுவது வழக்கம். ஆனால், இனிமேல் அப்படி பேச முடியாது.

மணலில் கயிறு திரிக்கலாம் என்று நிருபித்துக் காட்டியிருக்கிறார் இந்த தமிழ்நாட்டுக்காரர். இவரது பெயர் அலெக்சாண்டர் ஆசான். தமிழ்நாடு கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் இவர்.

சித்தவைத்தியரான இவர் மணலை கயிறாக்கும் இரகசியத்தை கூறுகிறர் கேளுங்கள்: 'தேவையானளவு மணலை எடுக்க வேண்டும். குளக்கரை ஓரங்களில் முளைக்கும் 'நீர் நுள்ளி' என்ற செடியின் விதைகளை பறித்து, பொடி செய்து கொள்ளவேண்டும்.

நீர்நுள்ளி விதை கடுகைவிட சிறியது. சிவப்பு நிறம். வாயில் போட்டுப் பார்த்தால் பசைபோல ஒட்டிக்கொள்ளும். மணலில் சிறு கற்கள் கிடந்தால் அவற்றை அகற்றிவிடவேண்டும்.

மணலையும், நீர் நுள்ளி விதைப் பொடியையும் கலந்து தண்ணீர் விட்டு பிசையவேண்டும். பின்னர் அப்பளத்திற்கு மாவு தயாரிப்பது போல கைகளால் கயிறு போல திரிக்கத் திரிக்க நீண்டு கொண்டே போகும்." என்று கூறி, செய்தும் காண்பிக்கிறார். அண்ணர் ஒரு விண்ணர்தான்!

## சங்கம் கண்டவர்கள்

தங்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அமைப்புக்கள், **சங்கங்கள் போன்ற**வற்றை ஏற்படுத்திக் கொள்வது வழக்கம்.

ஹொலிவுட் படவுலகில் உருவாகியுள்ள ஒரு சங்கம் சற்றுப் புதுமையானது. ஹொலிவுட் படங்களில் நடிக்கும் உயரம் குறைந்த நடிகர் நடிகைகள் இணைந்து சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

மூன்று அடி உயரம் உள்ள டேவிஸ் என்னும் நடிகர்தான் இந்தச் சங்கத்தை தோற்றுவித்துள்ளார். இவர் சாதாரண ஆளல்ல. 'வில்லோ' போன்ற படங்களில் நடித்து கலக்கியவர்.

உயரம் குறைந்த நடிர்களுக்கு ஏற்படும் அவமதிப்புக்களை எதிர்த்துப் போராடுவது, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தீர்த்துவைப்பது என்பவைதான் சங்கத்தின் குறிக்கோள்கள். நாம் இனி வளராவிட்டாலும், எங்கள் சங்கம் **வளரும்** என்கிறார்கள்.



தமிழ்பட உலகிலும் தவக்களை, குள்ளமணி போன்ற குள்ளமான நடிகர்கள் உள்ளனர். அவர்கள் இந்தச் சங்கம் பற்றி அறிந்தார்களோ தெரியவில்லை.



## நன்றியுள்ள முகம் இதுதான்!

நன்றியுள்ள முகம் இதுதான். அதிசயப் பிறவியோ இது என்று நினைத்துவிடாதீர்கள். படப்பிடிப்புக்காக தன் முகத்தை மறைத்து தத்ரூபமாக போஸ் கொடுத்திருக்கிறார் ஒருவர். நன்றி கெட்ட முகங்களைவிட இது மேல் என்று நினைத்தாராக்கும்.



## ஆச்சரிய ஓவியம்

**உலகின் தலைச் சிறந்த ஓவியர்களில் ஒருவர் பிக்காஸோ. அவர் மறைந்தும், அவர் ஓவியங்கள் மறையாதது மட்டுமல்ல, மவுசும் கூடிக் கொண்டிருக்கின்றன. ஏலத்தில் பல இலட்ச ரூபாய்களுக்கு அவரது ஓவியங்கள் ஒவ்வொன்றும் விற்கப்பட்டுள்ளன.**

**படத்தில் இருப்பது பிக்காஸோ வரைந்த மிகச் சிறிய ஓவியம். உருப்பெருக்கியில்கூட இந்த அளவுதான் தெரிகிறது. இதனை எப்படி வரைந்தார் என்பதுதான் ஆச்சரியம். இந்த ஓவியத்தை விரைவில் இலண்டனில் ஏலம் விடப்போகிறார்கள். பல இலட்ச ரூபாய்களுக்கு வாங்குவதற்கு ஆட்களிருக்கிறார்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

## கஜோலின் காதலன்

'மின்சாரக் கனவு' மூலம் தமிழ்ப்பட இரசிகர்களின் கனவில் மின்சாரம் பாய்ச்சியவர் கஜோல்.

விளையாட ஜோடி தேவை என்று வெண்ணிலவுக்கு விண்ணப்பம் போட்டவர். இனிமேல் வெண்ணிலவுக்கு வேலை இல்லை. கஜோலுக்கு ஜோடி கிடைத்து விட்டார்.

அவரும் ஒரு நடிகர்தான். அஜய் தேவ்கான். நடிப்பதோடு படத் தயாரிப்பிலும் ஈடுபட்டு ஏராளமான பணம் வைத்திருக்கிறார்.

திரையுலகில் இன்றுவரை கஜோல் மார்க்கெட் உச்சத்தில் இருக்கிறது. அத னால் திருமணம் உடனடியாக நடக்குமா? என்பது கேள்விக்குறி.

கஜோல் மிக மென்மையானவர். உபசரிப்பில் முன்னிற்பவர். மனதில் பட்டதை பட்டென்று வெளியே கொட்டிவிடுவாராம்.

அஜய், கஜோல் இருவரும் தங்கள் காதலை மறைக்க வில்லை. வெளிப்படையாக கூறியுள்ளனர்.

அஜய் தயாரித்து நடித்த 'பியார் கியார் டு தர்னா கியா' படத்தின் நாயகி கஜோல்தான். படம் காதல் கதை. சூப்பர் ஹிட். அதுபோல இவர்கள் காதலும் சூப்பர் ஹிட்.

## 'தேசிய கீதம்' தோல்வி

'பாரதி கண்ணம்மா' 'பொற்காலம்' இரண்டும் சேரனுக்கு மகா வெற்றி. அதற்கு திருஷ்டி கழிப்பது போல 'தேசிய கீதம்' தோல்வி.

முதலமைச்சர் என்று படத்தில் வரும் நாசர், தி.மு.க. தலைவர் கலைஞரை குறிக்கும் பாத்திரம் என்ற பிரச்சனை கிளம்பியது. கருணாநிதியை சேரன் சந்தித்தபோதும் பிரச்சனை தீரவில்லை.

இதற்கிடையே ரஜினி படத்தை பாராட்டினார். த.மா.காங்கிரஸ் தலைவர் மூப்பனாரும் படத்தைப் புகழ்ந்தார்.

இச் செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகி படத்திற்கு இலவச விளம்பரம் கிடைத்தன. அப்படி இருந்தும்கூட படம் தோல்வி கண்டுள்ளது.

சேரனிடம் இருந்து அரசியல் படத்தை மக்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் படத்தில் கூறப்படும் கருத்துக்களை பலரும் வரவேற்றுள்ளனர்.

'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' இரண்டிலும் சேரனின் மனம் கவர்ந்த மீனா நடித்திருந்தார். தேசிய கீதத்தில் மீனா கிடையாது. அதுவும் ஒரு காரணமாக இருக்கலாமோ?

## முரளிக்கு கொலை மிரட்டல்

'தேசிய கீதம்' படத்தில் கலைஞர் கருணாநிதியை தாக்குவதால் அவரது கட்சிக்காரர்கள் கடுப்பில் இருக்கிறார்கள்.

முதலில் இயக்குநர் சேரனுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. தற்போது கதாநாயகன் முரளிக்கும் கொலை மிரட்டல்கள் வருகிறதாம்.

"எங்க தலைவரை குடும்பத்தோடு கடத்திப் போகிற வேஷத்தில் நடித்து விட்டாய். உன் உயிரை எடுக்கப்போகிறோம். அந்தக் கற்றுக்குட்டி இயக்குநர் படங்களில் இனி நடித்தால் தம்மா விடமாட்டோம்" என்று தொலைபேசியில் மிரட்டல் வந்ததாம்.

முரளி ஆடிப்போயிருக்கிறார்.

"கலைஞர்மீது நானும் பாசம் வைத்திருக்கிறேன். இது கலைஞரை சாடும் படமல்ல என்று சொன்னால் நம்ப மாட்டோம் என்கிறார்களே" என்று வருந்துகிறார் முரளி.

## மதம் மாறிய நடிகை

நடிகை ஐஸ்வர்யா 'முஸ்லீமாக மதம் மாறி திருமணம் செய்து கொண்டது பழைய கதை. பின்னர் விவாகரத்தில் முடிந்தது.

ஐஸ்வர்யா வழியில் நடிகை ஆம்னியும் முஸ்லிமாக மதம் மாறி திருமணம் செய்துள்ளார்.

'ஆனஸ்ட்ராஜ்' படத்தில் விஜயகாந்த் ஜோடியாக தாராளமாக நடித்தவர் ஆம்னி. அதன் பின்னர் சில படங்களில் நடித்தபோதும் குறிப்பிடத்தக்க வாய்ப்புக்கள் கிட்டவில்லை.

தெலுங்கு பக்கம் போனார். அங்கு சில இயக்குநர்களின் அன்புக்குரிய நடிகையாக இருந்தார். தொப்புள் காட்டி நடிப்பதில் தனித்திறமை இருந்தும் முன்னணிக்கு வரமுடியவில்லை.

அதனால் நடிகை என்ற விளம்பரத்தை வைத்து பெரும்புள்ளிகளுடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டார்.

காஜா மொய்தீன் என்ற 'பெட்ரோல் பங்கு' முதலாளியும் ஆம்னியின் நண்பரானார். ஆம்னியின் சேவையில் மயங்கி அவரையே மணக்க முன் வந்தார். ஆம்னியும் தன் பெயரை நூருன்னிஸா என்று மாற்றிக்கொண்டு அவரது மனைவியாகிவிட்டார்.

## விஜய் நாயக...

ரஜினியின் 'படைய... முடிந்ததும் கே.எஸ். ... குமார் இயக்கப்போ... படத்தின் நாயகன் ...

முதன் முதலாக இரட்டை வேடத்தில் ... கப்போகிறார். அ... வேட்டி கட்டிய பாத்...

சரத்குமாரை இர... வேடத்தில் வேட்டி ... நடிக்க வைத்தவர் ... குமார். 'நாட்டா...' 'நட்புக்காக' இரண்... சூப்பர் ஹிட். விஜய் வே... கட்டப் போகும் ப... சூப்பர் ஹிட்தானோ...



பிரகாஷ்ராஜ்-செண்பகா





கஜோல்

## மினி சினி

※ 'மின்சாரக் கனவு' படத்திற்குப் பின் ஏ.வி.எம். நிறுவனம் ஒரு படம் தயாரிக்கிறது. விஜய் கதா நாயகனாக நடிக்கும் இப்படத்தை சுரேஷ் கிருஷ்ணா இயக்கவுள்ளார்.

※ 'அத்தை மகன்' படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக நடித்து வந்த ரம்யா கிருஷ்ணன் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக 'சொல்லிவிடு' படத்தில் அறிமுகமாகும் பூனம் நடிக்கிறார்.

※ 'பிரேமிஞ்சலானி உந்தி' என்ற தெலுங்குப் படத்தின் மூலம் முதன் முறையாக தெலுங்கில் கதா நாயகனாகிறார் பிரகாஷ்ராஜ்.

※ 'வீட்டோடு மாப்பிள்ளை' இது வி.சேகர் இயக்கும் புதிய படத்தின் பெயர். இப்படத்தில் பாண்டிய ராஜன்-குஷ்பு ஜோடியாக நடிக்கிறார்கள்.

※ 'சின்னக்கவுண்டர்' இந்தியில் தயாராக விருக்கிறது. தமிழில் விஜயகாந்த் நடித்த வேடத்தில் இந்தியில் நடிக்க விருப்பவர் ஜாக்கி ஷெரப்.

※ 'டைம்' என்ற புதிய படத்தில் தற்போது பிரபுதேவா கதாநாயகனாக நடித்துவருகிறார். முதலில் இந்தப் படத்தில் கதாநாயகனாக நடிக்க இருந்தவர் பிரசாந்த்.

※ 'கண்ணாத்தாள்' பாரதிமோகன் இயக்கத்தில் தமிழில் தயாராகி வருகிறது. தமிழில் வெளியாகும் அதே நேரத்தில் தெலுங்கில் 'காயத்ரி' என்ற பெயரில் மொழி மாற்றி வெளியாகவுள்ளது.

※ 'உன்னைத் தேடி' படத்தில் அஜித்குமார் ஜோடியாக நடித்துவரும் மாளவிகா, அந்தப் படம் வெளிவருவதற்கு முன்னரே 'பூப்பறிக்க வருகிறோம்' படத்தில் நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

※ 'காமராசு' இது சூப்பர் குட் ஃபிலிம்ஸ் ஆர்.பி. சௌத்ரி தயாரிக்கும் 25வது படம். இந்தப் படத்தில் முரளி கதாநாயகனாக நடிக்கிறார்.

※ 'என்றென்றும் காதல்' படத்தில் நாயகியாகவும், 'காதலர் தினம்' படத்தில் ஒரு பாடல் காட்சியிலும் நடித்து வரும் ரம்பா, 'பீவி நம்பர் வண்' என்ற இந்திப்படத்தில் அனில் கபூர் ஜோடியாக நடித்து வருகிறார்.

ரக்ஷனா




ஆர்ஜுன்-மனீஷா கொய்ராலா
படம்: முதல்வன்

## வாரிசு நாயகன்

பாடகர் மலேசியா வாசுதேவன் நடிகராக மாறினார். வில்லனாகவும் வெளுத்து வாங்கினார். இப்போது அவரது மகன் யுகேந்த் நடிக்க வந்திருக்கிறார்.

யுகேந்த்துக்கு முதல் படத்திலேயே செமத்தியான ஜோடி தேவயானி. படத்தின் பெயர்: 'மௌனமே' இன்னொரு கதாநாயகியாக வினிதா நடிக்கிறார்.

விஜயசாந்தி, ராம்கி நடிக்கும் 'ஆயுதப்படை' படத்திலும் இரண்டாவது நாயகனாகவும் நடிக்கிறார் யுகேந்த்.

## கௌரவ ராஜ்

பிரகாஷ்ராஜின் நடிப்பை கண்டு ரஜினியே பாராட்டினாராம். பாராட்டியதோடு நில்லாமல், பிரகாஷ்ராஜிற்கு தனது படையப்பாவில் கௌரவ வேடமும் கொடுத்திருக்கிறார்.

'ரஜினிபோல நான் நடிக்க முயற்சிப்பதாக கூறுகிறார்கள். ரஜினி போல் இனி எவரும் பிறக்க முடியாது. ரஜினி ரஜினிதான்' என்கிறார் பிரகாஷ்ராஜ்.

ரஜினிக்கும், பிரகாஷ்ராஜிற்கும் இடையே ஒரு பொது ஒற்றுமை உண்டு. என்ன தெரியுமா? இருவருக்கும் குருநாதர் பாலசந்தர்.

## கல்கி பக்தை

மந்த்ரா கல்கி பக்தை. சமீபத்தில் கல்கியின் ஆசிரமத்துக்குச் சென்றார். கல்கியின் சீடர்களை ஒரு கலக்கு கலக்கிவிட்டாராம்.

வாய்ப்புக்காக அலையாதே. உன்னை தேடிவரும் மனதை அடக்கு. தியானம் செய்' என்று கல்கியின் சீடர் மிகக் கரிசனையாக அறிவுரை கூறினாராம்.

## தமாசும் காதலும்

'உள்ளத்தை அள்ளித்தா' 'உன்னிடத்தில் என்னை கொடுத்தேன்' படங்களின் சூப்பர் வெற்றி கார்த்திக் மார்க்கெட்டை உயர்த்திவிட்டது. அதனால் அதேபாணியில் இன்னொரு படத்திற்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. படத்தின் பெயர் 'உன்னை பார்த்த பின்புதான்'

'நினைத்தேன் வந்தாய்' படத்தை இயக்கிய கே.செல்வபாரதி இப்படத்தை இயக்குகிறார். கார்த்திக் ஜோடியாக முன்னணி நடிகை ஒருவர் நடிக்கப்போகிறார்.

இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி. நகைச்சுவையுடன் கூடிய காதல் கதை.

## பந்தயத்தில் முதலில்

பார்த்திபன் நடித்த 'புதுமைப்பித்தன்' தீபாவளி பந்தயத்தில் முன்னணியில் நிற்கிறது. அதனால் தனது 'ஹவுஸ் புல்' படத்தையும் திரையரங்குகளில் வலம்விட முடிவு செய்துவிட்டார் பார்த்திபன்.

விருதுக்காக தயாரிக்கப்பட்ட படம் 'ஹவுஸ்புல்'. பெரிதாக திரையிடும் எண்ணம் முதலில் இருக்கவில்லையாம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள நினைக்கிறார்.



படிப்பகம்

சினி விசிட்



சந்தோஷ்-டயானா
படம்: பந்தா

திரையுலக மறுபக்கம் 81

# ஏமாற்றப்பட்ட நடிகையின் புலம்பல்

## வதந்தி பரப்பிய நடிகை

மானின் பெயர் கொண்ட ஐந்து எழுத்து நடிகை அவர். சமீபத்தில் பிடிபட்ட நீலப்பட கசட்டில் அவரது பெயருட் அடிபட்டது.

தெலுங்குப் படங்களில் அவர் தனது உடலின் செழிப்புக்களைக் காட்டி நடித்திருக்கிறார். தமிழில் மட்டும் அடக்க ஒடுக்கமாக சில படங்களில் நடித்திருந்தார்.

தெலுங்கில் சில தயாரிப்பாளர்களுக்கும் நடிகைக்கும் இடையே இறுக்கமான தொடர்பு இருந்திருக்கிறது.

அவர்களில் ஒருவருக்கும் நீலப்பட கும்பலுக்கும் இடையே தொடர்பு இருந்திருக்கிறது. குறிப்பிட்ட நடிகைக்கு நல்ல உடல்வாகு. தமிழ்நாட்டின் ஒரு பகுதியில் நடந்த அழகுப் போட்டியிலும் முதலிடம் பெற்றவர்.

இந்த நடிகையை 'அந்தமாதிரி' படம் எடுத்தால் அரபு நாடுகளில் கசட் அமோக விற்பனையாகும் என்று நீலப்படக்கும்பல் கண்வைத்தது.

நடிகைக்கு நெருக்கமான தயாரிப்பாளருக்கும் இலாபத்தில் பங்கு கொடுக்க ஒப்புக்கொண்டது.

ஆந்திராவில் பெரியதொரு சொகுசு ஹோட்டலில் அறை எடுத்து தங்கிக்கொண்டு. நடிகையை அழைத்தார் தயாரிப்பாளர்.

நடிகையும் விரைந்து சென்றார். தயாரிப்பாளருக்கு கம்பனி கொடுப்பதற்காக நடிகையும் லேசாக மது அருந்தியிருக்கிறார்.

நடிகைக்கே தெரியாமல் எப்படியோ மதுவில் தூக்க மாத்திரையை போட்டுவிட்டார் தயாரிப்பாளர். மெல்ல மெல்ல தயாரிப்பாளரின் கதகதப்பான அணைப்பில் தூங்கிப்போனார் நடிகை. அதன் பின்னர் நடந்தது எதுவும் நடிகைக்கு தெரியாதாம்.

அண்மையில் பிடிபட்ட கசட்டில் அவர் சம்பந்தப்பட்ட காட்சியை பார்த்த 'முக்கியமான' ஒருத்தர் சொன்ன தகவல் கேட்டு நடிகைக்கு பயங்கர அதிர்ச்சி.

கட்டுமஸ்தான இளைஞர் ஒருவர் நடிகையுடன் சல்லாபம் கொள்ளுவதுபோல காட்சிகள் உள்ளனவாம்.

தன்னை தூக்கமாத்திரை கொடுத்து தயாரிப்பாளர் ஏமாற்றிவிட்டதாகவும், தான் சுயநினைவில் இல்லாதபோது 'தப்பு' நடந்திருக்கிறது என்றும் அந்த 'முக்கியமான' நபரிடம் சொல்லிப் புலம்பினாராம் நடிகை.

அந்த முக்கியமானவர் ஒட்டைவாயர். அவர் மூலம்தான் தகவல் வெளியே கசிந்தது.

ஆனால் நடிகை புத்திசாலித்தனமாக ஒரு காரியம் செய்திருக்கிறார். 'ஒரிஜனல் கசட்டை' அந்த முக்கியமானவர் மூலம் தன் கையில் எடுத்துவிட்டாராம். அதற்காக முக்கியமானவருக்கு நன்றிக் கடனும் செய்துவிட்டாராம்.

### வதந்தி பரப்பிய நடிகை

நீலப்படத்தில் நடித்ததாக தமது பெயர் அடிபட்டுவிடக் கூடாதே என்று படாதபாடு படும் நடிகைகளும் உள்ளனர்.

தமது பெயர் அடிபட்டால் ரசிகர்கள் மத்தியில் கிளு கிளுப்பு ஏற்பட்டு விளம்பரம் கிடைக்கும் என்ற கோணத்தில் சிந்தித்திருக்கிறார் ஒரு நடிகை.

ஐந்து எழுத்து மந்திர நடிகைதான் அவர். தனது பெயரையும் மறைமுகமாக குறிப்பிடும்படி தமிழக சினிமா சஞ்சிகை நிருபர்கள் சிலருக்கு அன்புக் கட்டளையிட்டு, கவரும் கொடுத்தாராம். கவருக்குள் சில நூறுகள்.

அதன்பின்னரே சில சஞ்சிகைகளில் ஐந்தெழுத்து மந்திர நடிகையின் பெயரும் மிகத் தாமதமாக இடம் பெற்றதாம். பின்னர் அவரே மறுப்பும் விடுவாராம். இது ஒரு விதமான விளம்பர யுக்தி.

மந்திர நடிகையின் பெரும் அடிபட்டதால் சில நடிகர்கள் அவருக்கு ஃபோன் செய்து ஜொள்ளு விட்டவராம். அவர்களில் எவரும் இளம் ஹீரோக்கள் கிடையாது என்பதுதான் நடிகையின் வருத்தம்.

### நான் வில்லனல்ல

வில்லன் நடிகராக பாலசந்தரால் அறிமுகமாகி, கதாநாயகனாக உயர்ந்து நிற்பவர் பிரகாஷ் ராஜ்.

டிஸ்கோ சாந்தியின் நெருக்கமான நண்பராக இருந்த பிரகாஷ்ராஜ், சாந்தி வீட்டுக்கு அடிக்கடி சென்றபோது, அவரது தங்கையும் நடிகையுமான லலிதாவை காதலித்தார். கல்யாணமும் செய்து கொண்டார்.

பூஜா, சூர்ய சித்தார்த்- என்று இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள்.

பிரகாஷ்ராஜ் பற்றி நிறைய கிசு கிசுக்கள் வருகின்றன. இணைந்து நடிக்கும் துணை நடிகைகளையும் விடமாட்டேன் என்கிறார். காருக்குள் மதுபான கடையே வைத்திருக்கிறார் என்றெல்லாம் கூறப்படுகிறது.

பிரகாஷ்ராஜ் சமீபத்தில் தமிழக சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தன்னைப் பற்றி கூறியுள்ளவை:

நான் விரும்புவது: பெண் (எல்லா ரூபத்திலும்)
நான் வெறுப்பது: வெறுப்பு என்ற வார்த்தையை
பயமூட்டுவது: பயமூட்டுவார்களா என்று தான்
பலம்: தன்னம்பிக்கை
பலவீனம்: உணர்ச்சிகள்
செக்ஸ் அப்பீல்: இரகசியம்
கதாநாயகி: அம்மா
இலட்சியம்: இயல்பாக- வாழ்வது

## உடும்புப்பிடி

திரைப்பட இயக்குநர்களை துரத்திக் களைத்த அம்பிகா சின்னத்திரை இயக்குநர்கள் சிலரை மடக்கிப் பிடித்திருக்கிறார். அம்பிகாவின் பிடி உடும்புப் பிடியாச்சே. தொடர்ந்து சில வாய்ப்புக்கள் கிடைத்து வருகின்றன.

நகைச்சுவை நடிகர் வடிவேலுதான் அம்பிகாவுக்கு பக்க பலமாக இருந்து வருகிறார். அவரது காரில்தான் அம்பிகா அடிக்கடி காணப்படுகிறார்.



காவ்யா-கீர்த்தனா-விசித்ரா
படம்: முதல் எச்சரிக்கை.

முகப்பில் முரளி + ரம்பா
படம்: தேசிய கீதம்

## காதோடு சொல்லுகிறோம்

வயதான காதல் மன்னர் தன் புது மனைவியுடன் ாலியாக ஊர்சுற்றுகிறார். அவரது மனைவி அவரைச் சல்லமாக 'அப்பா' என்றழைக்கிறாராம். தமிழ்ப்பட லகில் அவருக்கு வைத்துள்ள பட்டப் பெயர் 'வயாக்ரா ாலிபர்!

எண்ணெய்வள நாட்டு மூன்று எழுத்து நடிகைக்கு போன் தொல்லைகள் தாங்க முடியவில்லையாம். றக்கமுடியாத இடங்களில் இருந்தெல்லாம் அழைப்பு. தனால் ஃபோனில் "அவர் இல்லை, நான் அவர் தங்கை பசுகிறேன்" என்று கூறிச் சமாளிக்கிறாராம்.

ஆக்ஷன் கிங் மும்பாய் புகழ் மனியான நடிகைக்கு அம்பு விட முடியாமல் நொந்து போயிருக்கிறார். 'கிங்' பற்றி இரண்டெழுத்து 'பு' நடிகை மூலம் அறிந்ததால் ஜாக்கிரதையாக இருக்கிறாராம் நடிகை. அதனால் பூஜைக்காக எடுக்கப்பட்ட காட்சிகளிலும் நடிகர் கைவரிசையை ஜாடை மாடையாகக்கூட காண்பிக்க முடியவில்லையாம்.

நாட்டுப்புற பாட்டுக்களில் பிடிப்புள்ள அந்த கிராம இயக்குநர் (பாரதிராஜா அல்ல) பற்றி புதுப்புது விவகாரங்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில் மதுரைக்கு சென்று புதுமுக தேர்வு நடத்தினாராம். தேர்வு செய்ய புதுமுகத்திடம் வித்தையை காண்பிக்க முயன்றாராம். அவர் கண்டிப்பாக மறுத்து திமிறினாராம். அதனால் படத்தில் இருந்தே தூக்கிவிட்டாராம்.

ஆறு எழுத்து விஜய நடிகரின் வீழ்ச்சிக்கு அவரைச் சுற்றியுள்ள ஜால்ராக்கள்தான் காரணமாம். அவரது நல்ல மனதை தங்கள் சுயநலங்களுக்காக உபயோகம் செய்துவிட்டார்களாம்.

## இசை வாரிசுகள்

இளையராஜாவின் மகள் பவதாரிணி 'சுதந்திரம்' என்ற இசை ஆல்பத்துக்கு இசையமைத்தார். நல்ல வரவேற்பு.

அடுத்து திரைப்படம் ஒன்றுக்கு இசையமைக்க தயாராகிவிட்டார். சிறந்த தயாரிப்பாளரும், இயக்குநரும் கிடைத்தால் இசையமைக்க அனுமதிக்கலாம் என்றுள்ளாராம் இளையராஜா.

இளையராஜாவீட்டில் கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா, பவதாரிணி என்ற மூன்று இசை வாரிசுகள். இளையராஜா வீட்டுக் கைத் தடியும் இசையமைக்குமோ?

## லக்கி கேர்ள்

அடுத்தடுத்த வெற்றிப் படங்களில் நடித்ததால் 'லக்கி கேர்ள்' என்று புகழப்படுகிறார் கௌசல்யா.

தனக்கு நெருக்கமானவர்களின் குரல் தொலைபேசியில் கேட்டால், நான்தான் 'லக்கி கேர்ள்' கௌசல்யா பேசுகிறேன் என்கிறாராம்.



www.padippakam.com
படிப்பகம்

## முயலான நீ!

உன்னால்
கல்லான
இந்த நெஞ்சில்
வேறொருத்தியால்
எப்படி
சிலை வடிக்க
முடியும்?
**
பிள்ளையார்
பிடிக்கப்போய்
குரங்கான
கதைதான்!
**

முதலும் முடிவும்
நீயான போது
இந்த
முகாரியால்
எப்படி
பூபாளம்
இசைக்க முடியும்?
**
இந்த வானுக்கு
இன்னுமொரு
நிலவின் வருகை
முயல்க் கொம்பு.
நீயும் தான்!
**

மாரிமுத்து யோகராஜன்,
மட்டக்களப்பு.

## அகதி விசாரணை!

நாடுகளெங்கும் அகதிகள்–
புலம் பெயர்ந்து போன சுதேசியத்தின்
அடிமைகளாய்– வறுமையின் சாயல்கள்!
***
ஆசிர்வதிக்கப்படாத– காறித்துப்பும்
எச்சங்களாய்ப் பிறக்கும் சிசுவிலும்
அகதிக் கணிப்பீடுகள்!
***
ஆம்... இது இதயமுள்ளவர்களின்
அநாதைப் பயணம் – சிறகு முறித்த
சிட்டுக் குருவிகளின் பேரிகைச் சப்தம்!
***
மானிடத்தின் அக்கினிச் சீறலால்,
துன்பங்களின் மேடையில்
உடைந்து கிடக்கும் புகையிரதமாய் எங்கள் சாதிகள்!
***
தொட்டழிக்கும் பீடைகளாய்
அரசியலின் பாராயணங்களில்
நாங்கள் எப்போதும் வருவோம்!
மாய உறைப்புக்கள் யதார்த்தத்தை மறைக்க
தீர்வுப் பொதி நோக்கியே எங்கள்
சிரசுகள் நீண்டிருக்கும்...!
***
வன்னி வீட்டிலிருந்து புறப்பட்டபோது
தாய் மண்ணை முத்தமிட்டோம்.
சாலை ஓரங்களில் வாழ்வு கழியும்போது
அகதிகளின் தர்பார் காண பலபேர்
வந்தார்கள் – செய்து வந்த
பாவம் என்ன? என என்று
விசாரித்துப் போகவாம்...!

விடத்தல்தீவு-உவைஸ்கனி

## மதம்





↑ யானைக்கு மதம் பிடித்தால் ஏற்படும் நாசத்தைவிட, மனிதனுக்கு மதம் பிடித்தால் ஏற்படும் நாசம் மகா பயங்கரம். இந்தியாவில் இந்து மத வெறியர்கள் பாபர் மசூதியை இடித்து தகர்த்த மதவெறியை நாம் அறிவோம். அதன் எதிரொலியான இந்து, முஸ்லிம் கலவரத்தில் பல நூறு மனித உயிர்கள் கருகிப்போயின.

தற்போது இந்தோனிசியா நாட்டில் அரசியல் கலவரங்கள் மத்தியில் மதக்கலவரங்களும் கோரமுகம் காட்டுகின்றன. அங்கு சைனா டவுன் என்ற பகுதியில் கிறிஸ்தவ இளைஞர் ஒருவர் முஸ்லிம் கலவரக்காரர்களால் அடித்துக் கொல்லப்படும் காட்சி இது. மனித நேயத்தை மதவெறி வென்றுவிட்டால் மனிதம் தோற்றுப் போகும். தவறு மதங்களில் அல்ல, மனங்களில்!

## கரையும் கனவுகள்

கடந்தவைகள்
கண்ணீர்க் கோடுகளாய்
கண்முன்னே விரிய
கண்கள் கரையும்!
*
வானவில் போன்ற
வனப்பான பொய்கள்
வானலைவழியே பொழிய
காலம் வீணே கரையும்
*
கானல்நீர் தடாகத்தில்
மூழ்கிய எமக்கு
தாகம் எடுக்கும்....
எம் உதிரம்
பல உத்தமரின்(?)
தாகம் தணிக்கும்!
*
அடித்தவன் கைக்கு
ஒத்தடம் நடக்கும்
காயப்பட்டவன்
காணாமல் போவான்!
*
வாக்குறுதிகள்
காற்றில் கரைய
உழைத்து உரமேறிய
உடம்புகள்
சுடலை மண்ணுக்கு
உரமாகும்!

உரும்பிராய் சிவன்சுதன்.

## தேன்கிண்ணம்

## அந்தநாள் ஞாபகம்



↑ நடிகர் திலகம் சிவாஜிகணேசன் தன் தாயார் ராஜாமணி அம்மையாருடனும், மனைவி கமலாவுடனும் 30 வருடங்களுக்கு முன்னர் எடுத்துக் கொண்ட படம்.

## கோளாறுகள்.....

கவிதை ஒன்றுக்கான
வார்த்தைகளைத் தேடி...
காத்திருக்கையில்
எனக்கும கூடத்தான
அகப்பட்டுக் கொள்கின்றன...!
•••
பகலும் இரவும்
உறவு கொள்ளும்
மு(தல்)ன் இரவு...
செவ்வானக் கட்டில்
சரசத்தின் வேகத்தில்
சிதறிப் போன
பஞ்சு மேகம்...
•••
இன்னும் என்னென்னமோ?
எல்லாமே...
•••
வந்தபாடில்லை
கவிதை மட்டும்...
மீண்டும் மீண்டும்
காத்திருக்க காத்திருக்க...!
•••
வளைந்த நிலவு
முதல் இரவுக்காக
விசிறிப்போட்ட
மல்லிகைப்பூ விண்மீன்கள்,
இவைகளும்கூட
என்பார்வையில்
கடந்து செல்கின்றன...
•••
இப்பொழுது கூட
கவிதை வரவேயில்லை...
•••
இப்பொழுதாவது
சொன்னால் நம்புங்களேன்...
அவளை
நான் காதலிக்கவில்லை....!

அகன் கபிலன்-வவுனியா.

## பேனா நண்பர்கள்




பெயர்: இ. ரொனி குருஸ்,
வயது: 19
முகவரி: சொறிக்கல்முனை, சம்மாந்துறை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.




பெயர்: என். றொபோஜினி,
வயது: 16
முகவரி: கற்பகபுரம், வவுனியா.
பொழுது போக்கு: வானொலி, பேனாநட்பு.

## நில்– கவனி– முன்னேறு


இறந்த மீன்தான்– ஆற்றோடு ஆறாக அது போகிற போக்கில் மிதந்து செல்லும். உயிருள்ள மீன் எதிர் நீச்சல் போடும். சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சமாளித்து வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடுகிறவன்தான் மனிதன். வாழ்க்கை தன்னை எப்படி அடித்துச் செல்கிறதோ அந்த வழியில் செல்கிற மனிதன் சவ சவ மனிதன். பிராணிக்கும் அவனுக்கும் என்ன வேற்றுமை?



பால் கறக்க நினைக்கிறீர்களா? ஜம்மென்று ஒரு ஸ்டூலைப் போட்டு உட்கார்ந்துகொண்டு: "பசுவே, பசுவே வா வா!" என்று ஜபித்துக்கொண்டிருந்தால் பசு தானாகப் பக்கத்திலே வந்து பாலைப் பொழிந்து உங்கள் கையில் கொடுத்துப் போகாது. பசுவிடம் நீங்கள் குவளையுடன் போகவேண்டும். அதை முறைப்படி தட்டித் தடவிக் கொடுத்து, காலைக் கீலைக் கட்டி, தவிடு கிவிடு வைத்துத் தாஜாசெய்துதான் பால் கறக்க வேண்டும். மற்றவர்களிடம் வேலை வாங்கும் எஜமானன்கூட பால்காரனின் சாமர்த்தியத்தோடு நடந்து கொள்வது முக்கியம்.




நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வருபவருக்கும் இரண்டாவதாக வருபவருக்கும் இடைவெளி அதிகம் இருப்பதில்லை. சில சென்டிமீட்டர்தான்! எல்லாவற்றிலும் போட்டியும் இருக்கும், வெற்றியும் இருக்கும். கட்டக் கடைசியில் வெற்றிக் கம்பத்தை தொடத் தன் முழுச் சக்தியையும் வெறியோடு பிரயோகித்து விட வேண்டும்.



கண்ணில் படுகிற உயர்ந்த பொருள்களையெல்லாம் பார்த்து, 'இது எனக்கு இருந்தால்...?' என்று கற்பனை செய்துகொள்ள வேண்டாம். அந்த எண்ணங்கள் உங்களை உற்சாகப் படுத்துவது பத்து சதவிகிதம் என்றால், துவள வைப்பது தொண்ணூறு சதவிகிதம்.

துவளுகிறவரால் வெற்றி எப்படி அடைய முடியும்? ஆகவே எதைப் பார்த்தும் பிரமித்து விடாதீர்கள். பார்க்கிறதுக்கெல்லாம் மனதில் சொந்தம் கொண்டாடாதீர்கள்.



எவ்வளவு கடினமான மரமாயிருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாகப் பல தடவை முயற்சி செய்தால் ஒரு தினம் வெட்டிவிட முடியும். இயலாத காரியம் என்பது இல்லவே இல்லை.



மோதல், தாக்குதல் இவைகளெல்லாம் வாழ்க்கையில் நாம் சந்தித்தாக வேண்டிய விஷயங்கள்... ஆனால் யாருடனாவது நமக்கு உரசலோ மனக்கசப்போ ஏற்பட்டால் ஒரே அடியாக உறவு முறியும்படியாகத் துண்டித்துக் கொண்டுவிட வேண்டாம். கொஞ்சம் வளைத்து, நெம்பி, அகலப்படுத்தி என்பதுபோல அதைச் சமாளியுங்கள். மூடி திறக்க வரவில்லையென்றால் போத்தலையையா உடைத்து விடுகிறோம்?

www.padippakam.com

# வெளிச்சப் பூவெழில்

## உங்கள் குழந்தைகளுக்கு



குழந்தைகள் வளர்ப்பிற்கான சில அரிய யோசனைகளை 'ஈஸ்ட் வெஸ்ட் சீரிஸ்' என்ற சஞ்சிகை தொகுத்து வழங்கியுள்ளது. அவற்றுள் சில இதோ:

★ நேர்மை, உழைப்பு, பொறுமை, மற்றும் தன்னம்பிக்கை ஆகிய பண்புகளை உங்கள் சொந்த வாழ்வில் ஏற்பட்ட சம்பவங்களின் அடிப்படையில் உங்கள் குழந்தைகளுக்குக் கற்பியுங்கள்.

★ திறந்த மனதுடன் அடிக்கடி அவர்களைப் புகழுங்கள். மென்மையான முறையில் அவர்களது தீய பழக்கத்தை எடுத்துக்கூறி அவர்களைத் திருத்துங்கள்.

★ வீணான முறையில் பொழுதுபோக்குவதைத் தவிருங்கள். படிக்கும் நேரத்தில் ரீ.வி. பக்கம் அனுமதிக்காதீர்கள்.

★ உங்கள் குழந்தைகளின் நண்பர்களைக் கண்காணியுங்கள். தீய பழக்கங்கள் அவர்கள் மூலம்தான் பரவும்.

★ பெற்றோர்களாகிய நீங்கள் சண்டை, சச்சரவுகளை நீக்கி குழந்தைகளுக்கு ஓர் இனிய இல்லத்தை ஏற்படுத்திக் கொடுங்கள்.

★ குழந்தைகளுக்காகத் தினமும் சிறிது நேரம் கண்டிப்பாக ஒதுக்குங்கள்.

★ தவறுகளின் மூலம் பாடம் பெறுவது பற்றிக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள். சிறிய தவறுக்காக குழந்தையைக் கொடுமைப்படுத்தாதீர்கள்.

★ அன்பாகவும், தெளிவாகவும், அதே நேரத்தில் உறுதியாகவும் அவர்களைப் பற்றிய உங்கள் வருங்காலத் திட்டத்தை எடுத்துக் கூறுங்கள்.

★ எல்லாவற்றையும் விட மேலாக குழந்தைகளை அவர்களின் தனித் தன்மையோடு வளர விடுங்கள். உங்களின் சுயநலத்தையும், விருப்பத்தையும் அவர்கள் மேல் திணிக்காதீர்கள்.

## சின்னச் சின்ன யோசனைகள்

- புழுங்கலரிசியை உணவுக்குப் பயன்படுத்துவதே சிறந்தது. அதில் உயிர்ச்சத்துக்கள் சேமிக்கப்படுகின்றன. பச்சரிசியில் அவை தவிட்டோடு போய்விடும்.
- புளி, மிளகாய் போன்றவை சில காலங்களில் மலிவாகக் கிடைக்கும். ஏனைய காலங்களில் 3, 4 மடங்குகள் வரைகூட அவற்றின் விலை உயர்வதுண்டு. ஆகவே அவை மலிவாகக் கிடைக்கும் பருவகாலங்களில் ஒரு வருடத்திற்குத் தேவையானளவு வாங்கி வைத்து வீட்டில் பாதுகாத்து வைத்துக் கொள்ளலாம்.
- தேவையான அளவு சாமான்களை மட்டும் வாங்கினால் பொருட்கள் வீணாவதைத் தவிர்க்கலாம். புதிய உணவுப் பொருட்களை வாங்கும்போது குறைந்த அளவே வாங்க வேண்டும். அப்போதுதான் அது நமக்குப் பிடிக்காவிட்டாலும் அதிகம் வீணாகாது.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-

**த. வினோதா,**
**9/5, மாபெரியதென்ன,**
**திகன, இராஜவெல.**

## சமைப்போம் சுவைப்போம்

### உப்புக் கறி

தேவையான பொருட்கள்:

ஆட்டிறைச்சி- 500 கிராம்
உள்ளி-50 கிராம்
சின்ன வெங்காயம்-100 கிராம்
தக்காளி- 100 கிராம்
செத்தல் மிளகாய்- 100 கிராம்
மாஜரின்-1 கரண்டி
சீரகம்- 1 தேக்கரண்டி
உழுந்து- 1 தேக்கரண்டி
மஞ்சள்- 1 சிட்டிகை
கறிவேப்பிலை- அளவாக
உப்பு- தேவையான அளவு.

செய்முறை:

வாணலியில் எண்ணெய் சூடானதும் சீரகம், உழுந்து, மிளகாய் கிள்ளிப்போட்டுத் தாளிக்க வேண்டும். அடுத்து உள்ளிப் பல், முழுதாக உரித்த வெங்காயம் போட்டு வதக்கி, தக்காளி, கறிவேப்பிலை போட்டுக் கிளற வேண்டும். கடைசியாக ஆட்டிறைச்சியைப் போட்டு, மஞ்சள் தூளும், உப்புத்தூளும் தூவி விடுங்கள். 5 நிமிடங்களுக்குப் பிறகு ஒரு டம்ளர் வெந்நீர் ஊற்றி, மிதமான தீயில் வேகவிடுங்கள். இறைச்சி நன்றாக வெந்து எண்ணெய் பிரியும் சமயம் அடுப்பிலிருந்து இறக்கி விடலாம்.

செட்டிநாடு சமையல் நிபுணர்: எஸ்.பி. பாஸ்கரன்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FW

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-12-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

65 — புவனா



பி.பி.சி. தொலைக்காட்சிக்கு டயானா அளித்த பேட்டியால் உலகெங்கும் பரபரப்பு ஏற்பட்டது.

ஜேம்ஸ் ஹெவிற்றுடன் உடல் உறவு ஏற்பட்டதை பகிரங்கமாக டயானா ஒப்புக் கொள்வார் என்பதை எவருமே எதிர் பார்த்திருக்கவில்லை.

அரச குடும்பத்தினரும் அதிர்ந்து தான்போனார்கள். அதன் பின்னரும் டயானாவுக்கு விவாகரத்து கொடுக்காமல் இருந்தால், அரச குடும்ப மானம் கப்பலேறிவிடும் என்று எண்ணினார் மகாராணியார்.

டயானாவுக்கு விவாகரத்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை கவனிக்குமாறு தமது சட்ட வல்லுநர்களுக்கு பணிப்புரை வழங்கினார் மகாராணி.

அரச குடும்பத்தின் இந்த ஏற்பாடுகள் டயானாவுக்கும் தெரியவந்தன.

அவர் மகிழ்ந்தார். "அவர்களாகவே விவாகரத்து தரப்போகிறார்கள். நானாகவே விவாகரத்து தரமாட்டேன் என்று கர்வமாக கூறினாரே அந்த மனிதர். இப்போது என்ன செய்யப்போகிறார்?" என்று கேட்டாராம் டயானா.

பி.பி.சி. பேட்டியில் பின்வரும் கேள்வியும் தொடுக்கப்பட்டது.

"சாள்ஸுடன் தொடர்ந்து வாழ்ந்திருந்தால், அவர் அரசராக அரியணை ஏறியதும், அரசி என்ற அந்தஸ்து உங்களுக்கு கிடைத்திருக்குமே?"

அக் கேள்விக்கு டயானா கூறிய பதில், கோடிக்கணக்கான மக்களை கவர்ந்தது.

"நான் மக்களின் உள்ளங்களை ஆட்சிபுரியும் அரசியாக இருக்கவே விரும்புகிறேன்!" என்று கூறினார்.

டயானாவின் பி.பி.சி. பேட்டிக்கு இன்னொரு சிறப்பும் இருக்கிறது.

உலகில் அதிகமான மக்களால் பார்க்கப்பட்ட நிகழ்ச்சி என்ற உலக சாதனையை படைத்தது.

டயானா உலக அளவில் பெற்றிருந்த செல்வாக்குத்தான் அவரது பேட்டி உலக சாதனை படைக்கும் அளவுக்கு பல கோடி மக்களால் பார்க்கப்பட காரணமாகியது.

## "நல்ல ஜோடியாக நீடித்திருப்போம் என்றே கனவு கண்டேன்"



### சர்ச்சைகள்

டயானா பேட்டியில் கூறிய கருத்துக்கள் தொடர்பாக ஆதரவுக் கருத்துக்களும், எதிர்க் கருத்துக்களும் மோதிக் கொண்டன. சர்ச்சைகள் தொடர்ந்தன.

டயானா ஜேம்ஸ் ஹெவிற் பற்றிய செய்திகளை சிலர் நம்பவில்லை. பத்திரிகைகள் தங்கள் விற்பனைக்காகவும், பரபரப்புக்காகவும் கட்டிவிடும் கதை என்றே நினைத்தனர்.

டயானா தன் வாயாலேயே அதனை உறுதி செய்தபோது முன்னர் நம்ப மறுத்தவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

அதனால் டயானாமீது தாம் கொண்டிருந்த அபிமானத்தை துறந்துவிட்டு விமர்சிக்க ஆரம்பித்தனர்.

டயானாவின் தீவிர ஆதரவாளர்கள் அவருக்காக பரிந்துகொண்டு வாதாடினார்கள்.

சாள்ஸ் தனக்கும் கமீலாவுக்கும் இடையே அந்தரங்க உறவு இருப்பதை ஒப்புக்கொண்டு விட்டார்.

அதற்காக சாள்ஸை கண்டிக்காத கூட்டத்தினர், டயானா ஒப்புக்கொண்டதற்காக முணுமுணுப்பது ஒரு பக்க சார்பான வாதம் என்று சாடினார்கள்.

"ஒழுக்கம் என்பது சாள்ஸுக்கும் டயானாவுக்கும் பொதுவானது. தன் இளம் மனைவி இரவுகளை தனிமையில் கரைத்துக் கொண்டிருக்க, நடுத்தரவயதுப் பெண்ணுடன் கட்டிலை பகிர்ந்து கொண்டார் சாள்ஸ். டயானா இன்னொரு ஆணை நாடுவதற்கு சாள்ஸ்தான் முழு முதல் காரணம். ஒரு கணவர் தன் மனைவியிடம் காண்பிக்க வேண்டிய பரிவையோ, பாசத்தையோ, தாம்பத்திய ஈடுபாட்டையோ டயானாவுக்கு போதியளவு வழங்க சாள்ஸ் தவறிவிட்டார்." என்று டயானாவின் அனுதாபிகள் குற்றம் சாட்டினார்கள்.

### டயானா கூறியது

டயானா பி.பி.சி. பேட்டியில் கூறிய உருக்கமான கருத்து அவரது அனுதாபிகளை கவர்ந்தது.

"திருமணம் செய்துகொள்ளும் எந்தப் பெண்ணும் அத் திருமணம் முறிந்து விடக் கூடாது என்றே நினைப்பாள். என் திருமணமும் எக்கட்டத்திலும் முறிந்துவிடக் கூடாது என்றே நினைத்தேன்.

எனது பெற்றோர் விவாகரத்து செய்து கொண்டமையினால் அவர்களது பிள்ளைகளாகிய நாங்கள்பட்ட துயரம் என் உள்ளத்தில் வெகு ஆழமாகப் பதிந்திருந்தது. எப்பாடுபட்டாவது என் திருமணம் நீடித்து நிலை பெறவேண்டும் என்பதே என் தவிப்பாக இருந்தது.

எனது கனவரை மிக ஆழமாக நேசித்தேன். நல்ல ஜோடியாக நாங்கள் நீடித்திருப்போம் என்றே கனவு கண்டேன்.

எனது பெற்றோர் மத்தியில் ஏற்பட்ட எத்தகைய சச்சரவும் எமக்குள் தலை காட்டக் கூடாது என்பதே என் அன்றாடப் பிரார்த்தனையாக இருந்தது.

எங்கள் உறவு நீடிக்க எதனைச் செய்யவும் நான் தயாராக இருந்தேன்.

எனக்கு மட்டுமல்ல, எங்கள் உறவு நன்றாக இருக்க வேண்டும் என்று சகலரும் விரும்பினார்கள் என்பது எனக்குத் தெரியும்.

எல்லாமே ஒரு கனவாக கற்பனைக் கதையாக முடிந்துவிட்டது.

ஒரு பயங்கரமான சுழியில் அகப்பட்டுவிட்டேன். ஒன்றில் சுழியில் அகப்பட்டு அமிழ்ந்து விடவேண்டும். அல்லது எதிர் நீச்சலடித்து வெளியேற வேண்டும். நான் எதிர்நீச்சலடித்து வெளியேறிவிட்டேன்...!" என்று கூறியிருந்தார்.

டயானா இதனைக் கூறும்போது தொலைக்காட்சி பேட்டியை பார்த்துக் கொண்டிருந்த பலர் கண்ணீர் சிந்தினர். சாள்ஸை சபித்தனர்.

### வில்லியம்ஸ் கேள்வி

கமீலா பற்றியும் பி.பி.சி. பேட்டியாளர் டயானாவிடம் கேட்கத் தவறவில்லை.

கமீலா பற்றிய கேள்விக்கு டயானா என்ன பதில் கூறப் போகிறார் என்பதை அறிய பேட்டியை கண்ணுற்றவர்கள் ஆவலாக இருந்தனர்.

டயானா எவ்வித சலனமும் இல்லாமல் பதிலளித்தார்: "வாழ்க்கையில் ஒருவரை மனப்பூர்வமாக நேசிக்க நேர்ந்தால் அந்நிலையிலிருந்து மாறுபடலாகாது. அதுவும் நீங்கள் விரும்பிய ஒருவரே உங்கள் வாழ்க்கைத் துணையாகி விட்டால் அது உங்கள் அதிஷ்டம்தான். தொடர்ந்து அந்த உறவை உறுதியாக வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். மகன் வில்லியம் என்னிடம் "என்னதான் நடக்கிறது?" என்று கேட்டான்.

இக் கேள்விக்கு என்ன பதில் தரமுடியும்? ஆனால் நான் பதிலளித்தேன். கமீலா பார்க்கருக்கும் சாள்ஸுக்கும் இடையிலுள்ள உறவு பற்றிக் கூறினேன்.

"உங்கள் மணமுறிவுக்கும் அதுதான் காரணமா?" என்றும் கேட்டான்.

அதற்கு நான் கூறினேன்: 'இந்தத் திருமணத்தில் இருவர் மட்டும் சம்பந்தப்பட்டவர்கள் என்றில்லை. இதில் மூவர் தொடர்பு கொண்டுள்ளனர். அத்துடன் பத்திரிகைகளின் தொந்தரவுகளும் சேர்ந்து கொண்டன.

நாங்கள் இருவரும் ஒரு கூரையின் கீழ் ஒன்றாகக் குடியிருப்பது கடினமாகிவிட்டது.' என்று கூறினேன்" எனப் பதிலளித்தார் டயானா.

### விவாகரத்து

டயானாவின் பேட்டி வெளியான 4 வாரங்களுக்குள் மகாராணி எலிசபெத் இங்கிலாந்து பிரதமருடனும், கண்டர்பரி பிஷப் பாண்டவருடனும் ஆலோசனை நடத்தினார்.



சாள்ஸுக்கும், டயானாவுக்கும் மகாராணி உத்தியோகபூர்வமாக கடிதங்கள் அனுப்பினார். இருவரையும் விவாகரத்துக்கு தயாராகும்படி கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.

இருபக்க சட்டவல்லுநர்களும் விவாகரத்துக்கான விபரங்களை ஆராயத் தொடங்கினார்கள்.

அந்தநாள் நெருங்கி வந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

லுனுகல வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**செல்வி ஆர். வசந்தி,**
சவ்லன்ட்ஸ் அப்பர் தமிழ் வித்தியாலயம், லுனுகல.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





> கண்கள் இரண்டிருந்தும்
> காணுந் திறமை யற்ற
> பெண்களின் கூட்டமடி! - கிளியே!
> பேசிப் பயனென் னடி!
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# தன் கையே தனக்கு உதவி

ஒரு நெல் வயலில் நெற்கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராய் நின்றது. அந்த வயலுக்குள் வானம்பாடிக் குருவி ஒன்று கூடு கட்டி, குஞ்சு பொரித்திருந்தது.

ஒருநாள் வயல் சொந்தக்காரன் வந்து, வயலைச் சுற்றிப் பார்த்தான்.

'வயலில் கதிர்கள் நன்றாக முற்றி விட்டன. எனக்கு நிறைய வேலைகள் இருப்பதால், அடுத்த ஊரில் இருக்கும் என் தம்பியை வரவழைத்து அறுவடை செய்ய வேண்டும்' என்று தனக்குத் தானே சொல்லிவிட்டுச் சென்றார் வயல்காரன்.

தாய்வானம்பாடி இரை தேடிச் சென்றதால் கூட்டில் இருந்த குஞ்சுகள் மூன்றும் வயல்காரன் சொன்னதைக் கேட்டன. அதைக் கேட்டுப் பயந்த குஞ்சுகள் தாய்ப்பறவை வந்ததும்,

"அம்மா வயல் சொந்தக்காரன் வயலை அறுவடை செய்யத் தன் தம்பியை அழைக்கப் போகிறானாம். நாம் இந்த இடத்தை விட்டுப் போய் விடுவது தான் நல்லது!" என்றன.

அதற்குத் தாய்ப்பறவை, குஞ்சுகளைப் பார்த்து,

"கவலைப்படாதீர்கள். வயலுக்குரியவன் வேறொருவனை நம்பும்வரை அறுவடை வேலை அவ்வளவு விரைவில் நடக்காது. நாம் இன்னும் சில நாட்கள் இருப்போம்!" என்றது.

ஒரு வாரம் சென்றிருக்கும். வயல் சொந்தக்காரன் வயலுக்கு வந்தான்.

'தம்பியை நம்பினால் அறுவடை நடக்காது. என் நண்பன் ஒருவன் இருக்கிறான். அறுவடை வேலையை அவன் பொறுப்பில்விட வேண்டும்' என்று! தனக்குத்தானே சொல்லி விட்டுச் சென்றான்.

இந்தத் தகவலை தாய்ப்பறவை வந்ததும், குஞ்சுகள் கூறின.

"வயல் சொந்தக்காரன் இன்னும் பிறர் கையைத்தான் எதிர்பார்க்கிறான். ஆகவே செய்யாமல் இருந்தால் நெல்மணிகள் சிந்திச் சிதறி விடும். அதனால் நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே நானே சில ஆட்களை வைத்துக் கொண்டு, நாளையே அறுவடை செய்கிறேன்,' என்று கூறியபடி சென்றுவிட்டான்.

தாய்ப்பறவை கூட்டுக்கு வந்ததும் குஞ்சுகள் இதைத் தெரிவித்தன.

"வயல் சொந்தக்காரன் தன் கையே தனக்கு உதவி என்ற முடிவுக்கு வந்து விட்டான். இனி நிச்சயம் அவன் அறுவடையை ஆரம்பித்து விடுவான். எனவே நாம் இன்றிரவே வேறு இடத்திற்குச் சென்று



அறுவடை அவ்வளவு விரைவில் நடந்து விடாது. எனவே இன்னும் சில நாட்கள் நாம் கவலை இல்லாமல் இங்கே இருக்கலாம்!" என்று தாய்ப்பறவை கூறியது.

அடுத்த ஒரு வாரத்தில் வயல் சொந்தக்காரன் மறுபடி வயலுக்கு வந்தான்.

நெற் கதிர்கள் முற்றி உதிர்ந்து தொங்குகின்றன. இனிமேலும் அறுவடை விடுவோம்!" என்று தாய்ப்பறவை கூறியது.

'எந்தப் பணியாக இருந்தாலும் தன் திறமையையும், சக்தியையும் நம்பிக் கொண்டால் தான், அந்தப் பணி துரிதமாகவும், சரியாகவும் நடைபெறும். பிறர் கையை எதிர்பார்த்துச் செய்யும் எந்தக் காரியமும் சீராக நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாது.

# அதிசயம் - ஆனால் உண்மை!



↑ மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ட்ரினிடாட்டில் ஓர் அதிசய ஏரி உள்ளது. இந்த ஏரிக்குள் இருந்து எடுக்கப்படும் கற்கள் ரோட் போட பயன்படுகின்றன. இந்தக் கற்கள் தொடர்ந்து ஏரிக்குள் இருந்து கிடைத்துக்கொண்டே உள்ளன.

→ பிஜித்தீவில் அண்மைக்காலம் வரை திமிங்கிலத்தின் பற்கள்தான் பணமாகப் பயன்பட்டது.



இப்போது தான் உலோக, மற்றும் காகித நாணயங்கள் புழக்கத்திற்கு வந்துள்ளன.

↘ குளிர் காலத்தில் துருவப் பகுதியில் உள்ள கரடிகளுக்கு உணவு கிடைப்பதில்லை. குளிர்காலம் முடியும்வரை பல நாட்கள் இவை உறக்கத்திலேயே பொழுதைக் கழிக்கும்.



← தேனீக்கள் ஒரு கிலோ தேனைச் சேகரிக்க 40 இலட்சம் பூக்களின் இனிப்புச் சாற்றை உறிஞ்சி எடுக்கின்றன.



# வாரம் ஒரு நாடு

## தென்னாபிரிக்கா



தலைநகர் -பிரிட்டோரியா (நிர்வாகம்)
கேப்டவுன் (அரசு)
பரப்பு - 12,21,037 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை - 4.15 கோடி
மொழி - ஆங்கிலம் மற்றும் பல இனத்தவர்களின் பிராந்திய மொழிகள்..
எழுத்தறிவு - 99% (வெள்ளையர்) 50% (கறுப்பினத்தவர்)
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - ராண்ட்
தனிநபர் வருமானம் - 2670 டொலர்.

### அமைவிடம்:

அத்லாந்திக் பெருங்கடல், இந்து மாக்கடல் மற்றும் தென்கடல் ஆகியவை மூன்று புறமும் சூழ வடக்கே நமீபியா, பொட்ஸ்வானா, ஸிம்பாப்வே மற்றும் மொஸாம்பிக் ஆகிய நாடுகளைக் கொண்டது தென்னாபிரிக்கா. ஆபிரிக்காக் கண்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளமையினால் இப் பெயர் காரணப் பெயராகிவிட்டது.

### வரலாறு:

பிரிட்டிஷ்காரர்களால் கைப்பற்றப்பட்ட இந் நாடு 1910ம் ஆண்டில் தென்னாபிரிக்கா எனப் பெயரிடப்பட்டது. 1961ம் ஆண்டு நம்பிக்கை வாக்கெடுப்பைத் தொடர்ந்து குடியரசாயிற்று. 1948ல் தேசியக் கட்சி அதிகாரத்தில் வந்ததைத் தொடர்ந்து நிறவெறி பேதங்கள் தொடங்கின.

சிறுபான்மை வெள்ளையர் பெரும்பான்மையான கறுப்பின மக்களை ஆண்டனர். 1990ல் இதனால் பெருங்கலவரங்கள் வெடித்தன. 1994 பொதுத் தேர்தலில் நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் வெற்றி பெற்று மண்டேலா ஜனாதிபதியானார்.

### பொருளாதாரம்:

ஆபிரிக்க நாடுகளிலேயே செல்வம் மிக்கது. தங்கம், வைரம் பெருமளவில் கிடைக்கின்றன. உருக்கு, பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் முக்கியமானவை. விவசாயம் வளர்ந்து வருகிறது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.12.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 275
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 273

**பரிசுக்குரியவர்:**
பாதிமா நிஷ்மா நஜீம்
ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| சி.பீற்றர் ரெக்சன், வ/முஸ்லிம் மகாவித்தியாலயம், வவுனியா. | வை.சியாட், அது/நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம், நேகம்பஹா. |
| தே.சஜிதா, மட்/களுதாவளை மகாவித்தியாலயம், களுதாவளை. | ரி.கிருஸ்ணசாமி தர்ஷினி, நு/சென்ஜோசப் தமிழ் ம.வி., நுவரெலியா. |
| நித்தியாஸ்ரீ சுப்பிரமணியம், பெண்கள் உயர்தரப் பாடசாலை, கண்டி. | பிரியா சிவலிங்கம், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை. |
| எம்.எம்.எம். உனைஸ், மட்/அன்நாஸர் வித்தியாலயம், காத்தான்குடி-01. | எம்.தினேஷ்குமார், க/ரோ/க.தமிழ் பாடசாலை, அம்பிட்டிய, கண்டி. |
| க.நிரஞ்சன், ஹோல் புறுக் தமிழ் மகா வித்தியாலயம், அக்கரப்பத்தனை. | தி.சரண்யா, புனித அன்னம்மாள்- பெண்கள் வித்தியாலயம், கொட்டாஞ்சேனை. |

# சின்னச் செய்திகள்

### செயற்கைப் பற்கள்

ஒஸ்ரியா நாட்டிற்கும், சுவிற்ஸர்லாந்து நாட்டிற்கும் இடையே 160 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள நாடு லிச்சிட்டென்ஸ்டின். இந்த நாட்டில்தான் உலகிலேயே மிக அதிகமாகச் செயற்கைப் பற்களை இறக்குமதி செய்து வருகிறார்கள்.

◆❊❑

### இரசக் கலவை

முகம் பார்க்கும் கண்ணாடிகளில் பூசப்படும் இரசம் எதனால் தயாரிக்கப்படுகிறது என்று தெரியுமா? பாதரசத்தை வெள்ளீயத்துடன் கலந்தால் வெள்ளீய இரசக் கலவை உண்டாகும். இந்த வெள்ளீய இரசக்கலவை தான் கண்ணாடியில் பூசப்படுகிறது.

◆❊❑

### அதிகம் பேர்

உலகிலேயே 100 வயதைத் தாண்டியவர்கள் அதிகம் பேர் வசிக்கும் நாடு அசர்பைஜான் ஆகும். இது முன்னாள் சோவியத் குடியரசுகளில் ஒன்றாக இருந்து பிரிந்த நாடு.

◆❊❑

### நகரங்கள்

உலக நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. 2010ம் ஆண்டளவில் நகரங்களின் எண்ணிக்கை இப்போது இருப்பதை விட இரட்டிப்பாகி விடும்.

1980ல் நகரங்களின் எண்ணிக்கை 438 ஆக இருந்தது. இது 2010ம் ஆண்டில் 892 ஆக அதிகரித்துவிடும். மக்கள் தொகைப் பெருக்கமே இதற்குக் காரணமாகும்.

◆❊❑

### நோய்கள்

மனிதனைக் கொல்லும் நோய்கள் மற்றும் காரணங்கள் என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) சிலவற்றைப் பட்டியலிட்டுள்ளது. அவற்றில் மிக முக்கியமானவை, இவை:

1. இதய நோய்கள்
2. புற்றுநோய்
3. நிமோனியா
4. சிறுநீரகக் கோளாறுகள்
5. மூளைக் கட்டிகள்
6. முதுகுத்தண்டுக் கோளாறுகள்
7. எலும்புருக்கி நோய்
8. விபத்துக்கள்.

◆❊❑

# உயில்



ஒருவர் இறந்த பிறகு தம்முடைய சொத்துக்கள் யாருக்கு உரிமையாக வேண்டும் என்பதைக் குறிப்பிடும் உரிமைப் பத்திரம் உயில் என்று அழைக்கப்படும்.

உயில் எழுதும் பழக்கத்தை முதன் முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் ரோமானியர்கள்.

அமெரிக்காவில் திருமதி பிரடெரிக்காக் என்ற பெண்மணி இறக்கும்போது ஓர் உயில் எழுதினார். இதில் 96 ஆயிரம் வார்த்தைகள் இருக்கின்றன. இது 4 பாகங்களாக தொகுக்கப்பட்டுள்ளது. இதுதான் உலகிலேயே எழுதப்பட்ட பெரிய உயில்.

உலகிலேயே மிகச் சிறிய உயில், முத்திரை அளவில் எழுதப்பட்டதுதான். அந்தச் சிறிய உயிலில் சொத்து விபரங்களோடு, எழுதியவரின் கையெழுத்தும் சாட்சிக் கையெழுத்துக்களும் இருந்தன. இதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

# பெயர் வரக் காரணம்.....?



எகிப்தில் உள்ள பிரமிட்களுக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

எகிப்தில் உள்ள பிரமிட்கள் கட்டப்பட்டு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகே கிரேக்கர்கள் எகிப்து நாட்டிற்கு வந்தனர். அங்கு பிரமிட்களைப் பார்த்தனர்.

உயரமான அந்தப் பிரமிட்களைப் பார்த்த கிரேக்கர்கள் பிரமித்துப் போயினர். அவர்கள் உடனே, அருகிலிருந்த எகிப்தியர்களைப்பார்த்து, 'அது என்ன?' என்று சைகையால் கேட்டனர்.

கிரேக்கர்கள் பிரமிட்டின் உயரத்தைத் தான் குறிப்பிடுகிறார்கள் என்று எண்ணிய எகிப்தியர்கள், "அது பெரிய உயரம் தான்!" என்று பெருமையாகச் சொன்னார்கள்.

உயரம் என்பதைக் குறிக்கும் எகிப்துச் சொல் 'பிரமஸ்'. அந்தச் சொல்லை எகிப்தியர்கள் பிரமிட்டைப் பார்த்து அடிக்கடி பேசியதால் பிரமஸ் என்பது தான் பிரமிட்டின் பெயர் என்று எண்ணிய கிரேக்கர்கள் பிரமிட்டை பிரமஸ் என்று அழைத்தனர். பின்னர் அது காலப் போக்கில் பிரமிட் என்று பெயராகி விட்டது.

# பாரத ரத்னா



* **'பாரத ரத்னா' என்றால் என்ன?**
*நமது அண்டை நாடான இந்தியாவில் வழங்கப்படும் மிக உயரிய அரச விருது.*

* **இந்த விருது யாருக்கு வழங்கப்படுகிறது?**
*நாட்டிற்காக விசேட சேவையைச் செய்யும் ஒருவருக்கு இது வழங்கப்படுகிறது.*

* **இது வருடா வருடம் வழங்கப்படுகிறதா? இது இறந்தவர்களுக்கு மட்டும்தான் அளிக்கப்படுகிறதா?**
*இது வருடாந்தம் வழங்கப்படும் விருது அல்ல. அத்துடன் இறந்தவர்களுக்கு வழங்கப்படும் விருதும் அல்ல. அன்னை தெரேசா போன்றவர்களுக்கு இறப்பதற்கு முன்னரே வழங்கப்பட்டது.*

* **முதன் முதலில் இந்த விருது எப்போது, யாருக்கு வழங்கப்பட்டது?**
*முதன் முதலில் இந்த விருது 1954ம் ஆண்டு இந்திய முன்னாள் ஜனாதிபதிகளான ராஜாஜி, டாக்டர் ராதா கிருஷ்ணன் மற்றும் இந்திய விஞ்ஞானி சி.வி.ராமன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.*

* **இந்த விருது இந்தியர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுமா?**
*இல்லை. இந்த விருதை இரண்டு வெளிநாட்டவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஒருவர் எல்லைக்காந்தி என்றழைக்கப்படும் பாகிஸ்தானைச் சேர்ந்த கான் அப்துல் கபார்கானுக்கும், தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கும் வழங்கப்பட்டது*



படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி

## 07

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

**இதுவரை**

பிரபல தொழிலதிபர் ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன். பம்பாயில் சிறையிலிருந்து விடுதலையாகி வருபவனை வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார். நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான். நித்தியன் சிறையில் இருந்து வந்தவன் என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய சம்மதம் என்கின்றனர். நித்தியனோ சாந்தாவை கல்யாணம் செய்ய விரும்புகிறான்.

**இனி......**

நித்தியன் தன் அப்பாவின் கையில் இருந்த பிஸ்டலையே பயத்தோடு பார்த்தான்.

ருத்ர மூர்த்தி பிஸ்டலின் முனையால் தன் இடது பக்க கன்னப் பரப்பை சொறிந்து கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்.

"நித்தியா இப்படியொரு மோசமான நிலைமை நம்ம கம்பெனிக்கு எப்பவுமே வந்தது இல்லை. விசாலியோட அப்பா விஜயராகவன் மட்டும் எனக்கு நம்பிக்கை தர்ற மாதிரி பேசாம இருந்திருந்தா என்னோட கதை எண்ணைக்கோ முடிஞ்சிருக்கும்.

"அப்பா"

"உனக்கு இந்த நியூஸ் அதிர்ச்சியா இருக்கும்னு எனக்குத் தெரியும். இதை உன்கிட்ட சொல்லாமலேயே சமாளிச்சுட லாம்னு நினைச்சுட்டிருந்தேன். ஆனா விசாலியை கல்யாணம் பண்ணிக்கிற விஷயத்தில் நீ ஆர்வம் இல்லாம இருக்கிறதைப் பார்த்து, என் மனசுக்குள்ளே ஒரு பயம். நீ எங்கே விசாலியை வேண்டாம்னு சொல்லிடுவியோங்கற தவிப்பு என்னை தகிக்க ஆரம்பிச்சது. நீ நிலைமையை புரிஞ்சுக்கிட்டு நடக்கணும்ங்கறதுக்காக என் மனசுல இருக்கிற அவஸ்தையை வெளியே கொட்டிட்டேன்."

நித்தியன் ஏதோ சொல்ல முயன்ற விநாடி ருத்ரமூர்த்தியின் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோன் கூப்பிட்டது. எடுத்துக் காதுக்குக் கொடுத்தார்.

"எஸ்..."

மறுமுனையில் விஜயராகவன் பேசினார்.

"என்ன சம்பந்தி-மணி இப்போ ஏழேகால். ஹொட்டல் சோழாவில் நாங்க எல்லாரும் வெயிட் பண்ணிக்கிட்டிருக்கோம். பார்ட்டி இருக்கிறதையே மறந்துட்டீங்களா?"

"மறக்கலை... இதோ நானும் நித்தியனும் புறப்பட்டுகிட்டே இருக்கோம்."

"ஏழரை மணிக்குள்ளே வந்துருவீங்களா?"

"கண்டிப்பா..."

"நீங்க லேட் பண்ற ஒவ்வொரு நிமிஷமும் உங்க மருமகளோட கோபம் அதிகமாயிட்டே போகுது."

"இதோ புறப்பட்டுட்டோம்."

செல்ஃபோனை அணைத்துவிட்டு மகனை ஏறிட்டார் ருத்ரமூர்த்தி.

"விசாலியோட அப்பா ஃபோன் பண்ணினார். சோழாவில் பார்ட்டி நாம புறப்படுவோம்?"

"இப்ப எதுக்காக இந்த பார்ட்டியெல்லாம்.

"விசாலி பிரியப்படறா."

"நான் ஜெயிலுக்குப் போய்ட்டு வந்ததுக்கா பார்ட்டி?"

"நீ ஜெயிலுக்குப் போய்ட்டு வந்ததை அவங்க ஒரு பொருட்டாவே எடுத்துக்கலை. நான் அந்த விஷயத்தை மறைச்சதைக் கூட அவங்க தப்பா எடுத்துக்கலை. உனக்கும் விசாலிக்கும் கல்யாணம் நிச்சயமாயிட்ட சந்தோஷத்துக்காகத்தான் இந்த பார்ட்டி!"

"அப்பா! வந்து...!"

"நீ எதையும் சொல்லிட்டிருக்காதே! டிரஸ் சேஞ்ச் பண்ணிக்கிட்டு கிளம்பு! கார்ல போகும்போது எல்லாத்தையும் பேசிக்கலாம்."

ருத்ரமூர்த்தி ஒரு இராணுவ கட்டளை மாதிரி வார்த்தைகளை உதிர்த்துவிட்டுப் போக நித்தியன் அனல் பெருமூச்சொன்றை விட்டபடி அவர் முதுகையே வெறித்தான்.

**ஹோட்டல் சோழா.**

இரண்டாவது மாடியில் இருந்த அந்த சிறிய ஹாலில் ஜீரோவாட்ஸ் வெளிச்சம் பரவியிருக்க ஏறக்குறைய ஐம்பது அறுபது பேர் சஃபாரி சூட்களிலும், பட்டுப் புடவைகளிலும் தெரிந்தார்கள். விஜயராகவனும் புவனேஸ்வரியும் ஹாலுக்குள் வருகிறவர்களை வரவேற்றுக் கொண்டிருக்க, விசாலி ஹாலின் மூலையில் நித்தியனோடு பேசியபடி தெரிந்தாள்.

"என்ன-பார்ட்டி இருக்கிறதையே மறந்துட்டீங்க போலிருக்கு?"

"இல்லையே... ஞாபகம் இருந்தது. ஹோட்டலுக்குப் புறப்பட்டு வர்ற நேரத்துல தான் உங்கப்பா ஃபோன் பண்ணினார்."

"இந்த பார்ட்டியை ஏற்பாடு பண்ணினதே உங்களுக்காகத்தான். இன்னும் கொஞ்சம் ரிச்சா நீங்க டிரஸ் பண்ணிக்கிட்டு வந்திருக்கலாம். இந்த சஃபாரி டிரஸ் உங்களுக்கு எடுப்பாவே இல்லை. 'டிரஸ் சென்ஸ்'ல நீங்க ரொம்பவும் புவர்னு நினைக்கிறேன்."

நித்தியன் மெல்ல புன்னகைத்தான்.

"என்னோட அம்மா உயிரோடு இருந்த வரைக்கும் அவங்கதான் எனக்கு டிரஸ் எடுப்பாங்க. அவங்க போன பிறகு, எனக்கு

**கிரைம் சக்கரவர்த்தி**

**ராஜேஸ்குமார்**

டிரஸ் செலக்ட் பண்றது ஒரு கஷ்டமான காரியமாயிடுச்சு."

"இனிமே உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். உங்க டிரஸ் டிபார்ட்மெண்ட்டை நான் பார்த்துக்கிறேன்."

"......."

"ஒரு தேங்ஸ் கூட சொல்ல மாட்டீங்களா?"

"தே... தேங்ஸ்."

"ஹம்மாடி! ஒவ்வொரு வார்த்தையையும் உங்க வாயிலிருந்து இழுக்க வேண்டியிருக்கு. நீங்க ஏன் ஃப்ரியாவே இருக்க மாட்டேங்கறீங்க? மனசுக்குள்ள எதையோ போட்டு திணிச்சுக்கிட்டு பேசத் திணர்ற மாதிரி இருக்கு."

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை."

"ஜெயிலுக்குப் போயிட்டு வந்ததைப் பத்தியே நினைச்சு நினைச்சு மறுகிட்டிருக்கீங்களா?"

"ம்... அந்த குற்ற உணர்ச்சி எனக்கு இருக்காதா என்ன?"

"நீங்க எந்தத் தப்பும் பண்ணலையே!"

"தப்பு பண்ணலை தான். இருந்தாலும், அந்த ஜெயிலுக்குள் இருந்த கறுப்பு நாட்கள் மனதை ரணம் பண்ணாமே இல்லை."

"சரி... இந்த சந்தோஷமான நேரத்துல அதைப்பத்தி ஏன் பேசணும்? வேற ஏதாவது டாபிக் பேசுவோம். உங்களுக்கு என்ன நிறம் பிடிக்கும்?"

"ஒயிட்."

"மை குட்னஸ்."

"என்ன?"

"உங்களுக்கு நேர் எதிர் நான். எனக்கு பிடிச்ச நிறம் கறுப்பு. சரி மியூஸிக்ல எது மாதிரியான மியூஸிக் பிடிக்கும்?"

"கர்நாடிக்."

"போச்சுடா."

"உனக்கு?"

"எனக்கு பாப் மியூஸிக். ரெண்டு பதில்களிலேயும் டிஃப்பர் ஆயிட்டோம். இப்போ மூணாவது கேள்வி. உங்களுக்கு பிடிச்ச பூ?"

"வேண்டாமே..."

"நோ... நோ... சொல்லியே ஆகணும்."

"இந்தக் கேள்விக்கும் என்னோட பதில் உன்னோட பதிலுக்குமாறு பட்டுத்தான் இருக்கும். நீ நினைச்சிருக்கிற பூவை கண்டிப்பா நான் சொல்ல மாட்டேன்."

"சொல்லுங்களேன் பார்க்கலாம்."

"கனகாம்பரம்"

"வாவ்!"

"என்ன?"

"எனக்கும் அதே கனகாம்பரம்தான்."

"பொய் சொல்றே?"

"அட... நிஜமாத்தான்."

"சரி உனக்கு ஏன் கனகாம்பரம் பிடிக்கும்?"

"அது ரெண்டு நாளானாலும் வாடாது. வாடினாலும் நிறம் மாறாது. வேறு எந்தப் பூவை தலையில் வச்சுக்கிட்டாலும் அதுக்கு ஆயுசு சில மணி நேரம்தான்! உங்களுக்கு கனகாம்பரம் பூ பிடிச்சதுக்கு என்ன காரணம்?"

"அது வந்து...." நித்தியன் சொல்ல முயற்சித்த விநாடி மேடையின்மீது ஏறி நின்றிருந்த விஜயராகவனின் குரல் மைக்கில் கணீரென்று கேட்டது.

"லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்! எங்களுடைய அழைப்பை ஏற்று இந்த 'கேண்டில்லைட்' டின்னருக்கு வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி. இது திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்ட பார்ட்டி என்றாலும், இதில் முக்கியமான ஒரு விஷயத்தை உங்களோடு இப்போது பகிர்ந்து கொள்ளப் போகிறேன்."

கும்பல் ஆர்வமாய் விஜயராகவனையே பார்க்க அவர் விசாலியையும், நித்தியனையும் ஒரு தடவை பார்வையால் நனைத்துவிட்டு மறுபடியும் மைக்குக்கு உதட்டைக் கொடுத்தார்.

"என் மகள் விசாலிக்கும், என் நீண்ட நாள் நண்பர் ருத்ரமூர்த்தியின் மகன் நித்தியனுக்கும் இன்று காலைலதான் திருமணம் பேசி முடித்தோம். அந்த சந்தோஷத்தைக் கொண்டாடும் வகையில் இன்றைக்கு இந்த பார்ட்டி அமைந்துவிட்டது."

எல்லோரும் கைகளைத் தட்டினார்கள். அரை நிமிட நேரத்துக்கு நீடித்த அந்தக் கைதட்டல் ஓய்ந்ததும் ருத்ரமூர்த்தி மேடையேறி விஜயராகவனின் கையில் இருந்த மைக்கை வாங்கிப் பேசினார்.

"வியாபாரத் துறையில் நண்பர்களாக இருந்த நாங்கள் இப்போது பெண்ணைக் கொடுத்து பெறுவதில் சம்பந்திகளாக மாறி விட்டோம். வருகிற ஜனவரி இருபதாம் தேதி கல்யாணம். இது உங்களுக்கான அட்வான்ஸ் அழைப்பு. முறைப்படியான அழைப்பு உங்களுக்கு விரைவிலேயே வந்து சேரும்."

மறுபடியும் கைதட்டல் எழுந்து அடங்க



விசாலி நித்தியனை புன்னகையோடு பார்த்தாள்.

"கல்யாணத்துக்கு இன்னும் முப்பத்தி மூணு நாள் இருக்கு. நம்ம கல்யாண தேதி நெருங்கறதுக்குள்ளே நீங்க ஒரு ட்யூஷன் எடுத்துக்க வேண்டியது அவசியம்."

"டியூஷனா? எதுக்கு?"

"சிரிப்புன்னா என்ன? மனைவிகிட்ட சிரிக்க சிரிக்க பேசறது எப்படி? கடி ஜோக்ஸ், விட்ஸ் கலெக்ட் பண்ணி அதை டைம்லி பிரசன்ட் பண்றது எப்படி? இதுக் கெல்லாம் நீங்க ஒரு டியூஷன் எடுத்து உங் களை தயார் பண்ணிக்கிட்டாத்தான் நல்லது. இல்லேன்னா மிஸ்டர் உம்மணா முஞ்சிங்கற பட்டம் நீங்க கேட்காமலேயே உங்ககிட்ட வந்து ஒட்டிக்கும்."

நித்தியன் அவஸ்தையாய் புன்ன கைத்தான்.

விசாலி சிரித்தாள். "இப்படி ஸ்மைல் பண்றதை விட நீங்க சும்மாவே இருக்கலாம்."

டின்னர் ஆரம்பமாகிவிட்டதற்கு அடையாளமாய் எல்லோரும் நாற்காலிகளை ஆக்ரமித்துக் கொண்டிருக்க ஹாலின் மேற்கூரையில் மறைவாய் பொருத்தப்பட்டிருந்த ஸ்பீக்கர்களிலிருந்து 'மியூஸிக்' சிதறியது. ஊதுவத்தி புகைமாதிரி வயலின் இழைந்தது.

"வாங்க சாப்பிடப் போகலாம்!" விசாலி நித்தியனை அழைத்த வினாடி, "ஹாய் விசாலி!" என்ற பெண் குரல் பின்பக்கம் இருந்து கேட்டது.

திரும்பிய விசாலி மலர்ந்தாள்.

"ஏய்... ரூபா...! என்னடி! இவ்வளவு லேட்டா வந்திருக்கே?"

"ஆட்டோவுல வந்தேன். ட்ராஃபிக் ஜாம். ஒரு மணி நேரம் பாழ். நான் என்ன செய்யட்டும்?"

"என்னங்க! இது ரூபா. காலேஜ்ல ரெண்டு பேரும் ஒண்ணா படிச்சோம்."

விசாலி சொல்ல அந்த ரூபா குறுக்கிட்டுச் சொன்னாள்.

"ஒண்ணாவே பெயிலானோம்."

"ஏய்... குப்பையை கிளறாதே..."

"சரி... சரி... மிஸ்டர் நித்தியன் கிட்ட உன்னைப் பத்தி ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிடறேன்."

"என்ன சொல்லப் போறே?"

அந்த ரூபா நித்தியனை ஏறிட்டாள். "மிஸ்டர் நித்தியன்! விசாலி ரொம்பவும் எமோஷனல். கேட்டது கிடைக்கணும். நினைத்தது நடக்கணும். இல்லேன்னா அப்செட் ஆயிடுவா... நீங்க அவளுக்கு நல்ல கணவராகவும், அவ உங்களுக்கு நல்ல மனைவியாகவும் இருக்க என்னுடைய வாழ்த்துக்கள்."

"வாழ்த்தியது போதும் பாட்டி! வாங்க சாப்பிடலாம்." விசாலி ரூபாவைப் பிடித்துத் தள்ள, அவள் கேட்டாள்,

"நித்தியன்."

"அவரும் வர்றார். அதோ! ரிசர்வ் பண்ணியிருக்கிற அந்த டேபிள்தான். ஆமா, உன்னோட ஹஸ்பென்ட் வரலையா?"

"அவர் வராமே இருப்பாரா? உங்கப்பாகிட்ட ஷேர் மார்க்கெட்டை பத்தி பேசிட்டிருக்கார்."

இரண்டு பேரும் டின்னர் டேபிளை நோக்கி நடக்க நித்தியன் சொன்னான்.

"நீங்க போங்க! நான் வாஷ்பேசின்ல கை அலம்பிட்டு வர்றேன்."

"சீக்கிரமா வாங்க! பசி வயித்தைக் கிள்ளுது."

நித்தியன் ஹாலின் மூலையில் இருந்த வாஷ் பேசினை நோக்கிப் போனான்.

குழாயைத் திருகி வெது வெதுப்பான வெந்நீரில் கை கழுவிக் கொண்டிருந்த போது வலது பக்கமாய் அந்தக் குரல் கேட்டது.

"ஹலோ..."

நித்தியன் திரும்பினான்.

அந்த இளைஞன் ஒரு புன்னகையோடு நின்றிருந்தான். லேசாய் சிலும்பிய தலைக்கேசம். கண்களில் மெலிதான குளிர் கண்ணாடி.

"நான் ஜெக்தீஷ். ரூபாவோட ஹஸ்பென்ட்."

"ஓ... ப்ளீஸ்ட் டு மீட் யூ."

"விசாலியைக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க... அட்வான்ஸ் கங்க்ராட்ஸ் மிஸ்டர் நித்தியன்."

"தேங்யூ."

"இப்போ உங்ககிட்ட ஒரு தர்மசங்கடமான கேள்வி?"

"என்ன?"

"சாந்தாவை என்ன பண்ணப் போறீங்க?"

(பௌர்ணமி தொடரும்)

---

**அமெரிக்க**

## வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

## 19

**1972** பிப்ரவரியில் சதாம் மாஸ்கோ சென்றார். அப்போதே அமெரிக்காவுக்கு கிலி பிடித்துவிட்டது...

அவர் மாஸ்கோவிலிருந்து திரும்பிய இரண்டாவது மாதத்தில் ஈராக்- சோவியத் யூனியன் நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தானது. "என் நாட்டை யாராவது தாக்கினா நீ உதவிக்கு ஓடி வரணும். அதுபோல் உன் நாட்டை யாராவது தாக்கினா, நான் உதவிக்கு வருவேன்!" என்ற மாதிரியான இராணுவ ஒப்பந்தம் அது.

இதைப் பார்த்து அமெரிக்கா அதிர்ச்சி அடைந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின், இங்கிலாந்தை பின்னுக்குத் தள்ளி விட்டு உலகின் ஒரே சூப்பர் ஸ்டாராக திகழும் அமெரிக்காவின் ஆதிக்கம்தான் இது நாள்வரை வளைகுடா பகுதியில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. இப்போது ஈராக்குடன் ஒப்பந்தம் செய்த தன் மூலம் சோவியத் யூனியனும் வளைகுடாப் பகுதிக்குள் பிரவேசிக்கிறது. இனி அந்தப் பிராந்தியத்தில் நாம் வைத்தது தான் சட்டம் என்ற நிலைக்கு ஆபத்து வந்து விடும், என்று அஞ்சிய அமெரிக்கா எரிச்சலடைந்தது.

அந்தச் சமயத்தில்- சோவியத் யூனியனுடன் நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தான இரண்டாவது மாதம்- சதாம் உசேன் இன்னொரு அதிரடி நடவடிக்கை எடுத்தார்...

ஈராக் மண்ணிலிருந்து கொண்டு ஈராக்கின் வளத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்த பகாசுர அமெரிக்க பெட்ரோல் கம்பெனியை துணிச்சலுடன் நாட்டுடமை ஆக்கினார்...!

இந்நடவடிக்கையால் மறுமலர்ச்சிக் கட்சியின் ஆட்சிக்கும் சதாம் உசேனுக்கும் ஈராக் மக்களிடையே ஆதரவு வேகமாகப் பெருகியது. ஆனால், அமெரிக்க ஜனாதிபதி மாளிகையோ கொந்தளித்து விட்டது...

"சதாம் ஸ்டைலைப் பின்பற்றி எல்லா வளைகுடா நாடுகளும் அமெரிக்கப் பெட்ரோல் கம்பெனிகளை நாட்டுடமை ஆக்கிட்டா நம் கதி என்ன ஆகும்?" என்று அமெரிக்க ஜனாதிபதி துடித்தார்.





பெட்ரோல் உற்பத்தி, சுத்திகரிப்பு, விற்பனை ஆகியவற்றில் உலக அளவில் மொத்தம் எட்டு கம்பெனிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவற்றில் ஐந்து அமெரிக்க கம்பெனிகள். இதனால் அமெரிக்காவுக்கும் அதன் கம்பெனிகளுக்கும் கொழுத்த லாபம்! இதற்கு வேட்டு வைக்கும் முயற்சியாகத்தான் சதாம் ஒரு கம்பெனியை நாட்டுடமை ஆக்கினார்.

"சின்ன நாடு இத்தனை அடாவடித்தனமா நடந்துருக்கு. அதை விட்லாமா? உடனே இதுக்கு முடிவு கட்டணும். என்ன செய்யலாம்னு யோசிச்சு சொல்லுங்க!" என்று தன் ஆலோசகர்களுக்கு உத்தரவிட்டார் அமெரிக்க ஜனாதிபதி.

ஆலோசகர்கள் கூடிப் பேசினார்கள்.

முடிவாய் மூத்த ஆலோசகர் சொன்னார்.

"எந்த வகையிலாவது ஈராக்கில் மறுமலர்ச்சிக் கட்சியின் ஆட்சியைத் தூக்கி எறிஞ்சுட்டு, நமக்கு தலையாட்டுற பொம்மை ஆட்சியை ஏற்படுத்தணும். அதுக்கு சி.ஐ.ஏ.வை (அமெரிக்க உளவு ஸ்தாபனம்) களத்தில் இறக்கிவிடணும்!"

'இரண்டு மந்திரிகள் கடத்தப்பட்டார்கள்' என்ற திடுக்கிடும் தகவலுடன்தான் அன்றைய பொழுது விடிந்தது சதாமுக்கு.

கடத்தப்பட்டவர்களில் ஒருவர் இராணுவ அமைச்சர் ஹமீது சாகிப். இன்னொருவர் உள்துறை அமைச்சர் சாதுன் காய்தன். இருவரது வீடுகளுக்கும் அதிகாலையில் தனித் தனியே வந்த இரண்டு கோஷ்டிகள் அவர்களைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி கடத்திக் கொண்டு போயிருக்கிறார்கள்.

கடத்தியவர்கள் யார் என்று தெரியவில்லை. கடத்தப்பட்டவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

உள்நாட்டு பாதுகாப்பு இலாகாவை நிர்வகித்து வரும் துணை ஜனாதிபதி சதாம் இத்தகவலைக் கேட்டு முதலில் அதிர்ந்தார், பிறகு திகைத்தார்.

கடத்தப்பட்ட இரண்டு மந்திரிகளும் முக்கிய இலாகாக்களை கவனிப்பவர்கள். அவர்கள் கடத்தப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது கடத்தல்காரர்களின் நோக்கம் என்ன என்பது புரிந்தது. ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் அவர்கள் நோக்கம். சந்தேகம் இல்லை.

ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்கு இனி இடம் கொடுத்துவிடக்கூடாது என்று உளவுத்துறையை இருபத்திநாலு மணி நேரமும் உஷார் நிலையில் வைத்திருந்தார் சதாம். அப்படியிருந்தும் அவரது உளவுத்துறையினர் மோப்பம் பிடிக்க முடியாத தூரத்தில் சதிகாரக் கும்பல் இருந்திருக்கிறது.

யார் அந்த சதிகாரன்?

ஆட்சியைக் கவிழ்க்க யார் முயன்றாலும் இராணுவத்தின் ஒரு பிரிவு ஆதரவு கூட இல்லாமல் அதைச் செய்யத் துணிவு வராது. ஈராக் அரசியல் ராசி அப்படி. இப்போது இராணுவ உயர் அதிகாரி எவனோ எட்டப்பனாகி இருக்கிறான். யார் அந்த எட்டப்பன்?

விசாரிப்பதற்காக உள்நாட்டு பாதுகாப்புப் படை டைரக்டர் ஜெனரல் நதிம் ஜாருக்கு டெலி:போன் செய்தார்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

நர்மதாவின் கையைப் பிடித்துக் கொண்டு அம்மா மெல்ல வாசலுக்கு வந்தாள். சுற்றி வர கட்டடங்கள், வீடுகள் எல்லாம் இடிந்து குப்பையாகக் கிடக்க அவற்றின் நடுவில் தயங்கி நிற்கும் இந்தச் சிறு வீட்டின் மீது அம்மாவுக்கு எத்தனை பிரியம்! அப்பா செத்த பின் கிடைத்த இராணுவப் பென்ஷனின் இரத்தமெல்லாம் இந்த வீட்டில் பின்னிக்கிடப்பது அம்மாவுக்குத்தானே தெரியும்!

தேக்குக் கதவை ஒரு முறை ஆசை தீரத் தடவிப் பார்த்தாள். சுவரின் மீது நெற்றி பொருத்தி ஆழமாக மூச்சிழுத்தாள். மௌனமாகக் குலுங்கி அழுதாள். விறைப்பாகி நிமிர்ந்தாள்.

"சீனுவைப் பார்க்கப் போகலாம்," என்றாள்.

அரசாங்க ஆஸ்பத்திரியே சீக்காக இருந்தது. காரிடாரின் ஓரங்களில் வெற்றிலை எச்சில்கள். தாய் படுக்கையில் கிடக்க, ஜட்டி போடாத குழந்தை ஒன்று கட்டில் காலை நக்கிக் கொண்டிருந்தது. ஆயாக்கள் வண்ண வண்ண மாத்திரைகளை வைத்துத் தாயம் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

## இதுவரை

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஒடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.
அவன் மருத்துவமனையில்
அனுமதிக்கப்படுகிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.

இனி....

இருபத்து நான்கு மணிநேரம், நாற்பத்தெட்டு மணிநேரம், எழுபத்திரெண்டு மணி என்று டாக்டர்கள் கொடுத்த நேரம் கரைந்து போய்விட்டது. சீனுவிடம் அசைவு இல்லை. இயந்திரங்கள் அவனுக்காக மூச்சு விட்டன. இரத்தத்தை பம்ப் செய்தன. நான்கு நாள் கழித்து டாக்டர்கள் உண்மையை வெடிகுண்டாய் வெடித்தார்கள்.



"கோமா ஸ்டேஜிற்குள் போய் விட்டான். ஆபரேஷன் பண்ணி தோட்டாவை எடுக்க முடியாது. அது ரொம்ப ஆபத்து. உயிர் போவதற்கு தொண்ணூற்றெட்டு சதவீத வாய்ப்பு இருக்கிறது. இப்படியே மெஷினில் வைத்திருந்தால் ஒரு மாதமோ, ஆறு மாதமோ அவன் உயிரோடு இருக்கலாம். ஆனால் கோமாவிலிருந்து வெளியே வருவானா என்று உறுதியாகச் சொல்ல முடியாது."

அம்மா ஆஸ்பத்திரி பெஞ்சிலேயே பழி கிடந்து பார்த்தாள். சீனு அசைந்தால்தானே? ஐசியூவில் டாக்டர்கள், நர்ஸ்கள் மட்டும்தான் நுழையலாமாம். அவன் பக்கத்தில் உட்கார்ந்து கையை வருடிக் கொடுக்கக்கூட அவளுக்கு அனுமதி இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

அம்மா வெறுத்துப் போய் அன்று வீடு திரும்பி விட்டாள். இப்போது நம்பிக்கையுடன் மறுபடி ஆஸ்பத்திரி வாசலை மிதிக்கிறாள்.

ஜெனரல் வார்டுகளின் ஓலங்களைத் தாண்டி, சிவப்பு முக்கோணம் பறைசாற்றும் சுவர்களைக் கடந்து, பிறந்த குழந்தையின் எடை மூன்றுகிலோ இருக்க வேண்டும் என்று எச்சரித்த பிளாக்கைக் கடந்து, தாழ்ப்பாள் அவிழ்ந்து தொங்கும் கதவுக்குப் பின்னால் சீஃப் டாக்டர்.

அம்மாவை மறுபடியும் ஆஸ்பத்திரி

# சுபா

மில் பார்த்ததும் டாக்டர் எழுந்தார்.

"வாங்கம்மா.... நானே உங்களுக்குச் சொல்லி அனுப்ப வேண்டும் என்று நினைத்தேன். சீனு இஸ் ஸிங்க்கிங்"

"என்ன டாக்டர்?"

"இன்னும் ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ தான்... அதற்கப்புறம் உங்கள் மகன் தாக்குப்பிடிப்பது கஷ்டம்..."

"கோமாவில் ஆறுமாதம்கூட இருக்கலாம் என்று சொன்னீர்களே டாக்டர்?" அம்மா அடக்கிக் கொண்டு கேட்டாள்.

"இந்த கேஸ் அப்படி இல்லை."

"நான் அவனைத் தொட்டுப் பார்க்கலாமா டாக்டர்?"

"இன்டன்ஸிவ் கேர் யூனிட்டில் உள்ள விட முடியாதேம்மா."

"அவன் உயிரோடு இருக்கும்போது ஒரு தடவை தொடக்கூடாதா?" ஆச்சரியம். அம்மா அழாமல் கேட்டாள்.

டாக்டர் சற்று யோசித்து விட்டு, "நீங்கள் மட்டும் வரலாம்," என்று பெல் அடித்து, "இந்த அம்மாவுக்கு ஸ்டெரிலைஸ்டு கோட்டும், செருப்பும் கொடும்மா... ஹவுஸ் சர்ஜனுடையது இருக்கும்பார்..."

வெள்ளை கோட், வெள்ளைத் தொப்பி, மூக்கை மூடி வெள்ளைத்துணி அணிந்து அம்மா சீனுவை நெருங்கினாள்.

வெளியில் தெரிந்த அவனுடைய கையை எடுத்துத் தன் கைகளில் பொத்தி அழுத்திக் கொடுத்தாள். ரப்பர் குழாய்களை நகர்த்தி விட்டுக் கன்னத்தில் முத்தமிட்டாள். தோற்றுக் கொண்டிருக்கும் அவன் மூச்சை மார்பில் காது வைத்துக் கவனித்தாள்.

உச்சந்தலையில் வெள்ளையும், சிவப்புமாய் துணி பாண்டேஜ்.

இமையை விலக்கி சீனுவின் கண்ணுக்குள் பார்த்தாள்.

"என்னைப் பாரடா, என் செல்லமே... கடைசி கடைசியாய் ஒரு தடவை பார்த்து விடுடா... சீனு... அம்மா வந்திருக்கிறேன். நிலாவைப் பார்த்துக் கொண்டு என் மடியில் படுத்துக் கிடப்பாயே... இப்போது மடியில் கூட உன்னைப் போட்டுக் கொள்ள முடியவில்லையேடா... சீனு... கண்ணைத் திறடா..."

"தொடாதீங்கம்மா பேஷண்டை..."

நர்ஸை முறைத்து விட்டு கையை விலக்கினாள். அவனுடைய நெஞ்சில் பதித்தாள். அவனுடைய இதயத்துடிப்பு அவள் கையில் பரவி 'லப்டப் லப்டப் லப்டப் லப்டப் லப்டப்... லப்....'

துடிப்பு நின்று விட்டது. கடைசி வரைக்கும் அவளைக் கண் திறந்து பார்க்காமலேயே, அம்மா என்று ஒரு வார்த்தை ஆசையாய் கூப்பிடாமலேயே அடங்கி விட்டான். பொலிஸ் தோட்டா அவன் உயிரை உறிஞ்சி முடித்து விட்டது.

அம்மாவுக்கு அழுகையே வரவில்லை. குனிந்து சீனுவின் சலனமற்ற உதடுகளில் ஒரு முறை முத்தமிட்டாள். சீனுவுடன் இணைக்கப்பட்ட இயந்திரங்கள் ஸ்தம்பித்துப் போனது பார்த்து நர்ஸ் பதற்றமாக ஓடிவந்த போது, அம்மா நிதானமாக எழுந்தாள். கண்ணாடிக் கதவு நோக்கி வந்தாள்.

* * *

ஷிவாவிற்கு பயமாக இருந்தது. ஆஸ்பத்திரியில் இருந்து வந்ததிலிருந்து அம்மா கண்ணில் கண்ணீரே பார்க்காமல் கவலையாய் இருந்தது. அவளுடைய மௌனம் அடிவயிற்றில் அச்சமாக வெடித்தது.

அம்மா சீனுவின் பழைய சட்டையை செருப்பை, இரத்தம் காய்ந்த பாண்டேஜ் துணியை எடுத்துப் பத்திரப்படுத்தியது மட்டும், அவள் சுயநினைவுடன்தான் இருக்கிறாள் என்று தைரியப்படுத்தியது.

"தேவா! நீ சீக்கிரம் வாயேன். இங்கு என்னென்ன நடந்துவிட்டது என்பது தெரியாமல் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

••••••

புது டில்லி.

# உதட்டில் ஒரு மச்சம்

தேவேந்திரன், அந்த ஹோட்டலின் பத்தொன்பதாவது மாடி பால்கனியில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

டில்லியின் தார் பெல்ட்களின் நடுவே அங்கங்கே பொத்தி வைத்த பசுமை பூங்காக்கள், இந்த உயரத்திலிருந்து பார்க்க ரம்மியாய் இருந்தன. எதிரே இருந்த பார்க்கில் பூசணி பூசணியாய் குழந்தைகள் உருண்டு விளையாட, அம்மாக்கள் கல்பெஞ்சுகளில் உட்கார்ந்து ஸ்வெட்டர் பின்னினார்கள். அபாரமான பட்சிகள் பூக்களையும், சிறகுகளையும் இறைத்தன.

ரூமுக்குள் அழைப்பு மணி ஒலித்தது. தேவேந்திரன் தன் மரக்காலை கையால் உதவி நகர்த்தி எழுந்தான். நடக்கையில் மிக மெல்லிய தடுமாற்றம். அதுவும் முதல் அடிக்குத்தான். அப்புறம் அவன் இயல்பாக நடக்கையில், இடது முழங்காலுக்குக் கீழே மாற்றுக்கால் என்பது கண்டு பிடிக்க முடியாது.

கதவு திறந்தான்.

## 08

"ராம்சந்த்" என்று எதிரே நின்றவனை இறுகத் தழுவினான். "வா உனக்காகத்தான் வெகு நேரமாகக் காத்திருக்கிறேன்."

ராம்சந்த் தேவந்திரனின் தோளில் முகம் பதித்து, காதில் ஒரு சிறிய முத்தம் கொடுத்து நிமிர்ந்தான். "ஸாரி.. விவரங்கள் சேகரிக்கக் கொஞ்சம் நேரம் அதிகமாகிவிட்டது." ராம்சந்தும் தேவேந்திரனின் வயதினன்.

இருவரும் உள்ளே நுழைந்தனர். பால்கனியில் எதிர் எதிர் பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்தார்கள். ராம்சந்த் தேவந்திரனைக் குறுகுறுப்பாகப் பார்த்தான்.

"எப்படியிருக்கிறாய் தேவ்?"

"சுகமாக. சற்றுக் கோபமாக."

"கோபம்?"

"ஆம். அதிகாரம் கிடைத்ததும் ஆட்டம் போடும் அமைச்சர்கள் மீது கோபம்!"

"ஒடக்கரை நீ வளர்ந்த ஊர். கஷ்டமாகத்தான் இருக்கும்!"

"நான் வளர்ந்த ஊர் மட்டுமில்லை, ராம்... வளர்த்த ஊர்!"

தேவேந்திரனின் கண்கள் குழந்தையைப் பற்றிப் பேசும் தகப்பனைப் போல பளபளத்தன. "போன வருஷம்தான் ஊரில் இருக்கும் அத்தனை பேர் வீட்டிலிருந்தும் சாம்பல் வாங்கி நினைவுச் சின்னங்கள் எழுப்பினோம்."

"சாம்பலா?"

"போரில் செத்துப்போய், அல்லது தீவிரவாதிகளால் மரணமடைந்து உடம்பு முழுசாக, பாதியாகக் கிடைத்த எங்கவூர் இளைஞர்களை எரித்த சாம்பல். போர்க்களத்திலிருந்து ஊருக்குத் திருப்பி அனுப்பப்பட்ட பெல்ட்கள், யூனிஃபார்ம்கள், நினைவுப் பொருட்கள் எல்லாவற்றையும் சேகரித்து, ஊரில் தனியே ஒரு பகுதி ஒதுக்கி, 'ஒடக்கரை உயிராலயம்' என்று பெயர் வைத்தோம். எல்லாவற்றையும் அடியோடு பெயர்த்து விட்டார்கள், ராம்... ஒரு தொழிற்சாலைக்காக ஊரையே காவு கொடுப்பது என்ன நியாயம்?"

"ஷ்ஷ்... கத்தாதே... டில்லி ஹோட்டலின் சுவர்களுக்குக்கூட காது இருக்கும்..." ராம்சந்தின் முகத்தில் அதிர்ச்சி இருந்தது.

"சொல்... நீ சேகரித்து வந்த விவரங்களைச் சொல்!"

"அடுத்த இருபது நாட்களுக்கு அமைச்சரின் புரோக்கிராம் என்ன என்று ஒரு பட்டியலே எடுத்து வந்திருக்கிறேன். ஆனால் பழைய நண்பன் என்பதால், உனக்கு ஒரு அட்வைஸ் தரலாமா தேவ்?"

தேவேந்திரன் ராம்சந்த்தை நிமிர்ந்து பார்த்தான்.

"அமைச்சரின் செக்யூரிட்டி ஏற்பாடுகளைக் கவனித்துக்கொள்ளும் மோகனன், அந்த விஷயத்தில் ஒரு அபாரமான எக்ஸ்பர்ட். பாதுகாப்பு வளையத்தைத் தாண்டுவது சுலபமான வேலை இல்லை. அவசரப்பட்டு எதையாவது செய்து சிக்கிக் கொள்ளாதே, தேவ்!" தேவேந்திரன் ராம்சந்த்தின் தொடையில் தட்டிச் சிரித்தான். "பிரகாஷ் குப்தா சாகும் வரையில் நான் மாட்டமாட்டேன், ராம்"

(○—வரும்—○)

---

கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....

# கவியரசுவின் சுயசரிதை

## 27

அவன்தான் ஜெயிப்பான் என்பது போல ஓர் எண்ணம் அவர்கள் அனைவருக்கும் உண்டாயிற்று. உடனே வல்லத்தரசு அவனோடு சேர்ந்துகொண்டு பார்லிமெண்டுக்குத் தனக்கும், சட்டசபைக்கு அவனுக்கும் ஒட்டு கேட்கலானார். வல்லத்தரசும் அவனும் சேர்ந்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டதும் பார்லிமெண்டுக்கு நின்ற காங்கிரஸ் அபேட்சகர் ராமநாதன் செட்டியார் சார்பில் இரண்டுபேர் அவனிடம் தூது வந்தார்கள்.

அவன் சட்டசபை ஓட்டு மட்டும் கேட்க வேண்டுமென்றும் பார்லிமெண்டுக்கு வல்லத்தரசுக்காக ஓட்டுக் கேட்கக்கூடாதென்றும் அவர்கள் கூறினார்கள். அந்தச் சந்திப்பு மகிபாலன் பட்டியில் ஒரு வீட்டில் நடந்தது. தூது வந்தவர்கள் கருமுத்து. தி.மாணிக்கவாசகமும், பிரபல எழுத்தாளர் 'சோமலெ' அவர்களும் ஆகும்.

தன்னிடம் சிலபேர் தூது வந்திருக்கிறார்கள் என்ற உடனேயே அவனுக்குத் திமிர் வந்துவிட்டது. அந்தத் தூதை வைத்துத்தான் தான் ஜெயிப்போம் என்று அவன் கருத ஆரம்பித்தான். இயற்கையாகவே அவனுக்கு நம்பிக்கை இல்லை என்பது உண்மை.

சில ஊர்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார் கூட்டம் போட்டு அவனை வந்து அதில் ஓட்டுக் கேட்கச் சொன்னார்கள். அவனும் அங்கெல்லாம் போய் மரியாதையாக எழுந்து நின்று தானும் ஒரு நகரத்தார் ஜாதிக்காரன் என்ற முறையில் நகரத்தார்கள் தனக்கே ஓட்டுப் போட வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

தெக்கூரிலும், பூலாங்குறிச்சியிலும், நெற்குப்பையிலும் நகரத்தார் கூட்டம் நடந்த பிறகு பலவான்குடியில் நகரத்தார் கூட்டம் கூட்டப்பட்டது. அந்த ஊர் திருக்கோஷ்டியூர் தொகுதியின் ஓர் எல்லையாகும். அதன் மறு எல்லையில் காரைக்குடித் தொகுதி ஆரம்பமாகிறது. அப்போது காரைக்குடித் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்டவர் ராஜாசர் முத்தையா செட்டியார். அவர் சா.கணேசனை எதிர்த்துப் போட்டியிட்டார்.

காரைக்குடித் தொகுதி திருக்கோஷ்டியூர் பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டதாகும். ஆகவே பலவான்குடி நகரத்தார் கூட்டத்தில் ஓட்டுக் கேட்க ராஜாசர் முத்தையா செட்டியாரும், ராமநாதன் செட்டியாரும் வந்திருந்தார்கள். அவர்கள் கேட்டுவிட்டுப் போனதும் அவன் வரலாமென்று சொல்லியிருந்தார்கள்.

அப்படியே அவர்கள் போனதும் அவன் கூட்டத்திற்குச் சென்றான். கூட்டத்தில் இருந்த சூழ்நிலை அவனுக்குச் சாதகமாக இல்லை. நகரத்தார் கூட்டங்களில் ஒரு மரபு உண்டு. அதில் ஓட்டுக் கேட்கிறவர்கள் கீழே விழுந்து கும்பிட்டுவிட்டு ஓட்டுக் கேட்க வேண்டும் என்பதே அது. ராஜாசர்கூட அப்படித்தான் கேட்டார் என்று அவர்கள் சொன்னார்கள். அவன் மறுத்துவிட்டான். நின்று கொண்டே கும்பிட்டுவிட்டு அவன் ஓட்டுக் கேட்டான். கேட்டுவிட்டு- ஒரு ஓட்டுக்கூட தனக்கு வராது என்கிற முழு நம்பிக்கையோடு வெளியேறினான்.

அன்று மாலை அதே பலவான்குடி கோவில் குளக்கரையில் கூட்டம். நகரத்தார்களே தனக்கு விரோதிகள் என்ற எண்ணம் அவனுக்கு வந்துவிட்டது. இந்த ஊரில் ஒரு ஓட்டுக்கூட விழாதபடி ராஜாசர் செய்துவிட்டார் என்று அவன் கருதினான். கருதியதை மனத்திற்குள் வைத்துக்கொள்வது தான் அவனது வழக்கமில்லையே!

அன்றைய கூட்டத்தில் அவனும் வல்லத்தரசும் பேசினார்கள். வல்லத்தரசு பேசும்



போது செட்டியார்களைக் கொஞ்சம் அரவணைத்தே பேசிவிட்டார். அவன் பேசும்போது ராஜாசர் பரம்பரையையும், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களையும் கடுமையாகத் தாக்கினான். "உங்கள் ஓட்டு எனக்கு வேண்டாம் போங்கடா!" என்று முடித்தான்.

சாதாரண காலத்துக்கே அந்தப் பேச்சுப் பொருந்தாது என்றால் தேர்தல் காலத்தில் எப்படிப் பொருந்தும்? பெரும்பாலும் அவன் தேர்தல் நடத்திய விதமே இதுதான். கூட இருந்த தோழர்களும் அனுபவமற்ற சிறுவர்களாக இருந்ததால் - குற்றங் கண்டுபிடித்து அவனை அவர்கள் திருத்தவில்லை!

வேலை செய்துகொண்டிருந்த ஒரு கார் படுத்து விட்டது. சகோதரர் கொடுத்த இந்துஸ்தான் கார் தெக்கூரில் பிரச்சாரத்திற்காகப் போன போது, ஒரு கல்லில் மோதி 'சைலன்சரை' இழந்துவிட்டது. வேறுகார் இல்லாததால் அதிலேயே அவன் பிரயாணம் பண்ண வேண்டியவனானான். திருப்பத்தூரில் அது புறப்படும்போதே இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள நெற்குப்பையில் அதன் சத்தம் கேட்கும். அதுவும் அந்தத் தொகுதி மக்களுக்கு ஒருவகையில் நன்மையாகவே இருந்தது. அது தூரத்தில் வரும்போதே அவன் கார் வருகிறது என்பதை அறிந்து வாக்காளர் ஓடி ஒளிந்துகொள்ள வசதியாக இருந்தது.

வாடகைக்கு இரண்டு கார்கள் எடுத்திருந்தான். வாடகை பாக்கி தரவில்லை என்பதற்காக அவர்களும் போய்விட்டார்கள்.

தேர்தல் நெருங்கிவிட்டது. இன்னும் ஏழு நாட்கள்தான் இருக்கிறது. கட்சி நிதியில் இருந்து நெடுஞ்செழியனுக்கும் மற்றவர்களுக்கும் பணங் கொடுத்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட அவன் தானும் கட்சியிடம் பணம் கேட்கலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பணமா? பிணமா?

*றெஸ்ற் இன்பீஸ்*
*லவிங் டோட்டர்-மனீஷா*

ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கல்லறை வாசகங்களின் கருத்தை அறியுமளவுக்கு ஜோதிபாலா படித்தவனல்ல. ஆனால் தன்னைத் தவிர அந்தக் கல்லறையின் சொந்தக்காரர் யாரும் அங்கு இல்லாதது அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

அன்று நவம்பர் மாதம் இரண்டாம் திகதி இறந்த ஆத்துமாக்களின் திருநாள். அந்தச் சேமக்காலையில் என்றுமில்லாத சனக்கூட்டம். சொந்த பந்தங்களின் கல்லறைகளுக்கு மலர்வைத்து மெழுகுதிரி எரித்து மரியாதை செலுத்துவது வழக்கம்.

ஜோதிபாலா தான் கொண்டு வந்திருந்த போகன்விலாப் பூக்களைக் கல்லறையின் கால்மாட்டில் வைத்து முழந்தாட்படியிட்டுக் கண்களை மூடிச் செபித்தான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

"ஜோதிபாலா! சாப்பிட்டியாப்பா?"



ரூபாராணி

கல்லறையுள் இருந்து அன்பைச் சுமந்து வந்த அந்தக் குரல் மேரியம்மாவுடையது போல் ஜோதிபாலாவின் காதில் ஒலித்தது. அவன் சிலிர்த்துக் கொண்டான். மடிகால் போட்டு உட்கார்ந்தவன் மறுபடியும் தான் மேரி அம்மாவின் காலடியில் இருப்பதுபோல் உணர்ந்தான்.

ஜோதிபாலா மேரி அம்மாவின் வீட்டில் நீண்டகாலம் வாச்சராக வேலைபார்த்தவன். அவனுக்குப் பன்னிரெண்டு வயதாயிருக்கும்போது, "மண்ணுக்கு மரம் பாரமா" என்ற பாடலைப் பாடிக்கொண்டு அந்த மேரியம்மாவின் வாசலில் நின்று பிச்சை கேட்டான் ஜோதிபாலா.

அந்தப் பாடலின் பொருளில் மனம் நெகிழ்ந்த மேரி அம்மா அவனைத் தன்வீட்டில் உதவிக்கு வைத்துக் கொண்டாள். நாளடைவில் அவன் வாச்மேனாக மாறிவிட்டான். 'தாயைப் போல் அன்பு காட்ட மேரியம்மா இருக்கிறா' என்ற நினைவில் அவன் மகிழ்ந்து போவான்.

**அ**னிவத்தை பல பணக்காரர்களினதும் வைத்தியர்களினதும் வதிவிடம். அந்தப் பகுதியில் ஒரு பெரிய மாடிவீட்டின் சொந்தக்காரி மேரி. மேரியைத் தெரியாதவர்கள் அனிவத்தையில் இல்லை என்றே சொல்லலாம்.

வசதியற்றவர்களுக்கும், இல்லை என்று கை நீட்டுவோர்க்கும் கற்பக விருட்சமாய் இருந்த மேரியை அங்கு உள்ளவர்கள் எல்லோரும் அன்பொழுக "மேரி அம்மா" என்றே அழைப்பார்கள். நாமும் இனி அப்படியே அழைப்போமா?

மனீஷா, மேரி அம்மாவின் ஒரே மகள். அவளுக்குப் பத்து வயதாய் இருக்கும் போதே... மேரி அம்மாவின் கணவர் லூக்கஸ் காலம் ஆகிப்போனார். அவர் ஒரு பிரபல டாக்டர். பல நிலபுலன்கள் படைத்தவர். தான் வாழும் போதே மனீஷாவையும் ஒரு டாக்டராக்கி விட வேண்டுமென்று பிடிவாதமாயிருந்தவர்.

மனீஷா படிப்பில் அசாத்திய திறமை கொண்டவள். கணவனின் மரணத்தின் பின், அவருடைய ஆவலை நிறைவேற்றுவதில் தீவிர முயற்சி எடுத்த மேரியம்மா, தன் மகளை டாக்டராக்குவதில் வெற்றியும் கண்டாள்.

இலண்டனில் விசேட பயிற்சி பெற்றுத் திரும்பிய மனீஷா பெருமளவு மாறிப்போயிருந்தாள். தன் தாய் எல்லோருடனும் சமமாகப் பழகுவதை அவள் அடியோடு வெறுத்தாள். பிச்சை எடுப்பதும் கொடுப்பதும் அவமானம் என்றே எண்ணினாள். வேலைக்காரர், வாச்மேன் எல்லாரும் தீண்டத் தகாதவர்களாக அவள் நினைத்தாள். பணத்துக்கு அடிமையானாள்.

மனீஷாவின் மாறுதல் மேரி அம்மாவுக்கு அதிர்ச்சியும் வேதனையும் தந்தது. தன் மகளுக்கு மேரியம்மா சொன்ன புத்திமதிகள் அத்தனையும் விழலுக்கிறைத்த நீராயின. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்றே வாதாடும் மனீஷாவை எப்படி வழிக்குக் கொண்டு வருவது என்றே தெரியாமல் குழம்பினாள் மேரியம்மா.

நோயாளர்மீது எரிந்து விழுவதையும் பணத்தையே குறியாகக் கொண்டு தொழில் செய்வதையும் கண்டவர்கள் மனீஷாவைப் பற்றிய தாறுமாறான அபிப்பிராயங்களை மேரியம்மாவின் கவனத்துக்குக் கொண்டு வரத் தவறவில்லை. இதன் காரணமாக இருவருக்குமிடையே பலத்த வாக்குவாதம் அடிக்கடி ஏற்படுவது சர்வசாதாரணமாயிற்று.

மேரியம்மா நோய்வாய்ப்பட்டாள். நாளடைவில் தாயைக் கவனிப்பது தனக்குப் பெருஞ்சுமையாக இருப்பதாக உணர்ந்தாள். மனீஷா ஜனவரிமாதம் பதினைந்தாம் நாள் மேரியம்மாவின் பிறந்த நாள். அன்று வறியவர்களுக்கு உண்ணக்கொடுத்து மகிழ்வதை வழக்கப்படுத்திக் கொண்டவள் மேரியம்மா. இம்முறை அப்படி நடக்கவிடக்கூடாதெனத் திட்டம் போட்டுக்கொண்டு கட்டிலை நெருங்கினாள் மனீஷா.

மேரியம்மா மாறாத புன்னகையுடன் கைகளை மார்பில் பிணைத்தபடி அசைவற்றுக்கிடந்தாள். மனீஷா எவ்வளவோ முயன்றும் மீண்டும் மூச்சுவிட மேரியம்மா விரும்பவில்லை.

கதவு தாளிடப்பட்டது. மனீஷா வைத்தியசாலைக்குப் புறப்பட்டுவிட்டாள். ஜோதிபாலாவிடம் எதையும் கூறவிரும்பவில்லை. "அம்மாவைப்பார்க்க யார் வந்தாலும் உள்ளே விடாதே!" ஜோதிபாலாவுக்குக் கட்டளையிட்டுச் சிட்டாகப் பறந்தாள் மனீஷா. மாலை ஆறு மணிவரை சனலிங் சென்ரரில் சுறுசுறுப்பாக இயங்கினாள்.

மணி ஆறரையைத் தாண்டியபோது மிக நீளமான கறுப்புக்கார் வாசலில் வந்து நின்றது. அதில் இருந்து இறங்கிய மூவர் பிரேதப்பெட்டி ஒன்றைச் சுமந்து மனீஷாவுடன் உள்ளே வருவதைக்கண்டு கதிகலங்கிப் போனான் ஜோதிபாலா.

காலையிலேயே மேரி அம்மா இறந்திருக்க வேண்டும் என்று எண்ணியபோது அவனால் தாங்க முடியவில்லை. முகத்திலும் மார்பிலும் அறைந்து கதறியழுதான்.

"ஊரைக் கூட்டிவிடாதே!" அவனைக் கடுமையாக எச்சரித்தாள் மனீஷா. வந்த மூவரும் ஜோதிபாலாவும் மேரியம்மாவின் திருவுடலை வைத்து பிரேதப் பெட்டியைக் காருக்குள் வைத்தனர். அது சேமக்காலையை நோக்கி நகர்ந்தது. மனீஷாவின் கார் அதைத் தொடர்ந்து சென்றது.

ஒருதாய் அனாதைப்பிணமாய் பூட்டிய அறையுள் கிடந்ததை எண்ணிக் கண்ணீர் விட்டான் ஜோதிபாலா.

அவன் நினைவுகளில் தெரிந்த நிகழ்வுகளை நம்ப முடியுமா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும். காரணம் ஜோதிபாலாவுக்குக் கற்பனை பண்ணத் தெரியாது. ■

# காலம் எல்லாம் காத்திருந்தும்....

**அ**ப்பாவைப் பற்றி கேட்கும் போதெல்லாம் அவனுக்குக் கிடைக்கும் பதில்- "அவர் உனது சிறுவயதிலேயே இறந்துவிட்டார்!" என்பது தான். "அப்பாவின் படம்கூட இல்லையா?" என்று ரகு கேட்கும் போதெல்லாம் கண்கள் கலங்க உதட்டைப் பிதுக்குவாள் வசந்தா.

அப்பா இல்லாவிட்டாலும் அவனை நன்றாகப் படிக்க வைத்தாள் வசந்தா. ரகுவும் கெட்டிக்காரனாகி படிப்பில் சாதனை புரிந்தான்.

காலம் கடந்தது. "அம்மா எனக்குப் பொறியியல் பீடம் கிடைத்திருக்கு... மொறட்டுவப் பல்கலைக்கழகம்" என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டு வந்தான் ரகு.

"மொறட்டுவயா...?" அம்மா விக்கித்தாள்.

"ஏனம்மா... அழுகிறீர்கள்?"

வசந்தா மௌனமாக விசும்பினாள். அவளது கண்கள் பெருக்கெடுத்தது. ரகு ஒன்றும் புரியாமல் குழம்பினான். 'ஒரு வேளை இனக் கலவரத்தில் அப்பா மொறட்டுவையில் தான் கொலை செய்யப் பட்டாரோ?'

"ரகு..." ஆதரவாக மகனை அழைத்தாள் வசந்தா. அவன் அம்மாவை நிமிர்ந்து நோக்கினான். அம்மா தனது கதையை அவனிடம் சொன்னாள்.

☆☆☆

**அ**து இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே உக்கிரச் சமர் நடந்துகொண்டிருந்த காலம். எமது பிரதேசம் எங்கும் இராணுவம்தான். ஒருநாள் எமது கிராமத்தை இராணுவத்தினர் சுற்றி வளைத்தார்கள். அன்று நான் வீட்டில் தனியேதான் நின்றேன். எங்கள் வீட்டுக்கு சனத் என்ற இராணுவச் சிப்பாய் வந்தான். தனித்திருந்த நான் அவனது காம இச்சைக்குப் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டேன். வெறி தீர்ந்த சனத் போய் விட்டான். நானோ தற்கொலை செய்யும் நோக்குடன் விஷம் குடித்தேன். ஆனால் என்னைக் காப்பாற்றி விட்டார்கள்.

ஒருவாரம் கழித்து சனத் எமது வீட்டிற்கு வந்தான். தான் செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கேட்டான். தான் என்னைத் திருமணம் செய்வதாகக் கூறினான். "காமவெறியனான, எதிரி படையைச் சேர்ந்த உன்னைத் திருமணம் செய்யமாட்டேன்" என்று ஏசினேன். எனது பெற்றோரும் எனது அபிப்பிராயத்தையே கொண்டிருந்தனர்.

சனத் அடிக்கடி எமது வீட்டிற்கு வந்தான். வரும் வேளைகளில் பரிசுப் பொருட்கள் கொண்டு வருவான். நான் அவற்றை வீசி எறிந்து விடுவேன். கடைசியாக அவன் வந்தபோது கொண்டு வந்த சங்கிலிதான் இது. அன்று அவன் என் காலடியில் விழுந்து மன்னிப்புக் கோரினான். நான் இரங்கவில்லை.

எனது வயிற்றிலிருந்த சிசுவை அழித்திடப் பெற்றோர் முயற்சித்தனர். ஆனால் அது சரிவரவில்லை. நீ வயிற்றில் வளர வளர எனது மனதில் ஒரு மாற்றம். சனத் வரும்போது அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அவனது வரவுக்காக அல்லும் பகலும் காத்திருந்தேன். ஆனால் அதன் பின்னர் அவன் வரவேயில்லை. விசாரித்ததில் அவன் மாற்றத்தில் சென்றுவிட்டது தெரிந்தது.

☆☆☆

**அ**ம்மா கதையைக் கூறி முடித்ததும் ரகுவின் நெஞ்சையடைத்தது. அவனது கண்கள் பனித்திருந்தன.

"சனத் மொறட்டுவையைச் சேர்ந்தவர் தான்." அம்மா பெருமூச்சுடன் கூறினாள்.

"அவருடைய விலாசம் இருக்கிறதா அம்மா?"



ச.முருகானந்தன்

"இதோ" என்று பழைய டயறி ஒன்றை நீட்டினாள் வசந்தா. ரகு ஒரு முடிவுக்கு வந்தான்.

☆☆☆

**மொ**றட்டுவ சென்றதும் முதல் வேலையாக ரகு அம்மா தந்த விலாசத்தைத் தேடிச் சென்றான். அங்கே அவனை அன்போடு வரவேற்றார்கள். 'இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த போராட்டத்தின் பின்னர், கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்குப் பின் இந்த 2020ம் ஆண்டு எவ்வளவோ மாறிவிட்டது. எல்லா இனங்களும் எவ்வளவு ஒற்றுமையாக வாழமுடிகிறது' என்று ரகு நினைத்துக் கொண்டான்.

"சனத் மாத்தயாவைச் சந்திக்க வேண்டும்" ரகு கேட்டதும் அங்கிருந்த இளைஞனின் கண்கள் பனித்தன. "சனத் அங்கிள்போன வாரம்தான் காலமானார்!"

"ஓ...ஐ ஆம் சொறி... அப்போ நீங்கள் அவரது மருமகனா?... அவருக்குப் பிள்ளைகள் இல்லையா?" ரகு கேட்டான்.

"சனத் அங்கிள் தனிக்கட்டை. அவர் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தார்..."

"அப்பா..." அவனை அறியாமலேயே அவன் கூறினான். கண்களில் பெருக்கெடுத்த நீரை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. ●

# உண்மைகள்

**சு**விஸ் நாட்டு மாப்பிள்ளை ஒருவரை பிரியந்திக்கு நிச்சயம் பண்ணியிருந்தார்கள். அவள் அங்கு பயணமாவதற்கு தந்தையாருடன் கொழும்பு வந்து தங்கியிருந்தாள்.

அப்பொழுது, தான் திருமணம் செய்யப் போகும் சுவிஸ் வாலிபனுடன் பிரியந்தி தொலைபேசியில் கதைத்தாள்.

நிவேதன் என்று மாப்பிள்ளை பெயர் சொன்னார். மிகவும் நிதானமாக- ஆனால் அன்பாகப் பேசினார், இடைக்கிடையே ஜோக்குகளும் விட்டுக் கதைத்தார், பல விஷயங்களை இரகசியமாகவும் பரிமாறினார். எப்போது அங்கு பறக்கலாமென்று பிரியந்தி ஏக்கத்துடன் காத்திருந்தாள்.

பயணம் ஒருவாறு கை கூடி வந்தது. அவளைப் போலவே வெளிநாட்டுக்குத் திருமணத்திற்காகப் போகும் நான்கு பெண்களுடன் அவளையும் சேர்த்து ஏஜென்சிக் காரர் 'பேங்கொங்'கிற்கு அனுப்பி வைத்தார்.

'பேங்கொக்' விமான நிலையத்திலே இவர்களுக்காக இன்னொருவர் காத்திருந்தார். அவருக்கு நாற்பத்தைந்து வயது மதிக்கலாம். கிட்டத்தட்ட பிரியந்தியின் தந்தையைப் போலிருந்தார். கையெடுத்துக் கும்பிட வேணும் போல் அவரின் தோற்றம் அமைந்திருந்தது. அவர் தன்னை மரியதாஸ் என்று அறிமுகஞ் செய்து கொண்டார். பிரியந்தி குழுவினரை வரவேற்று, ஆறுதலாகப் பேசி, தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார்.

அது மிகவும் ஆடம்பர ஹொட்டலாக இருந்தது. ஐந்து பெண்களும் இரு அறையில் தங்கினார்கள். பிரியந்தியும் இரு பெண்களும் ஓர் அறையில் இருந்தார்கள்.

மரியதாஸ் தினமும் ஒரிரு தடவை அவர்களிடம் வருவார். அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பது, பயண ஏற்பாடுகளைக் கவனிப்பது என்று அலுவல்களைப் பார்த்துக் கொண்டு போவார்.

பிரியந்தியும் குழுவினரும் 'பேங்கொக்' வந்து சேர்ந்து மூன்று வாரம் கடந்திருந்தது. ஆனால் அந்த மூன்று வாரங்களும் எப்படிக் கழிந்தது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஐந்து பெண்களும் சேர்ந்து அரட்டை அடிப்பது, தொலைக்காட்சி பார்ப்பது, தங்களின் நிஜமுகம் காணா எதிர்காலக் கணவன்மார்களைப் பற்றி பேசிப் புகழ்ந்து பொழுதைக் கழிப்பது- இப்படியே நாட்கள் பறந்து கொண்டிருந்தன.

அவளுக்குச் சுவிஸிலிருந்து நிவேதன் தினமும் ஒரு தடவையென்றாலும் தொலைபேசி எடுத்து மகிழ்ச்சியூட்டுவான். அந்தக் கதைகளை பிரியந்தி மற்றவர்களுக்கும் சொல்லிச் சிரித்துக்கொள்வாள்.

அவளுடன் கூடவந்து தங்கியிருந்த நான்கு பெண்களில் இருவர் லண்டனுக்கும் இருவர் டென்மார்க்குக்கும் பயணப்பட இருந்தார்கள். அந்த நால்வருக்கும் ஒரே நாளில் பயணம் கைகூடி வந்திருப்பதாக மரியதாஸ் தெரிவித்தார். பிரியந்தி சுவிஸ்நாடு செல்ல இருப்பதால் அந்த 'றூட்' கொஞ்சம் சிக்கலாக இருப்பதாகவும் ஆனால் ஒரு கிழமைக்குள் சரியாகி வந்துவிடும் என்றும் மரியதாஸ் சொன்னார்.

அவளுடன் இருந்த சினேகிதிகள் நால்வரும் விமானமேறியிருந்தார்கள். இதனால் பிரியந்தி தனிமைப்பட்டுப் போனாள். இருந்தும் இன்னும் ஒரு பெண்கள் 'குறூப்' கொழும்பிலிருந்து வரவிருப்பதாக மரியதாஸ் அவளுக்குத் தெரியப்படுத்தினார். இதனால் பிரியந்திக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. அவளின் சினேகிதிகள் விமானமேறி அடுத்தநாள் வெள்ளிக்கிழமை; மாலை ஏழுமணியிருக்கும். அவள் தன்னை கெதியில் சுவிசுக்கு அனுப்பிவிட வேண்டும் என்று தன்னுடைய இஷ்ட தெய்வத்திடம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள். அப்போது அவளின் அறைக்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

'யாராக இருக்கும்? மரியதாஸ் ஐயா மாலையில் வரமாட்டாரே?' என்று எண்ணியவளாய் கதவை வந்து திறந்தாள்.

மரியதாஸ்தான் உள்ளே வந்தார். ஓர் நமட்டுச் சிரிப்போடு கட்டிலிலே வந்து அமர்ந்தார். பிரியந்தி புரியாமல் என்ன என்பது போல் பார்த்தாள். "உனக்கு உடனடியாக சுவிஸ் போக ஆசையா இல்லையா?" என்று கேட்டார் அவர்.

'றூட்' கிளியராகி வந்திட்டுதா ஐயா?" பிரியந்தி வினாவினாள்.

"நீ சுவிசுக்குப் போறதெல்லாம் என்னுடைய கையில்தான் இருக்கிறது, முரண்டு பிடிக்காமல் என்னுடன் ஒத்துழைத்தால்



கருவாஞ்சிக்குடி யோகன்-அவுஸ்திரேலியா

போதும்! நாளைக்கே நீ பயணமாகலாம்!" என்று எழுந்தவர் அவளின் கைகளை வந்து பற்றினார்.

இதை எதிர்பாராத பிரியந்தி தடுமாறிப் போய் கைகளை விடுவிக்க முனைந்தபோது "திரும்பவும் சொல்றன்! என்னுடன் ஒத்துழைத்தால் மட்டுமே நீ விமானம் ஏறுவாய்! இந்த நான்கு சுவர்களுக்குள்ளும் நடப்பது யாருக்குமே தெரியப் போவதில்லை!" என்று அவளை அப்படியே அணைக்க முயற்சித்தார் அவர்.

அவள் அழுகையுடன் கெஞ்சினாள். கெஞ்சினாள். கெஞ்சிச் சத்தமிட்டு அறைக்குள்ளே சுழன்றாள்.

"இது மாதிரி எத்தனை பேரைப் பாத்துப் போட்டன்!" என்றவர் திடீரெனப் பாய்ந்து அவளைக் கட்டிப்பிடித்துக் கட்டிலிலே தள்ளினார். கொக்கிடம் அகப்பட்ட மீன் குஞ்சு போல் பிரியந்தி துடித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அறையில் இருந்த தொலைபேசி அலற ஆரம்பித்தது. தடுமாறிய மரியதாஸ் ரெலிஃபோனை வெறுப்போடு தூக்கினார். தொலைபேசி மூலம் வந்த செய்தியைக் கேட்டு அவரின் முகம் கோணலாகிப் போயிற்று.

"ஸ்ரீலங்காவிலிருந்து வரவிருந்த 'குறூப்' இப்பொழுது "எயார்ப்போட்'டிற்கு வந்திருக்கிறார்கள், அவர்களை அழைத்து வரப் போகிறேன். ஆனால் உன்னுடன் இங்கு தங்க வைக்க மாட்டேன். மறுபடியும் இங்கு நான் வருவேன். நீ நடந்து கொள்ளும் முறையில்தான் உன் எதிர்காலமே தங்கியிருக்கிறது. இன்னுமொன்று நன்றாக ஞாபகம் வைத்துக்கொள்! இங்கு நடந்ததை யாருக்காவது சொல்ல முற்பட்டால் நீ சுவிற்ஸர்லாந்து போக மாட்டாய்...?" என்று சொல்லிவிட்டு கதவைத்திறந்து கொண்டு மரியதாஸ் வெளியேறிப் போனார்.

எழுந்து போய் கதவை மூடிவிட்டு வந்த பிரியந்தி "ஐயோ!" என்று கதறி கட்டிலிலே விழுந்தாள்.

'தந்தையைப் போல் பாதுகாப்பாக இருக்க வேண்டிய மிருகம், இப்படி நடந்து கொள்கிறதே. இனி இங்கே எனக்கு யாரிருக்கிறார்கள்? என்று நினைக்க மேலும் விம்மல் பீறிட்டது. அழுதாள்.

அப்பொழுது திரும்பவும் தொலைபேசி அவளின் அழுகையை நிறுத்த வைத்தது. தயக்கத்துடன் 'ஃபோனை' நெருங்கி தூக்கினாள் பிரியந்தி.

சுவிஸிலிருந்து நிவேதன் கதைத்தான்.

தனக்கு நேர்ந்த கொடுமையையும், மனதிலுள்ள ஆதங்கங்களையும் சொல்லிச் சொல்லி பெரிதாக அழ ஆரம்பித்துவிட்டாள். மனதில் தங்கியிருந்த பாரத்தையெல்லாம் அவள் கூறி முடிக்கும் வரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான் நிவேதன். அவனும் சற்றுப்பதற்றப்பட்டுத்தான் போனான். இருந்தும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் பிரியந்திக்குத் தைரியமூட்டினான்.

"என்பிரியந்திக் குட்டிக்கு எதுவுமே நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன். அதற்கு இப்பவே ஏற்பாடு பண்ணுகிறேன்" என்று ஆறுதல் சொன்னான். அந்த இரவு பூராவும் பலதடவை 'ரெலிஃபோன்' எடுத்து அவளுடன் கதைத்துக் கொண்டிருந்தான்.

மனிதர்களில் பலர் தங்கள் கடமைகளை மீறி பல இழிவான காரியங்களில் இறங்கினாலும் இயற்கை என்பது தன் கடமைகளை என்றுமே மறந்ததில்லை. அடுத்தநாள் பொழுது புலர்ந்தது. பகல் பதினொரு மணிபோல் பிரியந்தியைத்தேடி நான்கு பேர் வந்தார்கள். முப்பத்திரெண்டு மதிக்கத்தக்க ஓர் இளைஞனும், மூன்று பெண்களுமாக இருந்தார்கள்.

சுவிஸிலிருக்கும் தனது சினேகிதனொருவன் தொடர்பு கொண்டு தன்னை இங்கு அனுப்பி வைத்ததாகவும், தான் இங்கிருந்து ஏனைய நாடுகளுக்குப் பயணிகளை அனுப்பிக் கொண்டிருப்பதாகவும் வந்த இளைஞன் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். "நாங்களும் சுவிசுக்கும், பிரான்ஸ்சுக்கும் போவதற்காக வந்திருக்கிறோம். இவர்தான் எங்களுக்கு ஏஜென்சியாக இருக்கிறார்," என்று அந்த மூன்று பெண்களும் ஒட்டுமொத்தமாகச் சொன்னார்கள்.

அவர்களின் வருகைபற்றி நிவேதனும் ஏற்கனவே பிரியந்திக்குச் சொல்லியிருந்தான். ஆதலால் தன் பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அவள் அவர்களுடன் புறப்பட்டுச் சென்றாள்.

நான்கு நாட்கள் வரை அந்தப் புதிய ஏஜென்சியின் ஏற்பாட்டில் பிரியந்தி தங்கியிருந்தாள். அங்கு அவளைப் போலுள்ள மற்றப்பெண்கள் அந்த ஏஜென்சிக்காரரைப் பற்றி நல்லவிதமாகவே சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது நிச்சயமாகவும், உண்மையாகவும் பிரியந்திற்குப் புலப்பட்டது.

அந்தப் புதிய ஏஜென்சிக்காரர் சொல்லியிருந்தபடி சரியாக ஏழாம் நாள் விமானமேறினாள் பிரியந்தி. 'மரியதாஸ் போன்ற வல்லூறுகளுக்கு மத்தியிலும் இப்படிச் சில நல்ல மனிதர்களான முகவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்' என்று எண்ணியவளாய் அவள் பயணப்பட்டுக்கொண்டிருந்தாள். ■


படிப்பகம்

# இலக்கிய நயம்

# மருதநாயகம்



பிரஞ்சுப் பேரழகியின்
கட்டழகில்
மயங்கிப் போனான்
மருதநாயகம்!

அவள் மகிழ்வதற்காகவே
பிரஞ்சுக்காரர்களுக்காக
களம் பல கண்டான்!

"மருதநாயகம் நில்!
அந்நியனுக்காக
தாயகத்தை
துகிலுரியலாமா?"

எந்தக் கேள்வியும்
அவன் செவியில்
ஏறவில்லை!

அவள் அழகும்
புன்னகைப் பொழிவும்
நெஞ்சுக்குள்
போதையாக நிறைந்தது!

அவள் என்ன
சொன்னாலும்
அவன் நம்பினான்!

அவள் என்ன
சொன்னாலும்
அவன் ஆடினான்!

"உன் தாயகத்தை
உடனே சுடுகாடாக்கு"
என்று உத்தரவிட்டிருந்தாலும்
மறுப்பே இல்லாமல்
பொறுப்பு ஏற்றிருப்பான்!"

பிரஞ்சுக்காரர்களை
எதிர்த்துக் கிளம்பியோரை
போரிட்டு அடக்கினான்!

உருவிய வாளில்
உடன்பிறந்தார் இரத்தம்!

சீவிய தலைகள்
சொந்த மக்களுடையவை!

எல்லாமே ஒரு
பெண்ணின் புன்னகைக்காக!

உதடுகளால்
ஊட்டி விடுவாள்!

கட்டித்தழுவி கால்களால்
அவனை பிணைப்பாள்!

நெற்றியில் தொடங்கி
உள்ளங்கால்வரை
முத்தத்தால் நனைப்பாள்!

உதடுகளின் ஸ்பரிசம்
உடலெங்கும் புல்லரிப்பு!

மாய மோகினியின்
மதன பாணங்கள்!

மார்பை பிளக்கிறது
மார்பெழில் இரண்டும்!

மனதை துளைக்கிறது
மதன பாடம்!

மருதநாயகம் தன்னை
மறந்தான்!
மருதநாயகம் தன்
மக்களை மறந்தான்!
மருதநாயகம் தன்
மண்ணை மறந்தான்!

ஒரு நாள்,
பிரஞ்சு ஆக்கிரமிப்பாளர்கள்
மருதநாயகத்தையே
மறந்து போனார்கள்!

அவமதிப்புக் கண்டு
மருதநாயகம்
வெகுண்டெழுந்தான்!

வெள்ளையர் பக்கம்
விரைந்தான்!

பிரித்தாளுவதில் வல்ல
பிரிட்டிஷ் ஆதிக்கம்
தமிழ்நாட்டை சூறையாட
தமிழ்நாட்டவனையே
தத்தெடுத்துக் கொண்டது!

மருதநாயகம் அல்லது
கான்சாகிப்!

அவன் பெயரைக் கேட்டாலே
சொந்த மக்கள்
மனம் நொந்தார்கள்!

அடிமையின் சேவகத்தை
அந்நியர் மெச்சினர்!

"தமிழ் நாட்டின்
மாணிக்கம் நீதான்!
ஏன் மன்னனே
நீதானே!"

புகழ்ச்சிகள் எல்லாம்
மறைமுக கேலிகள்
என்பது
மருதநாயகத்தின்
புத்தியில் ஏறவில்லை!

பூரித்துப் போனான்
புஜம் தட்டினான்!

"சுதந்திரம் என்ன
சுதந்திரம்?-அது
வெட்டிப்பேச்சு!
வெள்ளையர்கள்
சொர்க்கத்தையே
தரப்போகிறார்கள்!"
தன் மக்களிடம்
அந்நியனை மெச்சினான்!

மதுவில் நீந்தினான்
மங்கையில் தூங்கினான்!

வெள்ளையர்கள்
அவன் விரும்பியதை
விநியோகித்தனர்!

'என்ன பதவி
வேண்டும்?
எடுத்துக்கொள்!'

'எங்களுக்கு உதவி
வேண்டும்
தந்துகொண்டேயிரு!'

இறுதியாய் ஒரு நாள்
மருதநாயகம்
கண் திறந்தான்!

அந்நியர் கையில்
அம்பாக இருந்தவன்
சோதரர் அணியில்
அங்கமாக மாறினான்!

மருதநாயகம் என்றும்
கான்சாகிப் என்றும்
அழைக்கப்பட்டவன்
வெள்ளையருடன்
பொருதும் நாயகமானான்!

"மருதநாயகத்தை
உயிரோடு அல்லது
பிணமாக
பிடித்துவாருங்கள்!"
வெள்ளையர் தளபதி
ஆணையிட்டான்!

மருதநாயகத்தின்
வாள் பேசியது!
வெள்ளையர் படையின்
உயிர்களை
கொள்ளையடித்தது!

பிரித்தாளும் வெள்ளையர்
தமிழர்கள் சிலரை
சில்லறை விலைக்கு
வாங்கி வைத்திருந்தனர்!

அந்தச் சில்லறைகள்
மருதநாயகத்திற்கு
கல்லறை கட்டுவதற்கு
மேலதிகமாகவும்
சில்லறை பெற்றன!

எங்கே? எப்படி?
அந்த வீரனை
பொறிவைத்து பிடிக்கலாம்?
மோப்பம் பிடித்து
தகவல் கொடுத்தனர்!

சூழ்ச்சி வென்றது.
தடயம் அறிந்து முற்றுகை!
மருதநாயகம் படை
பொறிக்குள் வீழ்ந்தது!

இறுதிவரை போரிட்டான்
மருதநாயகம்!
இறுதியில் சிறைப்பட்டான்!

"நீ எங்களுடனேயே
இருந்திருக்கலாம்!
ராஜாவாக இருந்திருப்பாய்!"
தளபதி கொக்கரித்தான்.

"எதிரியின்
நண்பனாக இருப்பதைவிட
எதிரியாக
இருப்பதே மேல்!"
மருதநாயகம் முழங்கினான்!

"நீ மிக மோசமானவன்
மோசடிக்காரன்!"
தளபதி சீறினான்

"இப்போதுதான்
எனக்கு சந்தோசம்!"
என்றான் மருதநாயகம்!

வெள்ளைத் தளபதியின்
புருவம் வினாக் குறியானது.

"எதிரியால் புகழப்பட்டால்
என் கொள்கையில்
நான் உறுதியாக
இல்லையென்று அர்த்தம்!"

எதிரியால் இகழப்பட்டால்
அவனுக்கு
நான் உண்மையான
எதிரியாக இருக்கிறேன்
என்பதற்கு எடுத்துக்காட்டு!

"உங்களுக்கு எதிரியாக
இருப்பதில் மகிழ்ச்சி!
இனி என் தலைமுறையை
என் மக்கள் மன்னிப்பார்கள்!"
என்றான் மருதநாயகம்.

"எதற்கு மன்னிப்பு?"
என்றான் வெள்ளையன்.

"எவன் ஒருவனையும்
ஆராயாது தெளிந்தால்
தெளிந்தவனுக்கு மட்டுமல்ல
அவன் தலைமுறைக்கும்
தீராத துன்பம் வரும்!"

ஆராய்ந்து தெளிந்ததால்
என் எதிரிகளை
இனம் கண்டுவிட்டேன்!
இனி என் தலைமுறையை
துரோகிகளின் வாரிசுகளாக
வரலாறு தூற்றாது!
மருதநாயகம் வீரன்
என்று போற்றப்படுவான்!
அவன் வரலாறு பேசப்படும்!
மருதநாயகம் புன்னகைத்தான்!

**"தேரான் பிறனைத் தெளிந்தான் –வழிமுறை
தீரா இடும்பை தரும்"**

அதிகாரம்: 51, குறள்: 508.

## தருவது ரசிகன்

---

# சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா! சம்பத்திய இராணுவ நடவடிக்கையால் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தும் தமிழ்க் கட்சிகள் வாயே திறக்கவில்லையே?**

எஸ். சுந்தரம், கொழும்பு-08.

*வன்னியில் என்ன தேர்தலா நடக்கப் போகிறது? வன்னி மக்கள் வாக்களிக்கவா போகிறார்கள்? அல்லது இதனைக் கண்டித்தால் ஆள்வோரின் பார்வைக்கு போட்டோ பிரதி செய்து அனுப்பவா முடியும்?*

○●

**★ பத்திரிகைகளை அதிகம் படிப்பவர்கள் யார்?**

சோ. முகுந்தன், மட்டக்களப்பு.

*ஜப்பானியர்கள்! ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 7 கோடியே 30 இலட்சம் நாளிதழ்கள் விற்பனையாகிறதாம். இது 'யுனேஸ்கோ' வெளியிட்ட தகவல். ஜப்பானின் சனத்தொகை- பன்னிரண்டரைக் கோடி; எழுத்தறிவுள்ளோர் தொகை 99 வீதம்.*

○●

**★ எஸ்.ஏ. சந்திரசேகரன் இயக்கும் படத்தில் விஜயகாந்த்துடன் விஜய் நடிக்கமாட்டாரா?**

ஏ. புவனேஸ்வரன், நீர்கொழும்பு.

*படத்திற்கு பெயரும் சூட்டி விட்டனர். 'பெரியண்ணா'. விஜய் கிடையாது. சூர்யா நடிக்கிறார்.*

○●

**★ சிந்தியா! பாலியல் வல்லுறவில் ஈடுபடுவோரின் ஆண்மையை வெட்ட வேண்டும் என்று நடிகை ரேவதி கூறியதை நீர் ஏற்கிறீரா?**

செல்வி கு. நர்மதா, வவுனியா.

*களவெடுத்தால் கையை வெட்டுகிறார்கள் சில நாடுகளில்! களவைவிட கொடூரம் பாலியல் வல்லுறவு! ஆகவே நான் ரேவதி கட்சி!*

○●

**★ வரம் கொடுப்பவன் தலையிலேயே கை வைக்கும் மனிதர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

எஸ். சியாம், திருமலை.

*முனிவர்களே அப்படித்தானே இருந்திருக்கிறார்கள்! இந்தக் கதையைக் கேளுங்கள்:*

*ஒரு மனிதன் கடுமையான வறுமையில் வாடினான். இனிமேலும் தாங்க முடியாது என்ற நிலையில் தற்கொலை செய்வதற்காக ஒருமலை உச்சிக்குச் சென்றான்.*

*குதிக்கத் தயாராகும்போது சர்வசக்தி படைத்த ஞானி ஒருத்தர் அங்கு வந்தார். தடுத்து நிறுத்தி காரணத்தை விசாரித்தார். அவன் தன் வறுமையைக் கூறினான்.*

*உடனே ஞானி ஒரு செங்கல்லை எடுத்து தன் விரலால் தொட்டார். செங்கல் தங்கக் கட்டியாகியது.*

*"இதைக் கொண்டுபோய் உன் வறுமையைப் போக்கு!" என்றார் ஞானி.*

*ஏழை மனிதனுக்கு திருப்தி ஏற்படவில்லை. முகம் வாட்டமாக இருந்தது.*

*பரிதாபப்பட்ட ஞானி அப்பக்கமாக வந்த யானையை நோக்கி தன் விரலை நீட்டினார்.*

*யானை பொன் சிலையாக மாறியது. அந்தச் சிலையை எடுக்குமாறு ஞானி கூறினார். அப்போதும் அந்த மனிதனுக்கு திருப்தி வரவில்லை.*

*"இன்னும் என்ன வேண்டும்?" என்று கேட்டார் ஞானி.*

*அவன் கேட்டான்:*

*"உங்கள் விரல்!"*

○●

**★ புலிகளுடன் பேச்சு நடத்துமாறு எதிர்க்கட்சி கோருகிறதே, அரசு பரிசீலிக்குமா?**

எம். யோகா, பம்பலப்பிட்டி.

*தனக்குப் பிரியமானதைச் சொன்னால் மட்டுமே ஆளும் கட்சி பரிசீலிக்கும்! தீர்வுப் பொதிக்கு கருத்துக் கேட்கும் அரசு, யுத்தம் பற்றிய எதிர்க்கட்சியின் கருத்தையும் கேட்கலாமே!*

○●

**★ சிந்தியா! எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப சிலர் பாடிக்கொண்டிருக்கிறார்களே?**

வி. சந்திரசேகர், வவுனியா.

*அதே பாடகர்கள் ரணிலை 'தேசத் துரோகி' என்று ஆளும் தரப்பினர் வர்ணித்தபோது எங்கே போனார்கள்? ஆளும் கட்சி எதிர்க்கட்சியை அனுசரித்துப் போவதற்கான அறிகுறியே இல்லாதபோது, ஐக்கிய தேசியக் கட்சியை மட்டும் இடித்துக் கொண்டிருப்பது என்ன நியாயம்?*

○●



விஜய்

**★ சுவர்க்கம் என்றால் எப்படி இருக்கும்?**

சி. சூரியகலா, மாத்தளை.

*கமராவைத்து படம்பிடித்தெல்லாம் காண்பிக்க முடியாதம்மா!*

*இத்தாலி நாட்டில் புகழ்பெற்ற கவிஞரான டேனன்சியோவுக்கு கடிதம் ஒன்று தபாலில் வந்தது.*

*இத்தாலியின் மிகச் சிறந்த கவிஞர் என்று கடித உறையில் எழுதப்பட்டிருந்தது.*

*அதைப் படித்த கவிஞர் கடிதத்தை தபால்காரரிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார். ஏன் தெரியுமா?*

*"நான் உலகிலேயே மிகச் சிறந்த கவிஞர். என்னை இத்தாலியின் சிறந்த கவிஞர் என்று போட்டிருக்கிறதே!" என்றாராம்.*

○●

**★ நம் நாட்டில் நோபல் பரிசு யாருக்குக் கொடுக்கலாம்?**

ஆர். ரவிதரன், மட்டக்களப்பு.

*தமிழ்க் கட்சிகளுக்கு!-அதிகபட்ச அமைதிக்காக!*

○●



கலைஞர்

**★ தமிழ் தெரியாத கடவுள் தமிழ் நாட்டுக்குத் தேவையில்லை என்று தமிழக முதல்வர் கூறியுள்ளாரே?**

செ. விபுலானந்தன், கொழும்பு-14.

*வரவேற்கப்படவேண்டிய கூற்று! சமஸ்கிருதம்தான் கடவுளுக்குப் புரியும் என்றால், அமுதத் தமிழில் பாடப்பட்ட தேவாரம், திருவாசகம் எல்லாம் யாருக்காக? ஆகவே தமிழில் பூசை நடத்த வேண்டும் என்ற விருப்பம் நியாயமானது! இங்கும் பொருந்தும்!*

○●

**★ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடமேல் மாகாண சபையில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தது ஏன்?**

எம். இஸ்மாயில், புத்தளம்.

*அம்மையார் வேண்டுகோள் விடுப்பார் என்ற நம்பிக்கையில் முரண்டு பிடித்துப் பார்த்தனர். நினைத்தது நடந்தது. முடிவை மாற்றினர்.*

○●

**★ நடிகைகளின் தொப்புளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நிறுத்தமாட்டார்களா?**

எம். ஜெயக்குமாரி, கல்கிசை.

*பி.சி.ஸ்ரீராம்தான் தொப்புளுக்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்திய முன்னுதாரணி ஒளிப்பதிவாளர். அவர் இதற்குக் கூறிய அருமையான விளக்கம் இதோ:*

*"கவர்ச்சி என்பது மார்பகம் மட்டுமே என்று இருந்த காலகட்டம் முடிந்தது. அப்போ கமராவுக்கு எதிரே குனிந்து ஆடுவாங்க.*

*கவர்ச்சி காட்டறதுக்காகவே பெரிய மார்பகங்கள் இருக்கிற பாத்திரங்களும் படங்களில் உருவாக்கப்படுவாங்க. ஜோதிலட்சுமி, ஹெலன் மாதிரிப் பெண்கள் காணாமல் போயிட்டாங்க.*

*அந்த சூடான விஷயத்தை மென்மையாகப் பார்க்கலாமேங்கிற நோக்கத்தில்தான் இப்படி முயற்சி செய்தேன்!"*

○●



மர்லின் மன்றோ

**★ நடிகைகளால் தொடர்ந்து கவர்ச்சியில் நிலைக்க முடியுமா?**

ஏ. ஜஸ்மின், மட்டக்குளி.

*முடியும்! செத்தபின்னும் இன்னமும்கூட பித்துப் பிடிக்க வைக்கிறாரே மர்லின் மன்றோ!*

---

ஸ்போர்ட்ஸ்

# அஸார் தலைமையில் நியூஸிலாந்தில்...

அஸாருதீன் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி நியூஸிலாந்து நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. அங்கு நியூஸிலாந்துக்கெதிராக 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

45 நாட்கள் நடக்கும் இந்த குறுகிய சுற்றுப்பயணத்தில் அனுபவ ஆட்டக்காரர் நவ்ஜோத் சிங் சித்து மறுபடி சேர்க்கப்பட்டுள்ளார். ரொபின் சிங் நீக்கப்பட்டுள்ளார். இளம் பந்து வீச்சாளர் அஜித் அகார்கர் காயம் காரணமாக அணியிலிருந்து ஒதுங்க, அவருக்குப் பதிலாக ரொபின் சிங் (ஜூனியர்) அணியில் இணைந்துள்ளார்.

நியூஸிலாந்துக்குச் சென்றுள்ள இந்திய அணி விபரம்: முகமட் அஸாருதீன் (கேப்டன்), அஜய் ஜடேஜா (துணை கேப்டன்), சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி, நவ்ஜோத் சிங் சித்து, வெங்கட் லக்ஷ்மன், நயான் மொங்கியா (வி.கீப்பர்), ஜவகல் ஸ்ரீநாத், அனில் கும்ப்ளே, வெங்கடேஷ் பிரசாத், தெபஸிஷ் மொஹந்தி, ரொபின் சிங் (ஜூனியர்), ஹர்பஜன் சிங், சுனில் ஜோஷி.

சுற்றுப் பயணத்தின் மொத்தப் போட்டிகளின் விபரம்:

டிசம்பர் 18-23- முதல் டெஸ்ட்- டுனிடியன்
டிசம்பர் 26-30 2வது டெஸ்ட்- வெலிங்டன்
ஜனவரி 02-06- 3வது டெஸ்ட்- ஹமில்டன்

ஜனவரி 09- முதல் ஒருநாள் போட்டி- ஒக்லாண்ட்
ஜனவரி 12- 2வது ஒருநாள் போட்டி- ஹமில்டன்
ஜனவரி 14- 3வது ஒருநாள் போட்டி- நேப்பியர்
ஜனவரி 16- 4வது ஒருநாள் போட்டி- கிறைஸ்ட்சேர்ச்
ஜனவரி 18- இறுதி ஒருநாள் போட்டி- வெலிங்டன்.

# தொடர் தோல்விகள்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சமீப காலங்களில் மோசமான அளவில் தோல்விகளைச் சந்தித்து வருகிறது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களைத் தனது சொந்த மண்ணிலேயே இழந்தது. மினி உலகக் கிண்ணப் போட்டியிலும் முதல் போட்டியிலேயே தோற்றது. அண்மையில் தனது மண்ணில் ஸிம்பாப்வேயிடம் முதல் டெஸ்ட்டில் தோற்றது.

இந்தத் தொடர் தோல்விகளுக்குக் காரணம் கேப்டன் அமீர் சொஹைல் எனப் பரவலாகக் கருத்துக்கள் கூறப்படுகின்றன.

எனவே பாகிஸ்தான் அணி கேப்டன் பதவியில் இருந்து அமீர் சொஹைலை நீக்க வேண்டுமென்று முன்னாள் வீரர்களும், இந்நாள் வீரர்களும் மறைமுகமாகக் கூறி வருகின்றனர்.

இதன் காரணமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சொஹைலை கேப்டன் பதவியில் இருந்து நீக்க முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. இந்நிலையில் புதிய கேப்டனாக விக்கெட் கீப்பர் மொய்ன் கானை நியமிக்க வேண்டும் என முன்னாள் கேப்டன் வாஸிம் அக்ரம், சயிட் அன்வர், இன்ஸமாம்-உல்-ஹக் உட்பட பல பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் விருப்பம் தெரிவிக்கின்றனர்.

எனவே பாகிஸ்தான் கிரிக்கெட் கேப்டனாவதற்குரிய வாய்ப்புக்கள் மொய்ன் கானுக்கு அதிகமாக உள்ளன.

# சச்சின் தெரிவு



'கேஸ்ட்ரோல்' நிறுவனம் 1997-98ம் ஆண்டிற்கான சிறந்த இந்திய கிரிக்கெட் வீரராக சச்சின் டெண்டுல்கரைத் தேர்ந்தெடுத்தது. அண்மையில் அவருக்கு இந்த விருது வழங்கும் விழா மும்பையில் நடந்தது.

விழாவில் கலந்துகொண்டு டெண்டுல்கர் பேசுகையில்:

"உலகக் கோப்பையைக் கைப்பற்றுவதே எனது அடுத்த குறிக்கோள். நான் மட்டுமன்றி அணியினர் அனைவரும் இதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம். நமது மக்களின் ஆசியோடு எங்கள் குறிக்கோளை நிறைவேற்றுவோம்," என்று கூறியுள்ளார்.

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 39

## அரியணை ஏறும் உரிமை?

இராஜகுமாரன்

ஆண்டவருடைய கட்டளைக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டியது அரசனின் கடமை. அக்கட்டளைகளை மக்கள் அனைவரும் கடைப்பிடிக்கத் தூண்டுகோலாக விளங்க வேண்டியவனும் அரசன்தான். மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியதும் மன்னரின் பொறுப்பு. வேலியே பயிரை மேய்ந்தது போல், மன்னர் தாவீது, இரு பெருங் குற்றங்களைச் செய்தார். தன்னுடைய படைகளில் ஓர் அதிகாரியாகவிருந்த உரியாவின் அழகிய மனைவியைத் தன் இச்சைக்கு ஆளாக்கினார். அவள் கணவனை வஞ்சகமாகக் கொன்றார். இவ்விரு பாபச் செயல்களுக்காகவும் மன்னர் தாவீதுக்குத் தண்டனை வழங்க ஆண்டவர் நினைத்தார்.

ஆண்டவரின் இறைவாக்கினரான நாத்தான், தாவீது மன்னரின் அரண்மனைக்கு வந்தார். தக்க உபசாரத்துடன் மன்னர் தாவீது நாத்தானை வரவேற்றார். நாத்தான் தாவீதிடம் ஒரு கதை கூறினார்:

"ஒரு செல்வந்தனிடம் பல நூற்றுக்கணக்கான ஆடுகள் இருந்தன. அதே ஊரில் ஓர் ஏழை இருந்தான். அவனிடம் ஆக ஒரே ஒரு ஆட்டுக்குட்டி மட்டுமே இருந்தது. அக்குட்டி, அந்த ஏழையின் குழந்தைகளுடன் தானும் ஒரு குழந்தையைப் போல் பழகியது. குழந்தைகளுடனே உண்டு- உறங்கி செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது.

செல்வந்தனைத் தேடி ஒரு நாள் ஒரு விருந்தாளி வந்திருந்தான். அவனுக்கு விருந்து கொடுக்க, செல்வந்தன் தன்னிடமுள்ள ஓர் ஆட்டை அடித்து உணவு தயாரிக்க கருதாமல், அந்த ஏழையின் ஆட்டை பலாத்காரமாகப் பிடுங்கி எடுத்து, உணவு தயாரித்து வந்திருந்தவனுக்கு விருந்தளித்தான்..."

நாத்தான் இவ்வாறு கதையைக்கூறி முடிப்பதற்கு முன்னரே தாவீது துடித்தெழுந்தார். "இத்தகைய அநியாயச் செயல் எங்கே நடந்தது? அந்தச் செல்வந்தனை உடனடியாகக் கொல்ல வேண்டும். அந்த ஏழைக்கு அந்தச் செல்வந்தனிடமுள்ள ஆடுகளில் பலவற்றை எடுத்துக் கொடுத்துவிடவேண்டும்!" என்று மன்னர் சினங்கொண்டு சீறினார்.

நாத்தான் சிரித்தார்.

"மன்னா! அந்தச் செல்வந்தன் வேறு யாருமல்ல; நீரேதான்! அந்த ஏழைதான் உன் படையில் ஓர் அதிகாரியாகப் பணிபுரிந்து, உம்மால் வஞ்சகமாகக் கொலை செய்யப்பட்ட உரியா. இப்பொழுது புரிகிறதா நீர் செய்த பாபச் செயலின் பெறுமதியை...?"

நாத்தான் கற்பனைக்கதை போலக் கூறிய கருத்துக்கள் தாவீது மன்னரின் உள்ளத்தை உறுத்தியது. தரையில் வீழ்ந்து அழுது புலம்பினார். மாபெரும் பாதகச் செயல்களைப் புரிந்துவிட்டமைக்காக மனங்கலங்கி அழுதார்.

"ஆண்டவரே! நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து மக்களுக்கு நல்வழி காட்டவே நீர் என்னை மக்கள் தலைவனாகத் திருப்பொழிவு செய்தீர்! ஆனால் நானோ கீழான ஆசைகளுக்கு இடங்கொடுத்து அநியாயம் புரிந்து விட்டேன். என்னை மன்னித்தருளுங்கள் கர்த்தரே!"

### தண்டனை கிடைக்கும்!

மன்னர் மனம் விட்டு அழுதார்.

ஆண்டவரின் திருவுள்ளத்தை அறிந்து அவருடைய வாக்கினைக் கூற வந்த நாத்தான், தாவீதைப் பார்த்து, "மன்னவா! நீர் புரிந்த பாபச் செயல்களுக்குரிய தண்டனையை இயல்பாகவே நீர் அனுபவித்தே தீரவேண்டும். கர்த்தர் உன் உயிரை இப்பொழுது பிரிக்க மாட்டார். ஆனால் நீர் பெருவிருப்போடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்-உன் ஆசை நாயகி பத்சோபாவுக்குப் பிறக்கப்போகும் குழந்தை உயிர் வாழ முடியாது. எப்படியோ பத்சோபாவும் உம்முடைய பாபச் செயலுக்கு உடந்தையாக இருந்தமையினால் அவளும் தன் குழந்தையைப் பறி கொடுத்து வருந்தியேயாக வேண்டும்!"

இறைவனின் திருவார்த்தைகளை மன்னர் தாவீதிடம் உரைத்துவிட்டு நாத்தான் சென்று விட்டார். தாவீது ஆண்டவரைப் பிரார்த்தித்து உண்ணா நோன்பிருந்தார். அரச போகம் அனைத்தையும் துறந்தவராகத் தனியானதோர் இடத்தில் தரையில் கிடந்தார்.

உரிய வேளையில் பத்சோபா அழகிய ஆண் குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தாள். ஆனால் ஏனைய குழந்தைகளைப் போல் அக்குழந்தை நலமாக இருக்கவில்லை. எப்போதும் நோய்வாய்ப் பட்டுத் துன்பப்பட்டது. பிறந்து ஏழாவது நாளன்று அக்குழந்தை இறந்தது.

ஆண்டவர் தங்களுக்குரிய தண்டனையை வழங்கி விட்டார் என்பது உறுதியாகிவிட்டது. சில நாட்களில் கவலை மறைந்தது. பத்சோபாவுடன் மன்னர் தாவீது மகிழ்ச்சியாக இருந்தார். அவளும் மீண்டும் கருவுற்றாள். ஆண் குழந்தைதான் பிறந்தது. சாலமோன் என்று பெயரிட்டனர்.

### அப்சலோம்

தாவீது மன்னருக்கு மனைவிமார் பலர். பலபிள்ளைகளும் இருந்தனர். இவர்களுள் அப்சலோம் என்பவன் மிகவும் அழகானவன். தாவீது மன்னனின் மூத்த குமாரனும் அப்சலோமே. தனது சகோதரர்களுள் ஒருவனான அம்னோன் இழைத்த குற்றத்துக்காக, அம்னோனை அப்சலோம் கொன்றுவிட்டான். இதற்காகத் தன் தந்தை தன்னைத் தண்டிப்பார் என்ற பயத்தினால் எருசலேமைவிட்டு அப்சலோம் தப்பியோடி விட்டான். தொடர்ந்து மூன்று ஆண்டுகள் அப்சலோம் எருசலேமுக்கு வரவில்லை. கெசூர் என்ற ஊரில் இருந்தான்.

மூன்று ஆண்டுகளின் பின்னர் அப்சலோமை மன்னர் தாவீது எருசலேமுக்கு வரவழைத்தார். இருப்பினும் தன் கண்களில் படக்கூடாது என்று கூறியிருந்தார். எருசலேமிலிருந்தும் அரண்மனை சென்று தன் தந்தையைப் பார்க்க முடியாத நிலையில் இருந்தமையினால், அப்சலோம் மன்னர் மீது கோபமுற்றிருந்தான். இரு வருடங்களின் பின்னர் தன் மகனைத் தன்னிடம் அழைத்து அவன் மீதிருந்த பகையை மறந்தார் மன்னர்.

இதற்கிடையில் இஸ்ரயேல் மக்கள் மத்தியில் அப்சலோம் தன்னுடைய செல்வாக்கை வளர்த்துக் கொண்டான். ஒவ்வொரு நாளும் காலை வேளையில் அரண்மனை வாயிலில் போய் தன் தோழர்கள் சிலருடன் நின்று கொள்வான். இயல்பாகவே மிக அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்த அப்சலோம் மீது- மன்னன் மகன் என்பதனாலும்- மக்கள் அன்பும் மரியாதையும் காட்டினர். ஏதாவது பிரச்சனைகளுடனோ வழக்கு விவகாரங்களுடனோ எவராவது மன்னரைக் காண அரண்மனை வந்தால், அவர்களை வலியச் சென்று விசாரிப்பான். அவர்களுடைய பிரச்சனைகளைக் கேட்டறிவான். பிரச்சனைகளுக்கான தீர்வையும் கூறிவிடுவான். இவ்வாறு செய்வதனால் மக்களிடம் செல்வாக்கு அதிகரித்தது.

அப்சலோம் ஒருநாள் மன்னரிடம் சென்று தான் ஆண்டவருக்கு நேர்த்தி செலுத்த வேண்டியிருப்பதால் எபிரோன் சென்றுவர அனுமதி கோரினான். அரசரும் அனுமதி அளித்தார். ஏற்கனவே மக்கள் மத்தியில் தான் பெற்று வைத்திருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, தானே இஸ்ரயேலரின் மன்னன் என்ற நிலைப்பாட்டை வளர்த்துக் கொண்டான்.

இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தில் சகல குலத்தலைவர்களையும் அப்சலோம் தன் பக்கம் திருப்பிக் கொண்டு பெரும்படை திரட்டிக் கொண்டு எருசலேம் நோக்கி வந்து கொண்டிருந்தான். தன்மகன் தனக்கெதிராக சூழ்ச்சி செய்வான் என்று மன்னர் கருதவேயில்லை. மன்னர் தாவீது, தனது நெருக்கமானவர்களுடனும் பரிவாரங்களுடனும் நாட்டை விட்டு வெளியேறினார்.

மன்னர் தாவீதும் பரிவாரங்களும் எருசலேமை விட்டு மறைந்தோடி விட்டனர் என்ற தகவல் அப்சலோமுக்கு எட்டியது. இதே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக்கிடந்த அப்சலோம் தன் படைகளுடன் நகருக்குள் புகுந்தான். தன்னுடைய மகனே தனக்கு எதிரியாக மாறிவிட்டமையினால் மன்னர் தாவீது பெரும் துயரடைந்தார். கண்ணீர் விட்டு அழுதார்.

### நிறைவேறாத ஆசை

எருசலேமிலிருந்த அப்சலோம், தனது தந்தையைக் கொன்று விட வேண்டும் என்று திட்டம் தீட்டினான். அவனுக்கு அறிவுரை கூறுவதற்கு, தாவீது மன்னரின் விசுவாசியும் நண்பனுமான ஊசாய் அமர்த்தப்பட்டான். எப்படியாவது தாவீதை மீண்டும் எருசலேம் கொண்டு வந்து அரியணையில் அமர்த்த வேண்டும் என்ற உள்நோக்கம் கொண்டிருந்தார் ஊசாய். அதன்படியே தாவீது மன்னன் மீது படையெடுத்துச் செல்லுவதற்கு ஊசாய் திட்டம் வகுத்துக் கொடுத்தான். ஆனால் அது தாவீது மன்னருக்குச் சாதகமானதொரு



திட்டம் என்பதை அப்சலோம் அறியமாட்டான்.

அப்சலோம் படையுடன் மோதுவதற்கு தாவீது மன்னர் தனது படைகளுக்கு உத்தரவிட்டார். எனினும், தனது மகன் அப்சலோமின் உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுமாறு தமது படைகளுக்கு அறிவுறுத்திமிருந்தார்.

போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. அக்கடும் போரில் ஏறுத்தாழ இருபதாயிரம் பேர் வரை உயிரிழந்தனர். இஸ்ரயேல் மக்கள் அப்சலோமின் படைகளை முறியடித்தனர். அப்சலோம் தப்பி ஒடினான். குதிரையில் வேகமாகச் சென்று கொண்டிருந்தபோது, தாழ்வாகப் பணிந்து கிடந்த ஒரு மரக்கிளையில் அவனுடைய உடை கொழுவிக் கொண்டது. அந்தரத்தில் தொங்கினான். அப்சோலமைத் துரத்திக் கொண்டு வந்த தாவீது மன்னனின் படை அதிகாரி, தனது ஈட்டியை அப்சலோம் உடலில் பாய்ச்சி அவனைக் கொன்றான்.

தாவீது மன்னர் தன் மகன் அப்சலோமுக்கு நேர்ந்த கதியை அறிந்து துயரடைந்தார். தனது ஆடைகளைக் கிழித்துவிட்டு மண்மீது புரண்டு அழுது புலம்பினார்.

'ஆண்டவர் என்னுடன் எப்போதும் இருக்கிறார். அவர் என்னை என் எதிரிகளிடமிருந்து காப்பார். அவர் என்னைக் கைவிடமாட்டார்!' என்று துணிவுடன் தாவீது மன்னர் எருசலேம் நகருக்கு வந்து சேர்ந்தார். மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தைச் செம்மையாக வழி நடத்திய தாவீது மன்னருக்கு வயதாகிவிட்டது. அவருடைய இறுதிக் காலம் நெருங்கி விட்டது என்பது தெரிந்து விட்டது. இதனால் அவருடைய புதல்வர்களில் எஞ்சியிருப்போரில் யார் இஸ்ரயேலரின் அரசராவது என்ற போட்டி உருவானது. தாவீது மன்னரின் மனைவியருள் ஒருவரான அகித்துக்குப் பிறந்தவன் அதோனியா. அப்சலோமுக்கு சற்று வயதில் இளையவன் இவன். தாவீது மன்னர் உடல் தளர்ச்சியடையத் தொடங்கியதும் அவருக்குப் பதிலாக தானே அரியணை ஏறவேண்டும் என்று கருதி, அதற்கான ஆயத்தங்களைச் செய்து வந்தான்.

அதோனியாவுக்கு தாவீது மன்னரின் படைத்தளபதிகளுள் ஒருவனான யோவாபு மற்றும் குருவான அபியத்தார் போன்றோர் துணை நின்றனர். தேர்ப்படை, குதிரைப்படை ஆகியவற்றையும் பயிற்றுவித்து வைத்திருந்தான்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை 37 விடை:** மீகாள், அகினோ, அபிகாயில்

**பரிசு பெறுவோர்:**

1. எஸ். சத்தியக்குமார், சவக்காலை வீதி, கல்முனை-02.
2. டொ. ஷோபிகா ஷிரோமி, 2ம் குறுக்குத் தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.
3. எம்.ஐ.எம். நகீப், கல்லலை, பொலன்னறுவை.
4. எம். இளையராஜா, பனாவத்தை, எட்டியாந்தொட்டை.
5. மேரி சாந்தினி அருளப்பு, கிழக்கிலங்கை பல்கலைக்கழகம், வந்தாறுமூலை செங்கலடி.

**திருமறை 39 வினா:-** பத்சோபாவின் குழந்தையின் பெயர் என்ன?

டிச. 19க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 39—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர் | : முஸ்லிம் காங்கிரஸ் |
| தொழில் | : அரசியல் |
| உபதொழில் | : ஆளும் கட்சிக்கு ஆதரவளித்தல் |
| பொழுதுபோக்கு | : தேசிய முன்னணி. |
| கேட்டது | : தனி மாகாணம் |
| கிடைத்தது | : பல ஆசனம். |
| விரும்புவது | : ஆளும் கட்சியுடன் சரியாசனம். |
| நம்புவது | : தலைவரின் விவேகத்தை! |
| ஆயுதம் | : ராஜினாமா மிரட்டல். |
| கொடுப்பது | : தாவி வருவோருக்கு பதவிகள். |
| சாதனை | : வளர்ச்சி |
| சமீபத்திய சாதனை | : தலைநகரில் நவீன பணிமனை. |
| சோதனை | : கொடுத்த வாக்குறுதிகளை மக்கள் மறவாதிருப்பது. |
| எரிச்சல் | : பத்திரிகை விமர்சனங்கள் |
| இலட்சியம் | : ஆட்சியில் ஐம்பதுக்கு ஐம்பது! |

---

## தவில் ~~தமிழ்~~ கட்சிகள்

**க: அப்பாடா! இப்பதான் நிம்மதி.**

மு: என்ன நிம்மதி?

**க: மாவீரர் தின டென்ஷன் ஒரு மாதிரி ஒய்ஞ்சு போச்சல்லோ.**

மு: இந்த முறை புலிகள்கூட சுருக்கமாகத்தான் அனுஷ்டித்து முடிச்சவையாம். ஆனால் கவர்மெண்ட்தான் வெகு விமரிசையாக அனுஷ்டிச்சுப் போட்டுது.



**க: கவர்மெண்ட்டே கைச்செலவு பண்ணி செய்யும்போது தாங்களும் ஏன் செலவு செய்ய வேணும் எண்டுதான் புலிகள் சுருக்கமாக எளிமையாக அனுஷ்டித்தவையோ?**

மு: சேச்சே, வன்னி தமிழ்ச் சனத்தின் கஷ்ட நஷ்டத்தை முன்னிட்டுத்தான் சுருக்கமான அனுஷ்டிப்பாம்.

**க: அதிகாரப் பரவாக்கலுக்கு ஆதரவு கிடையாது என்று ரணில் கூறிவிட்டாரல்லோ.**

மு: உண்மையைச் சொல்லி இருக்கிறார். அது நல்லதுதானே.

**க: தமிழ்க் கட்சிகள் கண்டனம் செய்திருக்கினம்?**

மு: பார்த்தீரோ, பூர்வீகக் குடிகளல்ல என்று சொன்னபோதும் திருவாய் திறக்காத ஆட்களெல்லாம் ரணிலை திட்ட வாய் திறந்திருக்கினம்.

**க: எப்பவாவது ஒருநாள் அவரும் பவருக்கு வந்தால், அவருக்கும் வக்காலத்து வாங்குவினம்.**

மு: ரணில் வெளிப்படையாகச் சொன்னது கண்டிக்கத்தக்கதல்ல, துள்ளித் துள்ளி வரவேற்கத்தக்கது.

**க: என்ன இப்படிச் சொல்லுகிறீர்?**

மு: சவ்வு மாதிரி இழுத்துக் கொண்டிருக்காமல் உண்மையைச் சொல்லிப் போட்டார். இந்தநாட்டுக்குள்ளேயே பிரச்சனையை தீர்க்க முடியவே முடியாது என்பது நிரூபணமாகிப் போச்சு.

**க: அதாகப்பட்டது...?**

மு: மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பது உறுதியாகிவிட்டது

**க: அப்படியானால் ரணிலுக்கு...?**

மு: தாங்யூ வெரிமச் சொல்ல வேணும்.

**க: அப்படியானல் தமிழ்க்கட்சிகள்?**

மு: இவை தமிழ்க் கட்சிகளல்ல, தவில் கட்சிகள்.

**க: ஏன் அப்பிடிக் கூறுகிறீர்?**

மு: அரசின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப தவில் அடிக்கும் கட்சிகள்.


**க: புலிகளை ஓரம் கட்டிப்போட்டுத்தான் பேச்சு நடத்துவோம் என்கிறார் கதிரர்?**

மு: அப்படியானால் பேச்சு நடத்தும் எண்ணமே இல்லையென்று சொல்கிறார் என்றுதானே அர்த்தம். வன்னியில் ஓரம் கட்டப்போய் ஓரம் கட்டப்பட்டு நிக்கிற நிலையைப் பார்த்தால் கதிரர் சொல்வது இந்த ஜென்மத்திலையும் நடக்கும்போல தெரியேல்லை. ■

---

## செய்தி

அரசின் தீர்வு யோசனை பற்றி பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்று கூட்டணி சம்பந்தன் 29.11.98 அன்று இலங்கை ரூபவாஹினிப் பேட்டியில் கூறியிருக்கிறார்.




**நீதிபதி: உமது கட்சிக்காரரின் பொதி ஆபத்தானதா? இல்லையா?**

சட்டத்தரணி: அதுபற்றி இப்போது முடிவு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**நீ: அதனை முடிவு செய்தால்தானே உமது கட்சிக்காரர் பற்றிய ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நாம் ஒரு முடிவுக்கு வரலாம்.**

ச: என்ன குற்றச்சாட்டுக்கள் கனம் நீதிபதியவர்களே?

**நீ: பொதியைக் காட்டிக் காட்டியே வடக்கு-கிழக்கு மக்களை பொடிப் பொடியாக்கிக் கொண்டிருக்கிறார் உமது கட்சிக்காரர் என்பது ஒரு குற்றச்சாட்டு. மேலும் பல உள்ளன. எடுத்துரைக்க நேரம் போதாது!**

ச: பொறுத்திருந்து பார்த்துத்தான் பொதி பற்றி தங்கள் மேலான கருத்தை கூற வேண்டும் என்றும், அதுவரை எனது மாண்புமிகு கட்சிக்காரரை சுதந்திரமாக, அவர் இஷ்டப்படி நடமாட தாங்கள் அனுமதிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**நீ: எதுவரை பொறுத்திருக்க சொல்கிறீர்?**

ச: 25 மாதங்களும் மூன்று நாட்களும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

**நீ: அதற்குள் ஆட்சிக்காலமே முடிந்துவிடுமே?**

ச: ஹி.ஹி.ஹி... (தலையைச் சொறிந்தபடி அசடு வழிகிறார்)

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)
www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி.வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு
436331

## இளமையில் வெல்



➘ வெற்றிக்கு அடையாளமாக விரலை காட்டு கிறார் அல்லவா. இவர் சாதாரணப் பெண்ணல்ல. உலக சாதனைப் பெண்.

உலகில் இளவயதில் சாதனை படைத்தவர் பட்டியலில், திரைப்பட நடிகைகளில் உலக சாதனைப் புகழ் இவருக்குத்தான்.

இவரது. பெயர் ட்று பாரிமூர். பதினொரு மாதக் குழந்தையாக இருக்கும்போதே தொலைக் காட்சித் தொடரில் நடித்தார். 1975 பெப்ரவரி 22ம் திகதி பிறந்தவர். தனது மூன்றாவது வயதில் 'சடின்லி லவ்' (திடீர் காதல்) என்ற படத்தில் நடித்து குட்டிகையான நடிப்பால் பிரபலமானார்.

பிரபல ஹொலிவூட் இயக்குநரான ஸ்ரீவன் ஸ்பீல் போர்க்கின் E.T. என்னும் படத்தில் 7 வயதுச் சிறுமியாக நடித்து தூள் கிளப்பினார்.

தனது 14வது வயதில் தனது சுயசரிதையை எழுதி வெளியிட்டார். மிகச் சிறிய வயதில் சுயசரிதை எழுதியவர் என்ற உலக சாதனையும் சேர்ந்து கொண்டது.

இப்போது 23 வயது. மொத்தம் 37 படங்களில் நடித்துவிட்டார். கொத்துக் கொத்தாகப் புகழ். கட்டுக் கட்டாகப் பணம்.


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

## நீளச்சேலை



← ஜிங் குச்சா ஜிங் குச்சா சேலைதான் இதுவும். உலக சாதனை சேலை.

சாதாரணமாக பெண்கள் அணியும் சேலை ஐந்து முதல் ஐந்தரை மீட்டர் நீளமும், 800 கிராம் எடையும் இருக்கும்.

இங்கு காணப் படும் சேலையின் நீளம் 121 மீட்டர். எடை 8.4 கிலோ.


இச்சேலை இந்தியாவில் பெங்களூரில் தயாரானது. மகா பாரத பாஞ்சாலியின் சேலை மாதிரி நீண்டு கொண்டே போகிறது பாருங்கள்.

இந்தியாவின் 50வது சுதந்திரதினத்தை முன்னிட்டு இச் சேலையை பல மாதங்கள் வியர்வை சிந்தி உழைத்து தயார் செய்தனர்.

இந்திய தேசியக் கொடியின் மூவர்ண நிறங்கள் கொண்டதாக இச் சேலைக்கு வர்ணமிடப் பட்டது.

இதனை கின்னஸ் புத்தகத்தில் இன்னமும் பதிவு செய்யவில்லை. விரைவில் பதிவு செய்யப்பட உள்ளதாம்.

## உரம்



↓ இது நம்நாட்டு அதிசயம். முல்லைத்தீவில் காணப்படும் அதிசய கிளைப்பனை.

பண்டாரவன்னியன் ஆண்ட மண்ணில் இந்த அதிசய கிளைப்பனை அசையாமல் நிற்கிறது. சுற்றிவரை உள்ள கட்டடங்கள் இடிந்து கிடப்பது தெரிகிறதல்லவா. ஷெல்களும், குண்டுகளும் இந்த பனையின் நிமிர்வையோ, கம்பீரத்தையோ காயப்படுத்தவில்லை என்பதும் இன்னொரு அதிசயம்தான்.

உரம் பெற்ற இந்த பனை மரம்போன்றே வன்னி மக்களும் எத்தனையோ துன்பங்களைச் சகித்தும் மனதில் உரத்தோடு எதிர் நீச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பட உதவி: (கரன், விசுவமடு)

## வான் மோதல்




↑ விமானப் படை என்பது வானில் இருந்து குண்டு போட மட்டும் என்று நினைப்பது தப்பு. வானில் யுத்தம் செய்வதும் அதன் முக்கிய பணி.

வானிலிருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைகள் பல ரகங்களில் வந்துவிட்டன. எதிரி விமானத்தைக் கண்டதும் தமது விமானத்திலிருந்து ஏவுகணையை ஏவவேண்டியதுதான்.

இத்தகைய நவீன ஏவுகணைகள் அளவில் சிறியன. குறுகிய தூர இலக்கை தாக்கி அழிக்க வல்லன. படத்தில் இருப்பது அமெரிக்க ஏவுகணையான ஃபீனிக்ஸ். 200 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள எதிரி விமானத்தை துரத்திச் சென்று துவம்சம் செய்யக்கூடியது.

நம் நாட்டிலும் இவை இனி பாவனைக்கு வரக்கூடும். புலிகளிடம் வானூர்திகள் இருப்பதால் அரச விமானப் படை இவ்வாறான ஏவுகணைகளை கொள்வனவு செய்ய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் பெருமளவு கொள்வனவு செய்ய கட்டுப்படியாகாது.

## செடி ஓவியம்



← கல்லிலே கலை வண்ணம் கண்டவர்கள் பலர். ஆனால் இங்கே பாருங்கள், இந்த கில்லாடி மனிதர் செடியிலே கலை வண்ணம் கண்டிருக்கிறார்.

தனது இல்லத்தின் வெளிப்புற மதிலில் ஒரு செடியை படரவிட்டார். செழிப்பாக படர்ந்த அச் செடிகளை மத்தியில் மனித முகங்களைப் போல வெட்டினார். பாருங்கள் ஆறு முகங்கள் தெரிகின்றன. அவ்வப்போது செடிகளை கத்தரித்து உருவம் மாறுபடாமல் பார்த்துக் கொள்கிறார்.

"பயங்கர முகங்களாக இருக்கிறதே?" கேட்டால், அந்நிய கிரகங்களிலிருந்து வந்த மனிதர்களை பிடித்து பச்சைக் கொடிகளாக மாற்றி விட்டேன்" என்று தமாஷ் பண்ணுகிறார்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



டிக்கோயா கொனக்கொலையை சேர்ந்த பாலு-செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சஜிவ் பிரநாத் தனது முதலாவது பிறந்த நாளை 14.12.1998ல் கொழும்பு தெமட்டகொட இல்லத்தில் மிக சிறப்பாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார்கள், புளியாவத்தை பரமநாதன் குடும்பத்தினர்கள், ஸ்டெதன், பெரியம்மா, பெரியப்பா, ஆச்சி, சித்தி, சசி, அக்காமார்கள், சத்தியா, நிஷா, பிரியா, அண்ணா, கிசோ, சின்ன ஆச்சி, சந்திரா, ரட்னகிரி, பெரியப்பா, பெரியம்மா, அக்கா, உஷா அண்ணா நிரஞ்சன்,

**சஜிவ் பிரநாத்** **14.12.98**

ரட்ணபுர மாமா(சேகர்), வெள்ளவத்தை மாமா கனகராஜ், வவுனியா ஜெயராம் மாமா குடும்பம், சுந்தர்ராஜ் மாமா குடும்பம், மீனா மாமி குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் முருகன் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு ... படிப்பகம் ... டிசம்பர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.